ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

GB 0.70p
# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 8 | 15 – 21 மே 2002 | முழக்கம்: 383

FORWARD
CONSULTANTS
-CONSULTING FOR PEOPLE,
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT
ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

## வன்னி மீது வேவு விமானங்கள்

# ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு புலிகள் எச்சரிக்கை

வன்னி வான்பரப்பில் சிறீலங்கா விமானப்படையினரின் தானியங்கி உளவு விமானங்கள் உளவு நடவடிக்கையில் ஈடுபடுவது ஆத்திரமூட்டும் நடவடிக்கை எனப் புலிகள் எச்சரித்துள்ளனர். இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் விடுதலைப் புலிகள் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட்டுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இது தொடர்பான கடிதத்தை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பொதுமக்கள் வாழும் பகுதிகளின் மேலாக ஆளில்லாத உளவு விமானங்கள் பறப்பது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு விடுதலைப் புலிகள் கொண்டு வந்துள்ளனர்.

யுத்த காலத்தில் இத்தகைய உளவு விமானங்களின் பறப்பு நிலப் பரப்பைக் கண்காணிப்பதாக மட்டும் இல்லாது வான் தாக்குதல்களின் முன்னோடி நடவடிக்கையாகவும் இருந்தது. தற்போது உளவு விமானங்கள் பறப்பது அத்தகைய நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டதாக இருக்குமோ எனத் தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலையடைகின்றனர் எனத் தெரிவித்துள்ள புலிகள், இந்த வான் கண்காணிப்பு, யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும். இனிமேலும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்வது நம்பிக்கையை வளர்க்க ரணில் அரசு மேற்கொண்டுள்ள முயற்சியைச் சீர்குலைக்கும் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தவிர்த்து தமிழ்ப் பிரதேசங்களில் அமைதியும் இயல்பு நிலையும் பேணப்பட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அரசுத் தரப்பிடம் வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனவும் புலிகளால் கோரப்பட்டுள்ளது.



தமது நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கையாக இல்லை விடுதலைப் போராட்டமாகவே புலிகள் நோக்குகின்றனர்

CNN செவ்வியின் தொகுப்பு

(☞ 14ம் பக்கம்)

# கொழும்பு நகரப் பாதுகாப்பினைப் பலப்படுத்த ரணில் அவசர உத்தரவு

## இராணுவத்தின் தயார்நிலையை மாரப்பன பார்வையிடுகிறார்

தற்போது அமுலில் உள்ள இணக்க உடன்பாட்டிற்கு முரணாக வன்னி மற்றும் பிற தமிழர் பகுதிகளில் சிங்களப் படையினர் வேவு மற்றும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இந்நடிவடிக்கைகளை புலிகள் கடுமையாக எதிர்த்துள்ள நிலையில் சிறீலங்கா அரசும், படைகளும் தமது போர் நடவடிக்கைகளைப் பலப்படுத்த முற்படுகின்றனர் எனக் கொழும்புச் செய்திகள் விபரம் தருகின்றன். இதன் ஒருகட்டமாக கொழும்பு நகரின் பாதுகாப்பை உடனடியாகப் பலப்படுத்துமாறு சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முப்படைகளுக்களின் கூட்டுத் தளபதிக்கு அவசர உத்திரவிட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தகவல் தருகின்றன. புதிய உத்தரவுகளின் பின்னர் கொழும்பு நகரின் மூன்று பொலிஸ் உயரதிகாரிகளின் தலைமையில் திங்களன்று சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு நிலைமைகள் ஆராயப்பட்டுள்ளன.

அதேவேளையில் சிறீலங்காவின் இராணுவ அமைச்சர் திலக் மாரப்பன தென்தமிழீழத்தின் பிரதான இராணுவ முகாம் அமைந்துள்ள மதறு ஓயாப் பகுதியினிற்குச் சென்று அங்கு இடம்பெறும் இராணுப் பயிற்சிகளை நேரடியாகக் கண்காணித்துள்ளார். மேலும், இத்தகைய பயிற்சிகளை யாழ். குடாநாட்டின் சிங்களத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஏற்பாடு செய்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

அமுலில் உள்ள போர் நிறுத்த உடன்படிக்கையின் பல விதிகளை அமுல்படுத்த மறுக்கும் சிங்களப் படையினர் புலிகளுடன் மீளப் போர் ஆரம்பமாகுமாயின் அதற்கு ஈடுகொடுக்க தம்மை தயார்ப்படுத்துவதாக இதற்குக் காரணம் கூறி வருகின்றனர். எனினும், எதிர்வரும் மே இறுதிவாரத்தின் பின்னர் உருவாகவுள்ள புதிய சூழலை எதிர்கொள்ளவே இவ்வாறு

(☞ 02ம் பக்கம்)



புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில், எரிமலையாகக் காட்சிதரும் திருமலைக் கடல்.

(☞ 12ம் பக்கம்)

# தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவு நிலவுகின்றது

## – புலிகள் மீதான தடையை நீடிக்க டில்லி விளக்கம் –

தமிழீழம் கோரி புலிகள் நடாத்தும் போராட்டம் தமிழ்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்கின்ற காரணத்தைக் காட்டி புலிகள் மீதான தடையை இந்திய அரசு மேலும் இருவருடங்களுக்கு நீடித்துள்ளது. அது தொடர்பான அறிவிப்பு இன்று டில்லியில் வெளியிடப்பட்டது.

புலிகளின் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு தமிழ்நாட்டில் இன்னமும் தனிநாடு கோரும் இயக்கங்கள் உள்ளதாகக் கூறும் இந்தியா, தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் புலிகள் மீதான தடை தொடர்வதற்கான சூழல் நிலவுதாகக் கருதுகின்றது எனவும் கூறியுள்ளது.

தமிழினி
TAMILINI Cash and Carry
பல்பொருள் அங்காடி
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8843 9429
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIE ROTSUD
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137
Dörtmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356

டென்மார்க்: EELA MURASU
P.O.Box 65 .
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
P.O Box 187,
Rosana,
Victoria 3084,
Australia.
Tel: (613) 9457 6347
Fax: (613) 9440 7367
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave.,
P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4

குறிப்பு
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த

# தமிழ்ப்பாடசாலைகளிலிருந்து வெளியேற முடியாது உடன்படிக்கைக்கு சிறீலங்கா முட்டுக்கட்டை

குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகளிலிருந்து படைகளை விலக்கிக்கொள்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் இதனால் தற்போது படையினர் தங்கியுள்ள 32 பாடசாலைகளில் இருந்து அவர்களை உடனடியாக விலக்குவது சாத்தியமான விடயம் அல்ல எனவும் சிறீலங்காப் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. படை உயர் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாடு கடந்த திங்களன்று யாழ். சுபாஸ் விடுதியில் இயங்கும் 51ஆவது படையணியின் அலுவலகத்தில் நடைபெற்றது. பாடசாலைகளில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றி அந்த மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது. அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன் படிக்கையின் விதிகளின் கீழ் பாடசாலைகளில் இருந்து படைகள் விலக்கிக்கொள்ளப்படாதது குறித்து குற்றச்சாட்டுகள் கிளம்பியுள்ள நிலையில் இம்மாநாடு நடத்தப்பட்டது.

பல பாடசாலைகள் சொந்த இடங்களில் செயற்படமுடியாத நிலை நீண்டகாலம் நீடிப்பதால் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். எனவே பாடசாலைகளை மீண்டும் பழைய இடங்களில் இயங்க அனுமதிக்கவேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வலி.வடக்கில் மட்டும் 23 பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளன என்றும் சுமார் 12 வருடங்களாக அவை செயலிழந்துபோயுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும், இப் பாடசாலைகளை இயங்கச் செய்வதில் சிக்கல்கள் உள்ளதாகவும், அது பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகுந்த விடயம் எனவும் இதன் காரணமாக அந்தப் பாடசாலைகளை உடனடியாகக் கையளிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது என்றும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளையில் வவுனியாவில் உள்ள 13பாடசாலைகளிலிருந்தும் படைமுகாம்களை விலக்க அப்பகுதி தளபதி மறுத்துள்ளார்.

## சமாதானத்தை எதிர்த்து கண்டியில் பிக்குமார் சத்தியாக்கிரகம்
### நோர்வே தூதுவரை வெளியேறுமாறு கோசம்

(14.05.02)

கண்டியில் நேற்று திங்கட் கிழமை நண்பகல் தேசிய பிக்குமார் முன்னணியைச் சேர்ந்த சுமார் 150 பிக்குகள் தலதா மாமலுவ சந்தியில் சத்தியாக்கிரகம் மௌனப் பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபட்டனர். இதற்கு முன்னதாக கண்டி கெப்பிட்டிப்பொல மண்டபத்திலிருந்து தலதா மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கைப் புலிகளுக்குக் கையளிக்கும் ரணில்-பிரபா ஒப்பந்தத்தை ரத்துச் செய், வடக்கு-கிழக்கில் வரி தூதுவரே பொய்யான சமாதானத்துக்குள் மறைந்து நின்று நாட்டைப் பிரிக்காது உடனடியாக வெளியேறு, புலிப் பயங்கவாதம் தனி ஆட்சியமைக்கும் சட்டவிரோத ஒப்பந்தத்தை ரத்துச் செய், வடக்கு-கிழக்கிலிருந்து பொலிஸ், இராணுவத்தை வெளியேற்றாதே ஆகிய பதாகைகளையும் ஏந்திச் சென்றனர். பதாகைகள் தமிழிலும், எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஊர்வலம் சென்ற பிக்குகள் மாமலுவ சந்தியில் வைத்து சத்தியப் பிரகடனம் செய்தனர். அதில் தெரிவிக்கப்பட்டதாவது: சென்ற வருடம் 2500 வரை ஒற்றுமையாக ஐக்கியமாக இருந்த ஒற்றையாட்சி முறையை ரணில்-பிரபா ஒப்பந்தம் மூலம் பிரித்தாளுவதை விலக்கிக் கொள்ள வேண்டும், நோர்வேயின் அனுசரணை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், பயங்கர ஆயுதங்களைக் கடத்தும் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது, சுயநிர்ணய உரிமை என்ற போர்வையில் தனி நாட்டுக் கோரிக்கையை நிறுத்து, நாட்டைப் பிரிக்கும் புலிகளின் ஒப்பந்தமே இந்த உடன்படிக்கை. இதனை நிறுத்து, சுயநிர்ணய உரிமை தாயகக் கோட்பாட்டை அனுமதிக்க வேண்டாம். தேசிய பிக்கு முன்னணியின் இந்த ஊர்வலத்திலும், சத்தியப் பிரகடனத்திலும் ஜனதா விமுத்திப் பெரமுன (ஜே.வி.பி.)யின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## 'உலகத் தமிழருக்கே ஒப்பற்ற தலைவர் பிரபாகரன்'
### இந்திய நிதித்துறை இணை அமைச்சர்

(14.05.02)

'உலகத் தமிழர்களுக்கே ஒப்பற்ற தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன்' என்று இந்திய நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் கூறியுள்ளார். பாண்டிச்சேரியில் நடைபெற்ற ம.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது: உலகத் தமிழர்களுக்கே ஒப்பற்ற தலைவர் பிரபாகரன். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று புதுவை, தமிழக சட்டப் பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர் என்ன பக்கத்து' வீட்டிலா இருக்கிறார்40 இலட்சம் பேரை ஒன்று திரட்டி ஈழத் தமிழர் பிரச்சினையில் தீர்வு காண முயற்சி எடுத்துள்ளார் பிரபாகரன். வரலாற்றுக் கடமையைச் செய்யும் அவரை வாழ்த்தாமல் தீர்மானம் நிறைவேற்றி வரலாற்றில் கறையைத் தேடி கொண்டுள்ளன தமிழக, புதுவை அரசுகள்.

(01ம் பக்கத் தொடர்ச்சி)

**கொழும்பு...**

தமது இராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்தி வருவதாக அவதானிக்கப்படுகின்றது. போர்நிறுத்த உடன்பாட்டில் உள்ள இராணுவ நலன்களைப் பாதிக்கும் விடயங்களில் புலிகள் கடுமையான எதிர்ப்பை தெரிவிப்பார்களாயின் அது பெரும் சிக்கலை அரசுக்கு உருவாக்கும் என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### போர் மீண்டும் வெடிக்கும்
## புலிகளுடன் உறவாடுவோரை எப்படி கவனிக்கவேண்டுமோ அப்படிக் கவனிப்போம்
### களுவாஞ்சிக்குடியில் படையினர் எச்சரிக்கை

(14.05.02)

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் உள்ளதால் இனப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக அர்த்தப்படுத்தக்கூடாது. போர் மீண்டும் வெடிக்கும். இப்போது புலிகளுடன் உறவாடுபவர்களை எப்படிக் கவனிக்கவேண்டுமோ அப்படிக் கவனிப்போம் எனக் களுவாஞ்சிக்குடிப் பகுதியிலுள்ள பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பகுதி வர்த்தகர்களைச் சந்தித்து உரையாடுகையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அறியவருகிறது. மூன்று கட்டங்களாக இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நாம் அனைவரும் உறவினர்கள், அயலவர்கள். ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டு வருபவர்கள். ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டும்.

தற்போது பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிட்டது என நினைத்து நீங்கள் நடக்க வேண்டாம். புலிகள் படை முகாம்களுக்கு அருகே வந்து நோட்டமிட்டுச் செல்வதை நாமறிவோம். ஆயுதப் பயிற்சி பெற்றோர் உங்கள் அயலில் தங்கியிருக்கலாம். ஆயுதங்களைப் பதுக்கி வைக்கலாம். இவை தொடர்பாக எங்களுக்கு நீங்கள் தகவல் தரவேண்டும். இதன் மூலம் பாரிய அழிவுகளிலிருந்து தப்பிக் கொள்ள முடியும்.

**S.M.T. Tele Movie**



உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்த நாள் மற்றும் அனைத்து மங்களகரமான
நிகழ்வுகளையும் சிறந்த முறையில் வீடியோவில்
படம்பிடித்துக் கொள்வதற்கு நீண்ட காலம்
படப்பிடிப்பில் அனுபவம் வாய்ந்தவர்களால் நவீன
முறையில் கணினி (Computer) மூலம் உங்கள்
இல்லங்களின் நிகழ்வுகளைப் பதிவு செய்து தருகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: 01 34 68 55 31 / 06 13 07 68 30

**Suramya Krishnakumaran llm solicitor**

- Residental & Commercial Conveyancing
- Commercial Leases
- Partner ship agreements
- Employment contracts
- Licensing
- Franchising
- Cival Litigation
- Landlord & Tenant

உங்கள் தேவைகளை துரித கதியில் திருப்தியுடன்
பூர்த்திசெய்து கொள்ள நாடுங்கள்

Tel: 02072248110 Fax: 020 72249711 Mobile: 07960012209

சுரம்மியா கிருஸ்ணகுமரன் LLM
Dhama Douglas
Solicitors
44 Seymour Place
London W1H 7NQ

அண்மையில் உள்ள
Tube Station:
Marble Arch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்படிக்கையில் உள்ளவை நிறைவேற்றப்படவில்லை

## தமிழ்ச்செல்வனுடன் நோர்வே கண்காணிப்புக் குழு தலைவர் சந்திப்பு

ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்கு வாரத்தில் ஏழு தினங்களும் திறந்து விடுதல், மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகளை நீக்குதல், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறுதல் போன்ற விடயங்களை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவது குறித்து விடுதலைப் புலிகளுடைய அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் றொன்ட் புறுா ஹொவ்டேயின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இவற்றை நடைமுறைப்படுத்தப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆவன செய்யவேண்டும் எனவும் தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடினார். கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது சு.ப.தமிழ்ச்செல்வனுடன், எஸ். தங்கன், புலித்தேவன், தொல்காப்பியன் ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர்.

தீவுப்பகுதிக்குப் புலிகள் சுதந்திரமாக அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்கு ஏற்பட்டுள்ள தடைகள், கடல் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் நடமாட ஏற்பட்டுள்ள தடைகள், மீனவர்கள் மீதான கடற்படையினரின் கெடுபிடிகள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் இல்லாது மீன்பிடிப்பதில் ஈடுபட ஆவன செய்தல், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறாமை என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்த நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள், அவற்றை நீக்க உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாகத் தமிழ்ச்செல்வன் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

கொழும்பு திரும்பியதும் பிரதமரைச் சந்தித்து இங்கு கலந்துரையாடிய விடயங்களைத் தெரிவித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதாகக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. பேச்சுக்களை முடித்துக் கொண்டு வெள்ளியன்று கண்காணிப்புக் குழுவினர் கொழும்பு திரும்பினார்கள்.

## ‘தோல் உரிப்பேன்’ என்று கூறுவது வெட்கப்பட வேண்டிய விடயம்

### றொனி டி மெல்

(12.05.02)

தேசிய அழிவிலிருந்து நாட்டைப் பாதுகாக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முயன்று வருகையில், தோலை உரிப்பேன் என்ற பேச்சுகள் அரசியல் தலைமையின் ஊடாக வெளியிடப்பட்டிருப்பது தொடர்பாக நாம் வெட்கப்பட வேண்டும். இவ்வாறு மாத்தளை தெவிநுவரவில் பொதுவசதிகள் பலவற்றை ஆரம்பித்து வைத்துப் பின்னர் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சரும், தற்போதைய பொ.ஐ.மு. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போது அக் கூட்டணியில் இருந்து விலகியுள்ளவருமாகிய றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், முதலில் நாட்டுக்குச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இளம் சமுதாயத்துக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும். இதனை யார் செய்கிறார்களோ அந்த அரசியல் தலைமைத்துவத்துடன் இணைந்து செயற்பட நான் என்றும் பின்நிற்கமாட்டேன். மக்களுக்காகச் சேவை மேற்கொள்கையில், தோலுரிக்கப்பட்டாலும் என்னைக் கொலை செய்தாலும் அதற்கு நான் அஞ்சப்போவதில்லை. முன்வைத்த காலைப் பின்வைக்கப் போவதுமில்லை. என்னைக் கொலை செய்வதற்கு எத்தனையோ அரசியல் தலைவர்கள் முயற்சி செய்தார்கள். இன்று அரசியல் அரங்கில் மட்டுமல்ல, அவர்கள் உயிருடனும் இல்லை என்றும் றொனி டி மெல் மேலும் தெரிவித்தார்.

கட்சியில் இருந்து வெளியேற நினைப்பவர்களினதும் கட்சிக்கு துரோகம் புரிய நினைப்பவர்களினதும் தோலை உரிப்பேன் என சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## 5வது உலகத் தமிழ் இணைய மாநாடு அமெரிக்காவில்

(12.05.02)

உலகத் தமிழ் இணைய மாநாட்டின் தொடர் மாநாடான 5வது உலகத் தமிழ் இணைய மாநாடு செப்டெம்பர் 27 முதல் 29ம் திகதி வரை அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவின் ஃபோஸ்ட்டர் நகரில் நடைபெறவுள்ளது. இத்தகவலை உலகத் தமிழ்த் தகவல் தொடர்பு மன்றத் தலைவர் ஆனந்தகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். முதல் உலகத் தமிழ் இணைய மாநாடு 1997ம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்றது. 2வது மாநாடு 1999 சென்னையிலும், மூன்றாம் மாநாடு சிங்கப்பூரிலும், 4ம் மாநாடு மலேசியா கோலாலம்பூரிலும் நடைபெற்றது. 5வது தமிழ் இணைய மாநாட்டுத் தலைவராக அமெரிக்காவின் மு.மணிவண்ணன் மற்றும் துணைத் தலைவராகத் தெற்காசியக் கல்வி நிறுவன துணைத் தலைவர் ஸ்டீவன் எம்.போலோஸ்ூம் பணியாற்றுகின்றனர்.

மேலும், ஏற்பாட்டுக்குழு உறுப்பினர்களாக ஆனந்தகிருஸ்ணன், முத்து - நெடுமாறன், அருண் மகிழ்நன், கல்யாணசுந்தரம், பொன்னவைக்கோ ஆகியோரும் பங்கேற்கின்றனர். இந்த 5வது தமிழ் இணைய மாநாடு ‘கணனி யுகத்துக்கான பாலம் அமைப்போம்’ என்ற தலைப்பிலான கருப்பொருளில் நடத்தப்படுகிறது. கணனி வழிக் கல்வி, மின் வர்த்தகம், மின் நிர்வாகம் போன்ற துறைகள் பற்றியும் தமிழ் ஆவணங்கள் பாதுகாப்புக் குறித்தும் இங்கு ஆராயப்படுகின்றன.

## கதிர்காமத்திலிருந்து புறப்பட்ட சமாதானப் பேரணி யாழ். குடாவைச் சென்றடைந்தது

கதிர்காமத்தில் கடந்த 21ம் திகதி ஆரம்பமான சமாதானப் பேரணி புதனன்று மாலை யாழ்ப்பாணத்தை சென்றடைந்தது. கிளிநொச்சியில் இருந்து அன்றைய தினம் காலை புறப்பட்ட இப்பேரணி, பிற்பகல் 1.30 மணிக்கு முகமாலையை வந்தடைந்தது. முகமாலையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், தமிழீழக் காவல் துறையினரும் பேரணியை வரவேற்று, உபசரித்து யாழ்ப்பாணம் நோக்கி அனுப்பி வைத்தனர். அங்கிருந்து கண்டி வீதி வழியாக யாழ். நோக்கி வந்த பேரணியினரை வீதியின் இருமருங்கிலும் நின்று பொதுமக்கள் கையசைத்து வரவேற்றனர். நகரின் பிரதான வீதிகள் ஊடாகச் சென்ற பேரணி, இரவு யாழ்.நாகவிகாரையை அடைந்ததும் முடிவுக்கு வந்தது. இப்பேரணியில் 50 வாகனங்களில் சுமார் 150 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

## ஓமந்தையில் படையினர் – புலிகள் பேச்சுவார்த்தை

(12.05.02)

ஏ-9 வீதியூடான பொதுமக்கள் போக்குவரத்தை இலகுபடுத்துவது குறித்து படையினரும் விடுதலைப் புலிகளும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இச்சந்திப்பில் புலிகளின் தரப்பில் அரசியல் துறையைச் சேர்ந்த சோ. தங்கன், புலித்தேவன் ஆகியோரும் படையினர் தரப்பில் வன்னிப் பிராந்திய படைத் தளபதி பிரிகேடியர் ஜெரி அல்விஸ், 56ம் படைப் பிரிவின் இராணுவத் தளபதி பிரிகேடியர் ஆனந்த அல்விஸ், ஓமந்தைப் படைத்தளத்தின் தளபதி கேணல் மோசஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவர்களுடன் நேற்று முன்தினம் வன்னிக்குச் சென்று அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த சர்வதேச போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறொன்ட் பியூரோ ஹேறாவ்டேயும், வவுனியா மாவட்டத்திற்கான போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைச் சேர்ந்த யுக்கா பொரேனரும் இணைந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது வாரத்தின் ஏழு நாட்களும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஓமந்தையினூடாகப் பொதுமக்கள் பயணம் செய்ய அனுமதிப்பது, வாரத்தின் ஏழு நாட்களும் வட பகுதிக்குப் பொருட்களை எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி எடுத்துச் செல்ல அனுமதிப்பது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. ஒரு தடவையில் 50 பார வண்டிகளை அனுமதித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் புலிகள் இச்சந்திப்பின்போது இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. இதேநேரம் போக்குவரத்து தொடர்பாகப் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மேலும் இலகுவாக்குவது தொடர்பாகவும் 10 நாட்களின் பின்னர் மீண்டும் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் சந்தித்து பேசுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

GLENMORE
PROPERTY SERVICES LTD
Sales | Lettings | Management | Mortgage advice
எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்
You have tried the rest, now come to the best
810 Harrow Road. Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040
website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220
your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சந்தேகம் புரிந்துணர்வு அடிப்படையிலான சந்தேகமே

(12.05.02)

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சந்தேக உணர்வு, புரிந்துணர்வு அடிப்படையிலான ஒரு சந்தேகமே என சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஒத்தி வைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தை நிறைவு செய்து, உரையாற்றிய மாரப்பன, அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், இருதரப்பினரிடையிலுமே பரஸ்பர சந்தேகம் இருந்து வருவதாகவும், புலிகளைப் படையினரும், படையினரைப் புலிகளும் குற்றம்சாட்டி வருவதாகவும் கூறிய அவர், எவ்வாறெனினும், அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சந்தேக உணர்வு, புரிந்துணர்வு அடிப்படையிலான ஒரு சந்தேகமே என்றார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது: அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே பரஸ்பர சந்தேகமும், சிறுசிறு முரண்பாடுகளும் இருந்து வருகின்ற போதிலும், சமாதான முயற்சிகளில் அவை எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. புரிந்துணர்வு உடன்படிக்கையை நோர்வே தலைமையிலான கண்காணிப்பாளர் குழு திறமையான முறையில் கண்காணிப்பு செய்யவில்லை, உடன்படிக்கையைப் புலிகள் மீறுகின்றனர் அவர்களுக்கெதிராக அரசு நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கிறேன். இவ்வாறு தெரிவித்த மாரப்பன, கண்காணிப்பாளர்கள், ஒரு வரையறைக்குள் செயற்படுவதால் அவர்களிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

# யாழில் புலிகளின் மூன்றாவது அலுவலகம் திறப்பு

(12.05.02)

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரால் தென்மராட்சி பிரதேசத்தில் அரசியல் துறை அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. கடந்த 8ம் திகதி புதனன்று காலை இவ்வலுவலகம் தென்மராட்சியின் சங்கத்தானைப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் கொடியை ஏற்றி வைத்தார். அகவணக்கம் மற்றும் தமிழ்தாய் வாழ்த்துப் பாடல் ஆகியவற்றை அடுத்து மாவீரர் லெப்டினன் ரவியின் தந்தை வீரவாகு இரட்ணகுமார் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். மாவீரர் 2ம் லெப்டினன் மாறனின் தாயார் நாடாவை வெட்டி அலுவலகத்தினைத் திறந்து வைத்தார். தொடர்ந்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் பாப்பா உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்கள் உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த வீமன் மற்றும் சிவசிறி சிதம்பரநாதக் குருக்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இ.கைலைநாதன், சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா, தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ச.யோகானந்தம், வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா மற்றும் பிரபல வர்த்தகர் சி.அருளம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். யாழ்குடாவில் இத்துடன் விடுதலைப் புலிகளின் மூன்று அரசியல் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ரத்வத்தைக்கு விடுமுறை!

(12.05.02)



கண்டி உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம்கள் கொல்லப்பட்ட படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபரும் முன்னாள் பாதுகாப்பு பிரதி அமைச்சரும் தற்போது தடுப்புக் காவலில் உள்ளவரும் பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான அநுருத்த ரத்வத்தைக்கு மூன்று மாதகால விடுமுறை வழங்குமாறு அக்கட்சி கோரியுள்ளது. இது தொடர்பாக அநுருத்த ரத்வத்தைக்கு மூன்று மாதகால விடுமுறை வழங்குமாறு கோரும் பிரேரணையை எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச சபாநாயகரிடம் சமர்ப்பித்தார். இந்தப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வழிமொழிந்தார். இதையடுத்து இப்பிரேரணை சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனையடுத்து அனுருத்த ரத்வத்தைக்கு மூன்று மாத காலத்திற்கான விடுமுறை நாடாளுமன்றத்தினால் வழங்கப்பட ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடமராட்சி கிழக்கில் பாதுகாப்பு கெடுபிடி அதிகரிப்பு தொடர்ந்து 'பாஸ்' நடைமுறை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்காப் படையினரால் பாதுகாப்புக் கெடுபிடிகள் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்குச் சென்றுவரும் பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர். பாதுகாப்புக் கெடுபிடிகளில் பிரதானமானதாக 'பாஸ்' நடைமுறையே காணப்படுகின்றது. இந்தப் பாஸ் அனுமதியைப் பெறாமல் எவரும் உள்நுழைய முடியாது எனப் படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் குடத்தனைச் சந்தி, மணற்காட்டுச் சந்தி ஆகிய இடங்களிலேயே படையினரால் பாஸ் வழங்கும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் வைத்துப் பொதுமக்கள் தமது அடையாள அட்டையை ஒப்படைத்துவிட்டுப் படையினரால் வழங்கப்படும் பாஸ் அட்டையைப் பெற்றுக்கொண்டே தொடர்ந்தும் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து போர்க்கால நிலைமையில் இடம்பெயர்ந்து வன்னி உட்பட வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற பெருமளவான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது படையினர் பாஸ் நடைமுறையை மீண்டும் அமுல்படுத்தியுள்ளதுடன், பாதுகாப்புக் கெடுபிடிகளையும் அதிகரித்துள்ளமை பொதுமக்கள் மத்தியில் அச்சநிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகள் குறித்துப் படை தரப்பு கூறும் போது இப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயம். அதனால் தான் பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்படுவதுடன், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளதாக கூறுகின்றனர்.

# கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவு

(12.05.02)

இரு பகுதியினருக்கும் இடையிலான உடன்படிக்கையை அடுத்து கொழும்பில் இடைநிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் பதிவு மீண்டும் அமுலுக்கு வந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த செவ்வாயன்று கொழும்பு மாவட்டத்தில் பொலிசாரினால் விநியோகம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமொன்று தமிழர் மத்தியில் அச்சத்தை உருவாக்கியுள்ளது. கொழும்பில் சில பகுதிகளிலுள்ள வீடுகள், கடைகள் தோறும் இந்த விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டுப் பூர்த்தி செய்து தரும்படிக் கோரப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப்படிவத்தில் வீட்டு உரிமையாளரின் முழு விபரம், வாடகையாளர்களின் முழு விபரம், எங்கிருந்து, எப்போது, எதற்காக வந்தீர்கள் என்ற கேள்விகளும், அவர்களின் நிரந்தர விலாசம், தொழில், தனிநபரா, விவாகமானவரா, அடையாள அட்டை இலக்கம் ஆகியனவும் கேட்கப்பட்டுள்ளன. இதேபோல், கடைகளின் உரிமையாளர்கள், வேலையாட்கள் விபரங்கள் யாவும் கோரப்பட்டுள்ளன. பொலிசாரின் இந்நடவடிக்கை மீண்டும் பொலிஸ் பதிவு முறையை அறிமுகப்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு முன்னோடி நடவடிக்கையாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

இது பற்றி பொலிஸ் நிலையங்கள் கருத்து தெரிவித்த போது, பொலிஸ்-பொதுமக்கள் தொடர்பைச் சீராக்கும் நடவடிக்கையின் முதல் அங்கமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், பழைய பொலிஸ் பதிவு முறையைத் தொடரும் நடவடிக்கையாகக் கருத வேண்டாம் என்றும் கூறியதாகத் தெரியவருகிறது. ஆனால், பொலிஸாரின் இந்நடவடிக்கை மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பேருந்து விபத்தில் நால்வர் பலி, 44 பேர் காயம்

(12.05.02)

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஒரு பெண் உட்பட நால்வர் பலியானதுடன், 44 பேர் காயமடைந்துள்ளனர். இரத்தினபுரியிலிருந்து வேவல்வத்தைக்குச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து வாகனமொன்றுக்கு வழிவிட ஒதுங்கிச் சென்றபோது பாதையை விட்டுவிலகிப் பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் காயமடைந்த 44 பேரில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாகவும், அவர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் இரத்தினபுரி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.




S.K. Rajan Jewellers

24, Rue Perdonnet,
75010 Paris.
தொடர்புகளுக்கு:
Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN
M°: La Chapelle / Gard du Nord.

Carte Téléphonique Prépayées

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22Kஇல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

எஸ். கே. ராஜன் ஜுவலர்ஸ்

சகல நாடுகளுக்கும் துரிதகதியில் இணைப்பை ஏற்படுத்தும் தொலைபேசி அட்டைகளையும் மலிவு விலையில் (85F) இங்கு பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் தடை காலத்தில் வன்னி மக்களை காப்பாற்றிய பெருமை தமிழர் புனர்வாழ்வு கழகத்துக்கே

## திருமலையில் திறப்பு விழாவில் ஐங்கரன்

சிறீலங்கா அரசினால் பொருளாதாரத் தடை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்ட காலத்தில் வன்னிப் பிராந்திய மக்களைப் பஞ்சம், பட்டினி, நோய்களிலிருந்து காப்பாற்றிய பெருமை அங்கு சேவையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையே சேரும் என்று திருகோணமலை மாவட்ட விடுதலைப்புலிகள் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஐங்கரன் தெரிவித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை அலுவலகத்தின் திறப்பு நிகழ்வில் பங்கு பற்றிப் பேசும் போதே ஐங்கரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறுகையில், புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நாம் வந்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணிபுரியும் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கும் வாய்ப்பையும் இந் நிகழ்வு உருவாக்கியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடக்கு, கிழக்கில் சிறப்பாகச் சேவையாற்றியுள்ளது. உலக நாடுகளிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பணியாற்றி வருகின்றது. வன்னியில் பொருளாதாரத் தடையினால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியோர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேவையாற்றியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திருகோணமலை மாவட்டத்திலும் தனது பணிகளை ஆற்ற ஆரம்பித்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு, குழந்தைகளின் கல்வி வளர்ச்சி ஆகியன குறித்து குறுகியகால மற்றும் நீண்ட காலச் செயற்திட்டங்களை வகுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படும். திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் சொந்தக் காலில் நின்று பணிபுரியக் கூடியதாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணி குறிப்பிட்ட காலம் வரை தான் தொடரமுடியும் என்றும் ஐங்கரன் தெரிவித்தார்.

எல்லா அரச சார்பற்ற நிறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி அமைப்புக்களாகச் செயற்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் ஐங்கரன் தெரிவித்தார். திருமலை மாவட்ட மகளிர் நலன்புரிச் சங்க பிரமுகர் திருமதி ரஞ்சி பாலசிங்கம் பேசுகையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவை திருமலை மாவட்டத்திற்கு மீண்டும் கிடைக்க வழியேற்பட்டுள்ளது. திருமலை மாவட்டத்தில் யுத்தம் காரணமாகக் கணவனை இழந்த விதவைகள் வாழுகின்றனர். புனர்வாழ்வுப் பணிகள் அவர்களைச் சென்றடைய வேண்டுமென்றார். ஜேர்மன் ஜிரிஇஸட் அமைப்பு திருமலைப் பிரதிநிதி டாக்டர் டிடோ ஜீனிற்ஸ் நாடாவை வெட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளையைத் திறந்து வைத்தார்.

## எறிகணைகள் நிரம்பிய பெட்டிகள் கடலில் எவ்வாறு மிதந்தன?

### அடைக்கலநாதன் கேள்வி

(12.05.02)

வாகரைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து எறிகணைகள் நிரம்பிய பெட்டிகள் நீரில் மிதந்ததாகக் கடற்படையினர் கூறுகின்றனர். அப்படியானால் ஆட்டிலறி எறிகணைகள் நிரம்பிய பெட்டிகள் நீரில் மிதக்கக் கூடியவையா? அதேசமயம் வெடித்துச் சிதறிய படகிலிருந்து இவ் வாயுதப் பெட்டிகள் மட்டும் ஏன் வெடிக்காமல் மிதந்தன? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் கேள்வி எழுப்பிய செல்வம் அடைக்கலநாதன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், 122மி.மீ. ஆட்டிலறி எறிகணைகளையும் ஆர்.பி.ஜி. குண்டுகளும் நிரப்பப்பட்ட பன்னிரெண்டு பெட்டிகள் கடலில் மிதந்ததாக கடற்படையினர் கூறுகின்றனர். இந்தக் கட்டுக்கதையை நாம் நம்ப வேண்டும் என அவர்கள் கருதுகிறார்கள். அவ்வாறானால் இவ்வெடி பொருட்கள் பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்டவையாக இருக்கவேண்டும். அவ்வாறானால் தான் அவை மிதக்கும், அல்லது கடற்படை கூறுவது சுத்தப் பொய்யாக இருக்க வேண்டும். இராணுவப் பயிற்சி பெற்ற நபர் என்ற வகையில் நான் கூறுகிறேன் ஆட்டிலறிக் குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு ஒரு சிறிய சந்தர்ப்பமே போதும் அது வெடித்துச் சிதறிவிடும். படகு வெடித்துச் சிதறியபோது இப்பெட்டிகள் மட்டும் நீரில் மிதந்த விந்தை என்ன? 122 மி.மி ஆட்டிலறி வெடிபொருட்கள் கொண்ட ஒரு பெட்டி மிதக்கக்கூடியவை என நாம் நம்பவேண்டும் என அரச படையினர் எதிர்பார்க்கின்றனர். இது எமது பொது அறிவினையே நையாண்டி செய்வது போலானது. பாதுகாப்பு அமைச்சருக்கு ஒரு ஆட்டிலறி செல்லின் நிறை எவ்வளவு எனத்தெரிந்திருக்கும் என நான் நினைக்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

## யாழ். படைகளின் தளபதியாக ஜெனரல் பொன்சேகா

யாழ்குடாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வியாழக் கிழமை இவர் தனது பதவியை ஏற்றுள்ளார். ஆனையிறவு முகாம் வீழ்ச்சிக்குப் பின்னர் பொன்சேகா யாழ். படைகளின் தளபதியாக பொறுப்பேற்றிருந்தார். பின்னர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலையை விடுங்கள்

இதோ புதிய திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில்
ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

Naturina®



முடி உதிர்வு, மெல்லிய முடி, இளநரை, முடிவளர்ச்சி நிறுத்தம், முடியின் வெடிப்புத் தன்மை, பளபளப்பற்ற முடி, நகங்கள் விரைவில் உடையும் தன்மை, கணைவெடிப்பு, போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வைத் தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.




இதோ நிவாரணம் அளிக்கின்றது
ஜேர்மனியில் புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வடிவில்

Naturina® இக்குறைபாடுகளை 3 மாதங்களுக்குத் தொடர்ந்து தினமும் பாவிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

உங்கள் தோலுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களையும் கனியுப்புக்களையும் வழங்குகிறது.

Naturina®

மேலும் உங்கள் தோல் வரட்சித் தன்மையாகவோ அல்லது எண்ணெய்த்தன்மை கூடியதாகவோ அல்லது மெதுமையான நகங்களுக்கு விரைவில் உடையும் நகங்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது

Naturina® கூட்டுக்குளிகைகள்.

Naturina® வால் நிவாரணம் அடைந்த பலர் தினமும் கடித மூலமும் தொலைபேசி மூலமும் எம்மைப் புகழ்ந்துகொண்டே இருக்கின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Nassauer str 33-37, 59065 Hamm-Germany
Tel: 0049 1805 915910 / Fax: 0049 1805 915920
Internet: www.naturina.de

சுவிசில் தொடர்புகளுக்கு:
**Euro Boutique**
Bubernberg Platz 8,
3011 Bern.
Tel. and Fax: 031 3118604

எங்களுடன் தமிழில் மாலை 15.00 மணி முதல் 18.00 மணி வரை தொடர்புகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்க கூடாது

## - பௌத்தபிக்கு வழக்குத் தாக்கல் -

(12.05.02)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க அரசு உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்து, அத்தகைய நடவடிக்கை சட்டவிரோதமான செயல் என அறிவிக்கும்படி கோரி உயர் நீதிமன்றத்தில் பிரபல பௌத்த பிக்குவான சரளகீர்த்தி தேரர் சார்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. கடந்தவாரம் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு மனுவில், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி - சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமல் - இணைந்த வடக்கு, கிழக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவது சட்டரீதியாகச் செல்லுபடியற்றது. தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்படாத ஓர் அமைப்பிடம் இந்த இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்க முயல்வது தவறானதாகும். பிரிவினையைக் கைவிடுவதாக உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்காத விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இத்தகைய இடைக்கால நிர்வாக சபையை ஒப்படைக்க முயல்வது அரசமைப்பின் ஏற்பாடுகளை மீறிய நடவடிக்கையாகும். எனவே வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் அரசின் உத்தேச முடிவை சட்டவிரோதமானது என அறிவிக்க வேண்டும். இவ்வாறு அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் யூன் மாதம் நாலாம் திகதி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இதன்போது இந்த மனுவை, தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சமாதானத்திற்கு எதிராக இனவாத அமைப்புக்களுடன் பௌத்த பிக்குகளும் இணைந்து செயற்பட்டு வருவது தெரிந்ததே.

# யாழிலும் மட்டக்களப்பிலும் படைக்கு ஆட்சேர்ப்பு மையம்

(12.05.02)

5000 பேரை இராணுவத்துக்குச் சேர்க்கும் நடவடிக்கையில் சிறீலங்காப் படைத் தரப்பு தீவிரமாக இறங்கியுள்ளது. சிங்கள இளைஞர்களைப் படைக்குச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கி அது பயனளிக்காத நிலையில் தமிழ் மற்றும் முஸ்லீம் இளைஞர்களைப் படையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் படை தரப்பு தீவிரமாக இறங்கியுள்ளது. படைக்கு ஆட்சேர்க்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்திலும் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆட்சேர்ப்பு மையம் ஆரியகுளம் சந்தியிலுள்ள நாக விகாரையில் அமைக்கப்பட்டுள்ளது. 'இராணுவ ஆட்சேர்ப்பு மையம்' எனப் போடப்பட்ட விளம்பரப் பலகையின் கீழ் இராணுவ வீரர் ஒருவர் இருத்தி வைக்கப்பட்டுள்ளார். இதே வேளை மட்டக்களப்பிலும் தமிழர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் படைதரப்பு தீவிரமாக இறங்கியுள்ளது. இராணுவத்தில் தமிழ் இளைஞர்களையும் இணைந்து கொள்ளுமாறு செங்கலடி, சித்தாண்டி, வந்தாறுமூலை, மாவடிவேம்பு, ஏறாவூர் போன்ற இடங்களில் ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினர் அறிவிப்பு விடுத்துள்ளனர். இராணுவத்தில் சேர விரும்பும் இளைஞர்கள் செங்கலடி கறுத்தப்பால படைமுகாமுக்கு நேரில் வருமாறும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுகள் நடைபெறும் எனவும் இவ் ஒலிபெருக்கி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனையிறவுத் தாக்குதலுக்கு முன்னர் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்றபோதும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து ஒருவர் கூட இராணுவத்தில் இணையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் கைதிகளை

## மூன்று கட்டங்களாக விடுவிக்க நடவடிக்கை

### சந்திரசேகரனிடம் ரணில் உறுதி?

(12.05.02)

களுத்துறை மற்றும் ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், சிறீலங்கா சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. இராதாகிருஸ்ணனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதற்கமைய மேற்படி இளைஞர்களை மூன்று கட்டங்களாக விடுதலை செய்வதற்கு ஏற்ற பணிப்புரையை தான் சட்ட மா அதிபருக்கு வழங்குவதற்கு ரணில் இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஒப்புதல் வாக்குமூலம் கூட இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கான பணிப்புரையின் கீழ் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலர் விடுதலையாகிக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், நீதிமன்றத்தில் குற்றம் நீருபிக்க முடியாத நிலையில் உள்ள இளைஞர்களையும் படிப்படியாக விடுதலை செய்வதற்கேற்ற பணிப்புரையை சட்ட மா அதிபருக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். - கொள்கை ரீதியாக, கைதிகள் விடுதலையில் இந்த அரசினால் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவில் உள்ளடங்கப்படாமல் விடுதலை தாமதமாகும் இளைஞர்களின் விபரங்கள் பற்றித் தனது உடனடிக் கவனத்துக்குக் கொண்டுவரும்படியும் பிரதமர் தம்மிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் சந்திசேகரன் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகளின் பேச்சாளராகப் பீரிஸ் மாறிவிட்டார்

## - மங்கள சமரவீர குற்றச்சாட்டு -

(12.05.02)

அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளராக இதுவரை காலமும் செயற்பட்டு வந்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இப்போது விடுதலைப் புலிகளின் பேச்சாளராகச் செயற்பட ஆரம்பித்திருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பிரபாகரனுக்காகக் கதைப்பதை விட ஜி.எல். பீரிஸ் சிறப்பான முறையில் கதைத்து வருவதாகவும் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பான ஒத்தி வைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கடந்த வியாழனன்று உரையாற்றியபோது இவ்வாறு கூறிய அவர், பீரிஸ் நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரையே இதற்கு ஒரு சான்று என்று கூறினார்.

## மரங்களை அழித்தால் கடும் நடவடிக்கை வன்னியில் புலிகள் அறிவிப்பு

(12.05.02)

காட்டு மரங்களை வெட்டி அழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் வன்னியில் அறிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் இது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளனர். உலகெங்கிலும் மரங்கள் அழிக்கப்பட்டுவருவதால் ஏற்பட்டுள்ள இயற்கையின் அனர்த்தங்கள் ஏராளம். இந்த அனர்த்தங்களில் இருந்து தமிழ்ப் பிரதேசங்களைப் பாதுகாப்பது நமது கடமை. ஆதலால் மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து, காட்டில் பச்சை மரங்களைத் தறிக்காது ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். இதனை மீறி மரங்களைத் தறிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## தீவுப் பகுதியில் உள்ள கடற்படையினரின் விபரம் சேகரிப்பு

(12.05.02)

யாழ்.குடாநாட்டின் தீவுப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள், அரச மற்றும் தனியார் கட்டடங்களில் வெளியேறாமல் இருக்கும் சிறீலங்கா கடற்படையினரின் விபரங்களைத் துரிதமாகத் திரட்டுமாறு பிரதேச செயலாளர்களை யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டு 60 நாட்களுக்குள் (அதாவது கடந்த ஏப்ரல் 31ம் திகதிக்கு முன்னர்) பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறி இருக்க வேண்டும். ஆனால், யாழ்.குடாநாட்டின் தீவகப் பகுதி உட்பட சுமார் 1500ற்கு மேற்பட்ட பொது இடங்களில் இராணுவத்தினரும், கடற்படையினரும் உடன்படிக்கையை மீறி தொடர்ந்து நிலைகொண்டுள்ள நிலையில் இவ்விபரம் திரட்டும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

PAPAYA
Restaurant

MODERN CEYLON CUISINE
* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்.
குறைந்த விலையில் குன்றாத மனநிறைவு
15 Village Way East, Rayners Lane, Harrow, Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டைக்குத் தயாராகுங்கள்

## பல்கலைக்கழக பேராசிரியர் சிங்களவர்களுக்கு அறைகூவல்

(14.05.02)

நாடும், மக்களும், சொத்துகளும் அழிக்கப்படும் போது அதைத் தடுத்து நிறுத்த யுத்தம் புரிவதில் தவறில்லை. புத்தமதத்தில் யுத்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது போதி மாதவனும் 'யுத்தம் புரிவதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் அதை மேற்கொள்வது தவறல்ல' என்று கடந்த சனிக்கிழமை கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற தேசிய பிக்குமார் சம்மேளனக் கூட்டத்தில் பேசிய இலங்கை பாலி-பௌத்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒலிவர் அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டையும், மக்களையும், சொத்துகளையும் பாதுகாக்கும் கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு. இதற்குப் பங்கம் ஏற்படும் போது அதனைத் தடுத்து நிறுத்த யுத்தம் புரியலாம். இதனை பௌத்த மதம் அனுமதிக்கிறது. போதி மாதவன் போதித்த பௌத்த அரசியல் சித்தாந்தத்தில் மிகத் தெளிவாக இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நாட்டிற்குப் பலம் வாய்ந்த இராணுவம் இருக்க வேண்டும் என்றும் புத்தர் போதித்துள்ளார். இந்தப் போதனைகளை பௌத்த அரசியல் சித்தாந்தங்களைக் கடைப்பிடிக்காததாலேயே நமக்கு இன்றைய நிலை ஏற்பட்டுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் பலம் வாய்ந்த இராணுவத்தை ஏற்படுத்துவதில் நமது தலைவர்கள் தவறிவிட்டனர். படைகள் இல்லாத நாடு தொடர்பிலும் போலியான அன்பை சமாதானம் கலந்த அரசாட்சி தொடர்பிலும் புத்தர் போதிக்கவில்லை. அகம்பாவத்தை, அகம்பாவத்தைப் பிரயோகித்தே அழிக்க வேண்டுமென்பதே அவரது போதனையாகும்.

யுத்தத்திற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளாத நாடு உலகில் எங்குமே இல்லை. அப்படியில்லாத நாடு பாதுகாக்கப்பட்டதும் இல்லை. பலத்தின் மூலமே தர்ம சக்கரத்தைப் பாதுகாக்க முடியும். பௌத்தம் பிரிவினையை எதிர்க்கிறது. இந்தியா போன்றதொரு பெரும் இராச்சியம் ஒரே ஆட்சியின் கீழ் இருக்க வேண்டுமென்றே புத்தர் விரும்பினார். இவற்றையெல்லாம் கைவிட்டுப் பிரபாகரன் கேட்பதையெல்லாம் கொடுத்து நாட்டைப் பிரிக்க முனைகிறார்கள். தட்டிக் கேட்டால் தீர்வுக்கு மாற்று வழி என்ன எனக் கேள்வி கேட்கிறார்கள். இதற்கான மாற்று வழி யுத்தம் செய்து எதிரியைத் தோல்வியடையச் செய்வதே. இன்று படிப்பதற்கு நேரமில்லை. பிரார்த்தனை செய்வதற்கு நேரமில்லை. அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்திற்குத் தயாராக வேண்டுமென்று பேராசிரியர் ஒலிவர் அபேநாயக்க தெரிவித்தார்.

## வெகுஜனப் போராட்டங்களை நடத்தத் திட்டம்

(14.05.02)

தமிழ் மக்களின் நியாயபூர்வ உரிமைகளை வலியுறுத்தியும், சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் அதை அடைவதற்கு தடையாக இருக்கும் சக்திகளின் நடவடிக்கைகளை கண்டித்தும் வடக்கு கிழக்கில் ஒரேதினத்தில் வெகுஜனப்போராட்டங்களை நடத்தவுள்ளதாக ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நீண்டகாலமாக புறப்பணிக்கப்பட்டிருந்த தமிழ் இனத்தின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ள இவ்வேளையில், தென்னிலங்கையில் இனவாத கட்சிகளான ஜேவிபி சிஹலஉறுமய, மற்றும் சிறீலங்கா சுதந்திர கட்சியின் ஒருசிலர் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராகவும், இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படுவதற்கு எதிராகவும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் தமக்குரிய நீதியான உரிமையை கோருகின்றனரே தவிர ஏனைய மக்களின் உரிமைகளை பறிக்க முயலவும் இல்லை. யாருக்கும் உரிமைவழங்க கூடாது என தடுக்கவும் இல்லை. யாருடைய உரிமையையும் தட்டிப்பறிக்கவும் இல்லை. தமக்குரிய உரிமையைத்தான் கேட்கிறார்கள். இந்நிலையில் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் நோக்கிலும் பேரினவாத சக்திகளினதும் அவர்களுக்கு துணை போபவர்களின் நடவடிக்கைகளை கண்டித்தும் வடக்கு கிழக்கில் வெகுஜனப்போராட்டத்தை நடத்தப்போவதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

## சந்திரிகாவின் உத்தரவிலேயே செயற்பட்டேன் கைதான முன்னாள் பொலீஸ் அதிகாரி வாக்குமூலம்

(12.05.02)

தமது பதவிக் காலத்தில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவின் பேரில்தான் நடந்தன என்று முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் நிஹால் கருணாரட்ண சிரேஷ்ட பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியிருக்கின்றார். இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவை எதிர்த்து ஜனாதிபதியின் மாமனார் கிளிபோர்ட் ரத்வத்தை போட்டியிட்ட போது தம்மையும் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் பலரையும் சபை அலுவலகத்துக்குச் சென்று தமது மாமனாருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகாவே பணித்தார் என்றும் அதன்படியே தாங்கள் அங்கே சென்று பாதுகாப்பு வழங்கியதாகவும் நிஹால் கருணாரட்ண தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, நிஹால் கருணாரத்ன நாட்டிலிருந்து வெளியேறுவதை கொழும்பு நீதிமன்றம் தடை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. தன்னை இரகசியப் பொலிஸார் கைது செய்வதை ஆட்சேபித்து முன்பிணை மனுவொன்றை நிஹால் கருணாரத்ன கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் இவர் நாட்டிலிருந்து வெளியேறுவதைத் தடை செய்து ஐம்பதாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது. மேலும், இரகசியப் பொலிஸின் விசாரணைகளின் சாட்சிகளுக்கு எதுவித மிரட்டல்களும் செய்வதை முழுமையாகத் தடை செய்த நீதிமன்றம், நிஹால் கருணாரத்ன மாதம் ஒருமுறை இரகசியப் பொலிஸில் ஆஜராக வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தது. சந்திரிகாவின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களே குமார் பொன்னம்பலம் உட்பட பல்வேறு படுகொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் தாயகக் கோட்பாட்டை அங்கீகரிக்கப்போவதில்லை

### சமாதான முயற்சிகள் 90 நாள்களுள் எட்டப்படும்

**- ரணில் விக்கிரமசிங்க**

(12.05.02)

விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை அரசு ஒரு போதும் அங்கீகரிக்கப்போவதில்லை. தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பான இறுதித்தீர்மானம் அடுத்த 90 நாள்களுக்குள் எட்டப்படும் என சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். மாத்தறையில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான விகாரை ஒன்றை நேற்று சனியன்று திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

ரணில் மேலும் கூறியதாவது, வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் இதுவரை உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை. சமாதான முயற்சிகளுக்கு ஆதரவைத் திரட்டும் வகையில் தூதர்களை பல நாடுகளுக்கும் அனுப்பியுள்ளேன். அத்துடன் பொதுநலவாய நாடுகளுடன் வெளிவிவகார அமைச்சர் பேச்சுக்களை நடத்திவருகின்றார். தற்போதைய சமாதான முயற்சிகளின் வெற்றிக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் கவனத்தையும் பெறுவதற்காகவே இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு சகல கட்சிகளுடனும் உடன்பாடு காண நடவடிக்கை எடுத் துள்ளேன். ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் இணக்கத் துக்கு வரப் பின்னடிக்கின்றன. இனப் பிரச்சினைக்கு துரிதமான தீர்வைக் காணும் வழியில் அதுவே தடைக்கல்லாக இருக்கின்றது என ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## பிரேசில் தூதராக தளுவத்தை நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு

பிரேஸில் நாட்டின் தூதுவராக நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தையை பிரஸ்தாப இராஜதந்திரி பதவிக்கு நியமனம் செய்ய வேண்டாமென கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை மேஜர் என்.ஜி.சந்திரசேன சமர்பித்திருக்கிறார். நாடாளுமன்ற சபாநாயகரும், உயர்பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழு தலைவருமான ஜோசப் மைக்கல் பெரேரா, ரொஹான் தளுவத்தை அமைச்சரவையின் சகல அமைச்சர்களும் பிரஸ்தாப மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ரொஹான் தளுவத்தை முன்னாள் இராணுவத்தளபதியாக இருந்தவர் என்றும் 1993ம் ஆண்டில் ஜானகபுர இராணுவ முகாமுக்கு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் காரணமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர் என்றும், அதே வருடத்தில் பூநகரித் தாக்குதல் காரணமாக 600 இராணுவத்தினர் மரணமானார்கள் என்றும், 1996ம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டு 1300ற்கும் மேற்பட்ட படையினர் மரணமானார்கள் என்றும், 1997ம் ஆண்டில் ஜெயசிகுறுய் இராணுவ நடவடிக்கையின் போது 300ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள் என்றும், இராணுவத்தினரின் பிரஸ்தாப தோல்விகளுக்குத் தளுவத்தை பொறுப்பேற்க வேண்டும் என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவிற்கு அழைப்பு இலங்கை வந்தால் தீக்குளிப்பதாக அறிவிப்பு

(12.05.02

இலங்கை நிலைவரங்களை நேரில் பார்வையிட விஜயம் மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு சிறீலங்காவின் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அழைப்பு விடுத்திருக்கிறார். ஜெயலலிதாவுக்கு எழுதியிருக்கும் கடிதம் ஒன்றிலேயே மகேஸ்வரன் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு வருகை தந்தால் தீக்குளிப்பேன் என்று இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முகதென்னரசு அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் ரி.மகேஸ்வரன் தமிழக முதலமைச்சரை இலங்கை வருமாறு அழைத்திருப்பதை அடுத்தே, முதலமைச்சர் ஜெயலலிதாவின் இலங்கை வருகையை இதி.மு.க. தலைவர் என்ற முறையில் எதிர்ப்பதாகவும் தென்னரசு தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கான மகேஸ்வரனின் கடிதம் வருமாறு, தமிழகத்தில் வாழும் ஐந்து கோடி தமிழர்களுக்கும் தாங்கள் பணிபுரிய வேண்டியவராக உள்ளீர்கள். அதேவேளை, இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவராக உதவவேண்டிய நிலையிலுள்ளீர்கள். 18 வருடங்களுக்கு மேலாகப் போர்ச் சூழலிலிருந்த இலங்கையில் புதிய அரசாங்கம் சமாதான சூழலை உருவாக்கி இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஐக்கியமாக வாழக்கூடிய சூழ்நிலையை எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளதை தமிழ் நாட்டு முதல்வர் என்ற முறையில் நீங்கள் அறிவீர்கள்.

உலகெல்லாம் வாழும் 8 கோடி தமிழர்கள் இலங்கை தமிழர்களின் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசும் தமிழக அரசியல் தலைவர்களும் நீண்ட காலமாகக் காட்டி வந்த ஆதரவையும் நீங்கள் அறிவீர்கள். 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்பையும் அழிவுகளையும் அறிந்து முன்னாள் இந்திய பிரதமர் இந்திராகாந்தி ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நேரடியாகத் தலையிட்டதையும் நீங்கள் அறிவீர்கள்.

சிங்கள அரசு தமிழ் மக்களை நசுக்கி ஒடுக்குகிறது என்பதை உணர்ந்த திருமதி இந்திராகாந்தி ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு அளித்துவந்த ஆதரவையும் நீங்கள் அறிவீர்கள். ஈழத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காகச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தவேளை, அவர் படுகொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் தங்கள் அரசியல் குருவாக விளங்கிய முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஇராமச்சந்திரன் ஈழத் தமிழர்களுக்கு முழு ஆதரவாக இருந்ததையும் மத்திய அரசின் ஆதரவைப் பெற்று எமது பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

எனவே, தமிழகத்திலுள்ள 5 கோடி தமிழர்களும் உலகத்தில் பரந்து வாழும் தமிழர்களும் ஈழத்




தமிழர் விவகாரத்தில் அக்கறை கொண்டிருந்ததையும் நீங்கள் அறிவீர்கள். ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைக்காகக் கடந்த 20 வருடங்களாக நடத்தி வந்த போராட்டத்தினால் 60 ஆயிரம் தமிழ் பேசும் உயிர்களைப் பலி கொடுத்ததையும், 18 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவு அடைந்ததையும், ஒரு இலட்சம் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டதையும், பல்லாயிரம் குடியிருப்பு ஏக்கர் காணியில் இராணுவம் ஆக்கிரமித்திருப்பதையும், 1500ற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டமையும், மதிப்பிட முடியாத பொருள் பண்டங்களை இழந்ததையும் நீங்கள் அறிவீர்கள். இதற்கு மேலாக 18 ஆயிரம் தமிழ் பெண்கள் விதவைகளாக்கப்பட்டு வட, கிழக்கு மாகாணங்களில் பரிதாப நிலையில் வாழ்ந்து வருவதை நீங்கள் கருணையுடன் அணுகுவீர்கள். இதுதவிர, பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டு, பல்வேறு அநாதை நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். கால், கைகளை இழந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் ஊனமுற்றவர்களாக வாழ்ந்து வருவதையும் அறிவீர்கள்.

ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் இடம் பெயர்ந்து இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு எங்கள் உடன்பிறப்புகள் இந்த அவல நிலையிலிருந்து விடுபட்டு சுதந்திர மனிதர்களாக வாழ்வதற்கான ஒரு அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்குப் பிரதமர் விக்கிரமசிங்க தலைமையிலுள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசியல் பேச்சுவார்த்தைக்கு முன்பாகப் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு சிறந்த முறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. பல்வேறு கஸ்டங்களை அனுபவித்து வந்த மக்கள் இன்று இயல்பான ஒரு நிலையை அடைந்து வருகின்றனர். அதை நான் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உறுதியுடன் செய்து வருகிறது.

இந்த நல்ல முயற்சிக்கு இலங்கையிலுள்ள இனவாதக் கட்சிகள் இனவாதக் குரல்களை எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த சூழ்நிலையில் 5 கோடி தமிழ் மக்களின் முதல்வராக இருந்து வருகிற நீங்கள் மேற்கொள்ள வேண்டிய அரசியல் நடவடிக்கைகள் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும். தமிழகத்திலுள்ள அரசியல் காரணமாகவும் அங்குள்ள அரசியல் விரோதிகளுக்கு எதிரியாகவும் நடக்கவேண்டுமென மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்குப் பாதகமாக அமையக் கூடியது.

ஈழத் தமிழர்களது நிலைப்பாட்டை நீங்கள் நேரில் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமுண்டு என நான் மனப்பூர்வமாக உணர்கின்றேன். இதை கருத்திற்கொண்டு தாங்கள் நல்லெண்ண பிரயாணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருமாறு எமது அரசாங்கத்தின் சார்பில் தங்களை அன்புடன் அழைக்கின்றேன். நீங்கள் இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்ப்பீர்களானால் அவை உங்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகுக்கும். அதேவேளை, உலகெல்லாம் பரந்து வாழும் 8 கோடி தமிழர்களின் நல்லாதரவைப் பெற்று தமிழ் மக்களின் நன்மதிப்புப் பெற்ற தமிழ் தலைவியாக விளங்க வழிவகுக்கும் என்பது எனது அபிப்பிராயம். நான் இந்துசமய விவகார அமைச்சர் என்ற முறையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான கலை, கலாசார பண்பாடுகளை மேலும் இறுக்கமாக வளர்ப்பதற்கு ஒரு நல்லெண்ண பிரயாணத்தை மேற்கொள்ளவுள்ளேன் என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றேன். நான் தங்கள் மீது கொண்ட நம்பிக்கையாலும், தமிழ் மக்கள் மீது வைத்திருக்கும் பற்றினாலும் இந்த நீண்ட கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன். நீங்கள் முதல்வர் என்ற முறையில் ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் நல்லதொரு தீர்வை அடைவதற்கு மனப்பூர்வமாக உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளேன்.




## தொலைக்காட்சியில் பாடக்கூடாது பாடகர் – பாடகிகளுக்கு தடை

பின்னணி பாடகர், பாடகிகள் தொலைக்காட்சியில் தோன்றி பாடக்கூடாது என்று திரையுலக கூட்டமைப்பு தடை விதித்திருக்கிறது. இதுபற்றி கூட்டமைப்பு நிறைவேற்றியுள்ள தீர்மான விவரம் வருமாறு, திரை உலக கூட்டமைப்பின் கட்டுப்பாடுகள் பின்னணி பாடகர்கள், பாடகிகள், இசையமைப்பாளர்கள் ஆகியோருக்கும் பொருந்தும். தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் மேடை நிகழ்ச்சிகளில் பின்னணி பாடகர்களோ, பாடகிகளோ, இசையமைப்பாளர்களோ கலந்து கொண்டால், அவர்களைத் திரைப்படங்களில் பயன்படுத்தக் கூடாது என்று தமிழ்த் திரைப் படத் தயாரிப்பாளர்களை கூட்டமைப்பு கேட்டுக் கொள்ளும். இத்தனை கட்டுப்பாடுகளுக்குப் பிறகும் 'திரை விமர்சனம்' பகுதிக்கு 10 நிமிடங்களுக்கு மேலாக படக் காட்சிகளையும், 1 நிமிடங்களுக்கு மேலாக பாடல் காட்சிகளையும் சில தயாரிப்பாளர்கள் கொடுத்து வருகின்றனர். இனி எந்தப் படத்தின் படக் காட்சிகளாவது குறிப்பிட்ட அளவை மீறி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டால், அந்தத் தயாரிப்பாளர்களுக்கு தமிழ்த் திரை உலக கூட்டமைப்பு எந்த ஒத்துழைப்பும் தராது. இவ்வாறு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## காங்கிரசுடன் த.மா.கா. இணைப்பு

சோனியா காந்தியின் தூதர்கள் சென்னையில் ஜி.கே. வாசனை சந்தித்து பேசினார்கள். அப்போது காங்கிரசுடன் த.மா.கா.வை இணைப்பது உறுதி செய்யப்பட்டது. காங்கிரசுடன் த.மா.கா.வை இணைப்பது குறித்து பேச டெல்லி மேலிடம் அகில இந்திய பொதுச் செயலாளர் ஆஸ்கர் பெர்னாண்டஸ், அகில இந்திய செயலாளர் ரமேஷ் சென்னி தலா ஆகியோரை நியமித்தது. சோனியா காந்தி தூதுவர்களான இவர்கள் டெல்லியில் இருந்து சென்னை வந்தனர்.

ரமேஷ் சென்னிதலா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, த.மா.கா., காங்கிரஸ் கட்சியுடன் இணைப்பது என்பது உறுதியாகிவிட்டது. ஜி.கே. வாசன் டெல்லி வருகிறார். அப்போது இணைப்பு பற்றிய மற்ற விவரங் களை டெல்லி தலைவர்களுடன் பேச இருக்கிறோம். இதன்பின்பு சோனியா காந்தியுடன் கலந்து பேசி இணைப்பு எப்போது என்பது பற்றி அறிவிக்கப்படும். இவ்வாறு கூறினார்.

காங்கிரசுடன் த.மா.கா. இணைய வாசன் ஒத்துக் கொண்டாரா என்று கேட்டபோது "காங்கிரஸ் கட்சியுடன் இணைவதில் வாசன் தெளிவாக உள்ளார். இணைப்பு என்பதில் மாற்று கருத்து எதுவும் இல்லை" என்று ரமேஷ் சென்னிதலா கூறினார்.


வோல்த்தம்ஸ் ரோவில் இரண்டாவது வருடத்துக்குள்
எட்ட நின்றாலும்
கிட்ட வந்தாலும்
அதே மாறா
அழகு தரும் நகைகள்
தங்க நகைகளுக்கான
தனியான ஓர் மாளிகை
ATN Jewellery
ATN Jewellery
37, Palmerston Road, E17 6PR
Tel: 020 8521 9767
Fax: 020 8521 1281
வாரம் 11.30 மாலை 7 மணி வரை திறந்திருக்கும்

Pub.Lon.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன் கைது விவகாரம்

# சட்டநகலை எரிக்க முன்னர் பழ.நெடுமாறன் கைதாகி விடுதலை

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைதுசெய்யக் கோரி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணா தி.மு.க. அரசு மாநில சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மான நகலை எரிக்கும் போராட்டம் தமிழகத்தின் பிரதான நகரங்களிலும், பாண்டிச்சேரியிலும் நடைபெற்ற அதே வேளை, போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னராக புதன்கிழமை அதிகாலையில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனும், தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் விடுதலை க.இராஜேந்திரனும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, தமிழகத் தலைநகர் சென்னை உட்பட தீர்மான நகலை எரிக்க முயன்ற நூற்றுக்கும் மேற்பட்டோர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். புதன்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் விடுதலை இராஜேந்திரன் கைது செய்யப்பட்டார். அதிகாலை 4 மணியளவில் பழ.நெடுமாறன் கைதானார். இந்த இரு தலைவர்களின் அமைப்புகளின் முன்னணி நிர்வாகிகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைதுசெய்து பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திகொலை வழக்கில் கைதாகி இந்திய உயர் நீதிமன்றத்தால் பின்னர் விடுதலை செய்யப்பட்ட சுபா சுந்தரமும் நேற்று கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

அனைத்துக் கட்சிக்குழு அமைப்பாளர் பழ.நெடுமாறன் சென்னை, விழுப்புரம், சேலம், தஞ்சாவூர், புதுக் கோட்டை திண்டுக்கல், மதுரை, நெல்லை ஆகிய நகரங்களில் இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பகல் 11.00 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெறுவதற்கு இருந்தது. அதற்கு முன்னரே பழ.நெடுமாறன் அவர்களும் அவருடைய முக்கிய தொண்டர்கள் உட்பட சுமார் 1000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். அத்துடன் போராட்டம் நடைபெறவிருந்த இடங்களில் மக்கள் கூடுவதற்கு பொலீஸார் அனுமதிக்கவில்லை. எனினும் கைதானவர்கள் அன்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் விதத்தில் தமிழக சட்டசபைத் தீர்மானம் அமைந்திருக்கின்றது. எனவேதான் அதன் நகல்களை எரிப்பதற்கு அனைத்துக் கட்சிக்குழு முடிவு செய்தது என்று பழ.நெடுமாறன் தெரிவித்திருந்தார். இது இவ்வாறிருக்க, முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்னை விக்டோரியா மண்டபத்திற்கு முன்பாக பழ.நெடுமாறன் தலைமையில் நகல் எரிப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது. அங்கு வைத்து ஜெயலலிதா அரசின் தீர்மான நகலை பழ.நெடுமாறன் தீயிட்டுக் கொளுத்தினார். விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது 'பொடோ' சட்டம் பாயும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எச்சரிக்கை விடுத்திருந்த போதும், அதனைப் பொருட்படுத்தாது தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் எட்டு இடங்களில் தீர்மான நகல் தீயிட்டு பொசுக்கப்பட்டது.

இதேவேளை, பழ.நெடுமாறனின் கைது குறித்து ம.தி.மு.க. தலைவர் வைகோ விடுத்துள்ள அறிக்கையில், ஈழத்தமிழர்களுக்கு எதிராக தமிழக சட்டமன்றத்தில் நிறை வெற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து ஜனநாயக வழியில் போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்த தமிழக தேசிய இயக்க தலைவர் பழநெடுமாறனை தமிழக அரசின் உத்தரவின் பேரில் காவல்துறை கைது செய்திருப்பது மிகவும் கண்டனத்திற்குரியதாகும் என்று கூறியிருந்தார்.

# சேதுசமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

## வாஜ்பாய்க்கு கருணாநிதி கடிதம்

சேது சமுத்திர திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய்க்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது, தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான சேது சமுத்திர திட்டத்தை உடனே நிறைவேற்றக் கோரி இக்கடிதம் தங்களுக்கு எழுதுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகம் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டு மென்று கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலமாக வலியுறுத்தி வருகிறது. மத்தியில் ஆளும் நமது தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இத் திட்டத்தை நிறைவேற்றிடவும், இத் திட்டத்தின் சாத்தியக் கூறினை ஆராய பண ஒதுக்கீடு செய்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த சேது கால்வாய் திட்டம் விரைவாக செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இக்கடிதம் மூலமாக தங்களை வலியுறுத்துகிறேன். இத்திட்டத்தை செயல்படுத்தினால் இந்துமகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்புள்ளது. பாறைகளால் அமைந்த ஆடம்ஸ் பாலத்தை வெட்டி இணைத்தால் கடல் வழிப் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியும் முழு அளவு அதிகரிக்கும். தூத்துக்குடியிலிருந்து சென்னை, விசாகப்பட்டினம், கொல்கத்தா துறைமுகங்களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும். இதனால் இந்தியாவின் அன்னியச் செலாவணி செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும். இந்த கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, ராமேசுவரம், நாகப்பட்டிணம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கொல்கத்தா வரையுள்ள கிழக்கு கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும். இக்கால்வாய் வெட்டப்பட்டால் தூத்துக்குடி துறைமுகத் தின் வளர்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும். தற்பொழுது கப்பல்கள் யாவும் இலங்கையைச் சுற்றிச் செல்கின்றன. இதனால் புயல் அபாயங்களில் சிக்கிக் கொள்ள நேர்கிறது. சேதுக்கால்வாய் மூலமாக கப்பல்கள் சென்றால் புயல் அபாயம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியாவின் நலன் கருதி உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் 1981-82-ம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது. இவ்வாறு அந்த கடிதத்தில் கருணாநிதி கூறி உள்ளார்.

# புலிகளை என்றுமே ஆதரிப்பேன்


## வைகோ

விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தமிழக, புதுவை பேரவைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம். விடுதலைப் புலிகளை என்றுமே ஆதரிப்பேன் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறினார்.

புதுவையில் சனிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற ம.தி.மு.க. 9ம் ஆண்டு தொடக்கவிழா பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது, தமிழர்களைப் பாதுகாப்பது எங்கள் கடமை. இதில் எந்த அரசியலுமில்லை. இந்தியாவில் இனி 'ஒரு கட்சி ஆட்சி' இருக்க முடியாது. மாநிலக் கட்சிகளை இணைத்துத்தான் மத்தியில் ஆட்சி நடத்த முடியும். அன்ரன் பாலசிங்கம், இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நோயாளி. அவரை பயங்கரவாதி என்று கூறுகிறார் ஜெயலலிதா. ஈழத் தமிழர் விடயத்தில் தற்போது தான் சமாதான பேச்சுவார்த்தை தொடங்கி மக்கள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர். இந்நிலையில் பேரவைகளில் எதற்கு இந்த தீர்மானம்? பாராளுமன்ற வளாகத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ. தான் காரணம் என்று தெரியவந்தது. உடனே பாகிஸ்தான் மீது போர் தொடுக்க பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றுவார்களா? வன்முறைச் சம்பவங்களை நான் நியாயப்படுத்தவில்லை. ஒரு சம்பவத்தை வைத்து தமிழர்களை கைகழுவ போகிறீர்களா? என்றார் வைகோ.

# வாஜ்பாயுடன் நடிக்கும் பார்த்திபன் மகள்

வாஜ்பாய் கவிதைகள் பற்றிய ஆல்பத்தில், அவருடன்



பார்த்திபன்- சீதா தம்பதிகளின் மகள் நடிக்கிறார். மணிரத்னத்தின் கன்னத்தில் முத்தமிட்டால், படத்தில் மாதவன் - சிம்ரன் ஜோடியின் வளர்ப்பு மகளாக நடித்த கீர்த்தனா. 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் நடித்து புகழ்பெற்றதை தொடர்ந்து, பிரதமர் வாஜ்பாய் எழுதியுள்ள கவிதைகள் பற்றிய ஆல்பத்தில், நடிக்கும் வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. இந்த ஆல்பம் வருகிற ஆகஸ்டு மாதம் 15ம் திகதி சுதந்திர தினத்தன்று வெளியிடப்படுகிறது.

இதில், கீர்த்தனா கொடி விற்கும் பெண்ணாக நடிக்கிறார். டெல்லியில் உள்ள வாஜ்பாய் வீட்டில் வாஜ்பாயிடம், அவள் கொடி விற்பனை செய்வது போன்ற காட்சி படமாக்கப்படுகிறது. வாஜ்பாய் கவிதைகள் பற்றிய ஆல்பத்தை பிரபல தமிழ்பட அதிபர் கே.பாலாஜியின் மகன் சுரேஷ் பாலாஜி தயாரிக்கிறார். பிரபல மலையாள டைரக்டர் பிரியதர்ஷன் இயக்கிறார்.

# இந்தியப் பணத்தாளில் புலிகளுக்கு ஆதரவு

இந்தியப் பணத்தாள்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் கருத்துக்கள் எழுதப்பட்டு வருவதால் உளவுத் துறையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சி எற்பட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் புழகத்தில் உள்ள பல ரூபாய்த் தாள்களில் இவ்வாறு புலிகளுக்கு பாராட்டுத் தெரிவித்து எழுதப்பட்டுள்ளதாக அச் செய்தி மேலும் கூறுகின்றது.

PALLMYRA RESTAURANT

பல்மீரா உணவகம்

லூர்ட்ஸ் மாதா அருள் தேடும் அடியார்களுக்கோர் அருமைச் செய்தி !

லூர்ட்ஸ் நகரில் உங்களின் சொந்தக்காரர்களாக, உங்களின் வசதிகளை கவனித்துக் கொள்கின்றனர் பல்மீரா உணவகத்தினர். தங்குமிட வசதியுடன் அறுசுவை இலங்கை-இந்திய உணவினை பெற்றிட தயக்கமின்றி தொடர்புகொள்ளுங்கள்... (சந்தைக்கு பின்புற வீதியில் அமைந்துள்ளது..



33 Rue des Pyrénées, 65100 Lourdes. Tel/Fax : 00 33 (0)5 62 46 13 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUDBURY

## SUPERMARKET

773 Harrow Road, Sudbury, Haozlw
Tel: 0208 9041110


சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை தமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

`Sudbury யில் புதுப் பொலிவுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது

## Sudbury Super Market

ஒருமுறை விஜயம் செய்வீர்களானால் நீங்களே கண்டறிந்து செல்வீர்கள்.

அனைத்து இலங்கை மரக்கறி, மீன் பலசரக்கு வகைகளும்



புதிய, பழைய தமிழ் படங்களை CD, VCD, DVD களில் அனைத்தையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# ரணிலின் கோட்பாடு

சிறீலங்காவின் பிரதமராகப் பதவியேற்ற பின்னர், கடந்த சில மாதங்களாக அடங்கிக்கிடந்த ரணில் விக்கரமசிங்கவின் இனவாதப் போக்கு தற்போது மெல்ல மெல்ல தலைக் காட்டத் தொடங்கியுள்ளது. மாத்தறை ராகம வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசிய சிறீலங்காவின் பிரதமர் ரணில், தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று திட்டவட்டமாக் கூறியுள்ளார். ரணிலின் இந்தக் கூற்றானது சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெறுவது தொடர்பான சாத்தியங்கள் குறித்துப் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தாயகம் — தேசியம் — சுயநிர்ணயம் என்பவற்றை அங்கீகரிக்காத தீர்வொன்றைத் தமிழ்மக்கள் என்றுமே ஏற்றுக்கொள்ளப்போவதில்லை இன்று வடக்கு கிழக்கு மற்றும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் உலக நாடுகள் எங்கும் இக்கோட்பாட்டை வலியுறுத்தியே பல இலட் சக்கணக்கான தமிழ் மக்கள் எழுச்சியுடன் பொங்கு தமிழை நடாத்தி யுள்ளனர், தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர். அத்துடன் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாத பேச்சுவார்த்தையில் விடுத லைப் புலிகள் கலந்துகொள்ளப் போவதில்லை என்பதும் உறுதி. இந்நிலையில், ரணில் விக்கரமசிங்கவின் இக்கூற்று சமாதானம் தொடர்பான நம்பிக்கையைச் சிதைப்பதாகவே அமைந்துள்ளது.

அத்துடன், போர் ஒன்று வெடித்தால் உலக நாடுகளின் ஆதரவைப் பெற்றுப் போரை முன்னெடுக்க முடியாமல் போய்விடும் என்பதுடன் உலக நாடுகளின் உதவி விடுதலைப் புலிகளின் பக்கம் திரும்பி விடுமே என்ற அச்சமும், பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு சர்வதேச சமூகம் மேற்கொண்டுவரும் அழுத்தமுமே புலிகளுடன் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்ற ரீதியிலான ரணில் விக்கிரமசிங்காவின் பேச்சானது, சிங்கள தேசம் எவ்வளவு தூரம் சமாதானத்தின் மீது அக்கறை கொண்டுள்ளது என்பதை வெளிக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 90 நாட்களை எட்டும் நிலையில் அவ் உடன்படிக்கையில் உள்ள பல விடயங்கள் இன்னும் சிறீலங்கா அரசி னால் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. இதில் 30 நாட்களுக் குள் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களே இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அத்துடன் சிறீலங்கா கடற் படை தொடர்ந் தும் உடன்படிக்கையை மீறி, மீனவர்கள் மீதான தாக் குதல்களை அதிகரித்துள்ளது. பொது இடங்களை விட்டு வெளியேற இராணுவம் மறுத்து வருகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி தமிழர் தாயகத்தில் ஓர் இயல்பு நிலை இதுவரை முழுமையாகத் தோற்றுவிக் கப்படவில்லை. இந்நிலையில், அடுத்த மாத இறுதிக்குள் தாய்லாந்தில் இரு தரப்புக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்ற சிறீலங்கா அரச தரப்புகளின் கருத்துக்கள் சாத்தியமாகும் சூழ்நிலை கள் அருகியே வருகின்றன.

## ரணிலின் தோல்வி?

சிறீலங்கா தன்தப்புக்களை உணர்ந்து திருந் துவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இதுதான் என்கின்ற தொனியில் அதன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு துணிச்சலான உரையை சில மாதங்களுக்கு முன் பாரளுமன்றத்தில் ஆற்றினார். தன்னை சந்திரிகாவின் இனவாத அரசியலில் இருந்து பிரித்துக்காட்டும் உத்தியுடன் அவ்வுரையை அவர் ஆற்றியிருந்தாலும் அதில் காணப்பட்ட தைரி யம் பலரையும் ஈர்த்தது. ரணிலின் இந்நிலையை ஆய்வு செய்த கொழும்பு அரசியல் விஞ்ஞான பேராசிரியர் ஒருவர் முதல் மூன்று மாத காலத்தில் ரணிலினால் ஏதாவது உருப்படியாகச் செய்ய முடிந்தால் மாற்றங்களை உருவாக்கலாம். இல் லாவிடின் ரணிலின் இறுதித் தரிப்பிடமும் இனவாத - சீரழிவு அரசியலாகவே இருக்கும் என ஊகம் கூறினார்.

இன்று, ரணிலின் அறிக்கைகளும், நடவடிக்கை களும் மற்றுமொரு சிங்களத் தலைமையும் வழமை போல் இனவாத சாக்கடைக்குள் கால்களைப் பதிக்கின்றதோ என்கின்ற அச்சத்தை தோற்றுவித் துள்ளது. புலிகளுடனும், தமிழர்களுடனும் திறந்த மனதுடன் பேசப்போவதாகக் கூறி வந்தவர் தமிழர் களின் தாயகம் என்கின்ற கோரிக்கையை தான் ஏற்கப் போவதில்லை எனக் கூறத் தொடங்கினார். இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்காக இடைக் கால நிர்வாக அமைப்புத் தேவை என தேர்தல்க ளின் போது கூட தைரியமாகப் பேசியவர் தன்னை அவ்விடயத்திலிருந்து விடுவிக்க முயலும் அறிக்கை களை தற்போது விடுகின்றார். புலிகள் மீதான தடையை நீக்கும் விடயத்தில் பெரும் இழுத்தடிப்புக் கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினை முழு மையாக கௌரவிப்பதற்கு ரணில் இன்னமும் முயலவில்லை.

மாறாக, தனது எதிரியான சந்திரிகாவின் அரசியல் சூழ்ச்சிகளுக்கு ஈடாக தானும் செயற்பட வேண்டும் என்கின்ற நோக்கமே அவரை வழிநடாத்துகின்றது. சந்திரிகா சமாதானத் தளத்தை முழுமையாக நிராக ரிக்காமல் இணக்க முயற்சிகளைக் குழப்ப முயல் வது போல் ரணில் இனவாத தளத்தைக் கைவிடாது இணக்க முயற்சிகளில் சமரசம் காணும் அபாய மான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் போன்று தென்ப டுகின்றது.

இதன் விளைவு மிகமோசமானதாக அமையும். ஒருபுறம், ரணிலின் இயலாமையைப் பயன்படுத்தி சிங்கள கடும்போக்காளர்கள் மெதுவாக தற்போது மையத்தளத்தை கைப்பற்றிவரும் சூழல் உருவா கும். அல்லது, ரணில் தனது இயலாமையை ஈடு செய்ய இனவாதத்தை கைகளில் எடுத்து மற்று மொரு ஜெயசுக்குறுய் சகாசத்திற்கு முயலக் கூடும்.

*முடிவாக, ரணிலும் இனவாத சகதிகளில் கால்களைவைத்தால் அது இலங்கைத் தீவின் முழுமையான உடைவுக்கு வழி வகுக்கும்.*

## பார்வை

## அச்சமூட்டும் செய்தியாளர்கள்!

வாகரை சம்பவம் சிறீலங்காவின் சர்வ தேசப் பரப்புரையைச் சங்கடப்படுத்தி விட்டது. புலிகளின் முகத்தில் கரிபூசப் புறப்பட்டவர்கள் தங்களின் நடவடிக்கைகளுக்கு விளக்கம் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர்.

ஆனால், இந்த சுவராசியமான விடயத்தில் நடன மாடியவர்கள் கொழும்பு சிங்கள இனவாத ஊடக வியலாளர்களும், குறிப்பிட்ட சில இந்திய செய்தி யாளர்களுமே. முதலில் சிங்களக் கடற்படைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பரப்பு ரையை புரிந்தனர். எதற்கும் அவசரப்படும் அமெரிக் கத் தூதுவர் வில்ஸ் ஆயுதங்களைக் கடத்த வேண்டாம் எனப் பகிரங்க அறிவிப்பு விடுத் தார். பின்னர், மெதுவாகப் புலிகள் தமது தரப்பை முன்வைத்தனர். அதற்கான அசைக்க முடியாத ஆதாரங்களையும் முன்வைத்தனர். கண்காணிப் புக்குழு அதற்கான தளத்தைக் கொடுத்தது. தர்க்க ரீதியாகவும் சிங்களத்தின் வாதங்களை நியாப்ப டுத்த முடியாத சூழல் ஏற்பட்ட போது டில்லி - சென்னை செய்தி ஏடுகள் சிலவற்றின் கொழும்பு முகவர்களும், கொழும்பு சிங்கள் ஊடகங்களும் வாயடைத்துப் போயின. வேறுவழிகளை அவர்கள் தேடினார். சிங்கள தரப்பு கண்காணிப்பாளர்களுக்கு எதிராகப் புறப்பட்டது.

ஆயினும், இந்தப் புறநிலைக்குள்ளே புலிகளையும், தமிழீத்தையும், தமிழர்களையும் வெறுக்கும் செய்தி யாளர்கள் எவ்வளவு ஆழமாக உலகளாவியரீதியில் அபிப்பிராயங்களை உருவாக்கும் ஊடகத்துறைக் குள் உள்ளனர் என்பதை அச்சமுடன் பார்க்க வேண்டியுள்ளது. பொய்ச்செய்திகளுக்கு உச்ச வெளிச்சம் கொடுத்துப் புலிகளை மீள மூலைக்குள் தள்ள வேண்டும் என்கின்ற வெறித்தனம் அதில் காணப்பட்டது. கொழும்பில் இருந்த தமிழர் போராட் டத்தைக் கணிப்பிடும் சர்வதேச இராஜதந்திரிகளும் இச்சதிவலையில் சிறுமையுடன் நடப்பதுவும் பீதி யை ஏற்படுத்துகின்றது.

**குறிப்பு:** *சந்திரிகா டில்லியில் அண்மையில் ஆற்றிய உரையை மிகப்பிரமாதமான உரை யென புரோன்ட்லைன் எனும் புலிஎதிர்ப்பு ஏடு புகழாரம் கொடுத்துள்ளது. ஆனால் அதே சந்திரிகாவின் இனவாதத்தை சி.என்.என் செய்தியாளர் தனது கேள்விகள் மூலம் கடந்தவாரம் வெளிக்கொண்டு வந்தார்.*

*- ராஜா*

## கருத்து

## படைதிரட்டல் எதற்கு?

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை படைத்தரப்பினரால் விடுக்கப்பட்ட ஒலிபெருக்கி அறிவித்தல் கேட்டு தமிழ்ச் சமூகம் அதிசயித்து விட்டது. படையில் இணைந்து கொள்ள விரும்பும் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் செங்கலடி கருத்தப்பாலத்தது படை முகாம், மற்றும் மட்டக்களப்பு 23–3 படை அலுவலகத்துக்கு, தேசிய அடையாள அட்டை, பிறப்பத்தாட்சிப் பத்திரம் என்பவற்றுடன் நேரில் வருமாறு அந்த ஒலி பெருக்கி அறிவிப்பு படையினரால் விடுக்கப்பட்டது.

தற்போது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் போர் நிறுத்தம் கடைப் பிடிக்கப்பட்டுவரும் அதே சமயம், பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான சூழலும் உருவாகிவருகின்ற நிலையில் மேலும் ஐயாயிரம் படையினரைத் திரட்ட அரசு களமிறங்கியுள்ளது.

போர் ஒய்ந்து சமாதானமே அரசின் நோக்காக இருந்தால் ஐயாயிரம் படையினரைத் திரட்ட அரசு ஆர்வம் காட்டுவது ஏன்? இது சமாதானத்தின் மீது தமிழ்ச் சமூகமும் சர்வதேச சமூகமும் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதறடிக்கும் நடவடிக்கையா? மறுபுறம் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் இளைஞர்களைப் படைக்குத்திரட்ட அரசு அவசரப்படுவது ஏன். மீண்டும் போர் மூண்டால் தமிழினத்தையே தமிழினத்துடன் மோதுண்டு இரத்த ஆறு ஒட வைக்க அரசு எடுக்கும் தந்திரமா? எது என்னவாக இருந்தாலும் படை திரட்டல் தற்போது அவசியமானதால்ல.

இதேவேளை பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை உரை நிகழ்திய அமைச்சர் திஸநாயக்கா மீண்டும் போர் தொடங்குமானால் வல்லரசுகளின் உதவி மூலம் முறியடிப்போம் எனச் சூழுரைத்துள்ளார். இவை எல்லாவற்றையும் உற்று நோக்கினால் பேச்சுவார்த்தை வெறும் வெளிவேசமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்நிலையில் அரசு தனது படைபலத்தை அதிகரிக்க ஆர்வம் காட்டினால் விடுதலைப் புலிகளும் தம்மைப் பலப்படுத்துவதில் எவ்விதத்திலும் நியாயமுண்டு என்பதது உண்மை.

எனவே தற்கால அமைதிச் சூழலை நிரந்தரச் சமாதானத்திற்கான மையகற்களாகக் கொண்டு முன்னெடுத்துச் செல்லவிரும்பினால் அரசு நம்பிக்கையை கட்டி எழுப்ப வேண்டும். படைதிரட்டல், அந்நிய நாடுகளில் ஆயுத உதவி போன்ற செயற்பாடுகள் சந்தேகத்தைத் தோற்றுவிப்பதுடன் சமாதானத்தை உருவாக்காது என்பது உண்மை.

(தினக்கதிரின் செய்தி ஆய்வில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியச் செய்திகள்

# ஐரோப்பிய எல்லைப் பாதுகாப்புப் பற்றிக் கவலை கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம்

## ஸ்பெயினில் பாஸ்க் கட்சிக்குத் தடை

ஸ்பெயினில் பாஸ்க் சுதந்திர அமைப்பின் அரசியல் பிரிவான பார்த்தசுனா கட்சியைத் தடைசெய்யக் கொண்டுவரப்பட இருக்கும் சட்டத்திற்கெதிராக ஸ்பெயின் நாட்டின் பில்பா ஓ என்ற நகரில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் எந்தக் கட்சியையும் தடைசெய்யும் தீர்மானம் சென்ற மாதம் ஸ்பெயின் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்தே, குறிப்பாக வட ஸ்பெயினின், பாஸ்க் பகுதிமக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

ஊடகங்களின் கருத்துப்படி 'பஸ்கின் ஒற்றுக்கான' என்று பொருள்படும் பஸ்தசுனா கட்சியின் இராணுவப் பிரிவின் E.T.A அமைப்பினர் செய்த கொலைகளையும், குண்டுத் தாக்குதல்களையும், பஸதசுனா ஒருபோதும் கண்டித்ததில்லை என்றும் பரவலாகக் குற்றச்சாட்டுகள் தீவிரமடைந்து வருகின்றன.

ஸ்பெயின் பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கும் இந்தச் சட்டத்தால், சமூக உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, இடதுசாரி அரசியற்தலைவர்களும், கல்விமான்களும் கண்டித்துள்ளனர். ஸ்பெயினில் கடந்த மாநில தேர்தலில் பஸ்தசுனா கட்சியில் இருந்து 10 வீதமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உட்பட, இக்கட்சியின் பல உறுப்பினர்கள் E.T.A அமைப்புடன் தொடர்பு உடையவர்கள் எனக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

மே 7ம் திகதி நடந்த ஐரோப்பிய ஒன்றிய ஆணைக் குழுக் கூட்டத்தில், ஐரோப்பிய எல்லைகளில் ஐரோப்பிய ஒன்றிய மேன்மட்ட பொலிசாரைச் சேவையில் ஈடுபடுத்தும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் ஏற்பட்டு வரும் புதிய அரசியல் மாற்றங்கள் ஐரோப்பாவில் பயங்கரவாதத்தையும், குற்றச்செயல்களையும், சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களையும் கட்டுப்படுத்தக்கூடிய புதிய நகர்வுகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. குறிப்பாக வெளிநாட்டவர் வருகையிலும், அரசியல் அடைக்கலம் கோருபவர்கள் மட்டிலும், ஐரோப்பிய ஒன்றியம் மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பதினாலேயே பிரான்சில் ஜோன் மேரி லுப்பன் போன்ற தீவிர வலதுசாரிகளின் ஆதரவு அதிகரிக்கிறது என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுத் தலைவர் றொமானோ புரொடி அச்சம் தெரிவித்துள்ளார்.

மத்திய தரைக்கடலில் ஸ்பெயினுக்குத் தெற்கே உள்ள கில்றோல்ரா முதல் ரஷ்சிய எல்லையைத் தொடும் பின்ட்லண்ட் வரை கடல்மார்க்கமாகவும், ஐரோப்பிய ஒன்றிய பாதுகாப்பு படையில் இருந்து விசேட தகுதியும், பயிற்சிகளும் பெற்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் கிழக்கு நோக்கி விஸ்தரிக்கும் திட்டத்தின் மீது 2002ம் ஆண்டில் புதிதாக இணைந்து கொள்ள இருக்கும் பத்து அங்கத்துவ நாடுகளும், வெளிநாட்டவர் வருகையைக் கட்டுப்படுத்தும் திட்டத்துக்குச் சவாலாக இருக்கப்போகின்றன என்ற அச்சம் றொமானோ புறொடிக்கும் அவரது ஐரோப்பிய சகாக்களுக்கும் எழுந்துள்ளது.

இந்த நாடுகளுக்கூடாகவே வெளிநாட்டவர்கள் ஐரோப்பாவுக்குள் ஊடுருவுகிறார்கள் என்பதும் இந்த நாடுகளில் உள்ள வறுமை, ஐரோப்பாவுக்குள் வெளிநாட்டவர் ஏற்றுமதியை ஊக்குவிக்கிறது என்பதும், நீண்டகாலத்திட்டத்தின் அடிப்படையிலேயே இதை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதை றொமானோ புரொடி உணர்ந்திருந்தாலும் பிரான்சில், தீவிரவலதுசாரியான ஜோன் மேரி லுப்பனின் வளர்ச்சிக்கும், ஒல்லாந்தில் பிம்போட்றினின் கொலைக்கும், அவர்கள் விதைத்த வெளிநாட்டவர் எதிர்ப்புவாதமே காரணம் என்பதையும் உணராமல் இல்லை.

இவற்றைக் கருத்தில்கொண்டு வெளிநாட்டவர்களைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய எல்லைகளைக் கட்டுப்படுத்தும், ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட இந்தத் திட்டம் தேசிய இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் என்று பலராலும் விமர்சிக்கப்படுவதால், அங்கத்துவ நாடுகளின் ஒருமித்த ஆதரவை நாடிநிற்கிறார் றொமானோ புரொடி..

## இரு துருவங்களும் சந்தித்த இத்தாலி உலக மயப்படுத்தல் மாநாடு

சென்ற சனிக்கிழமை ஆரம்பமாகித், திங்கள்வரை மூன்றுநாட்கள் நடந்து முடிந்த உலக மயப்படுத்தல் மாநாடு, உலக மயப்படுத்தல் பல கோணங்களிலும் விமர்சிக்கப்பட்டு வந்ததற்கு மாறாகப் புதிய வரைவிலக்கணம் கொடுத்தது.

மாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசிய உலக வங்கி தலைவர் ஜேம்ஸ் பூல்பென்சன், செல்வந்த நாடுகள் வறிய நாடுகள் மட்டில் பாராமுகமாய் இருக்கலாம் என்ற மாயையைச் செப்டெம்பர் 11ம் திகதி போக்கியுள்ளது என்றும், வறுமையே சமாதானமின்மைக்குக் காரணம் என்றும், வளர்முக நாடுகளுக்கும் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் இடையில் உள்ள மதில் உடைக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

உலக மயப்படுத்தல், உள்நாட்டுப் பிரச்சினைகளை அணுகுவதில்லை என்ற குற்றச்சாட்டைத் தகற்பதற்காக, இத்தாலி மாநாட்டிற்கு உலகின் பல பாகங்களிலும் இருந்து உள்ளூர் நகர மேயர்களும் உள்நாட்டு வர்த்தகமுகவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மூன்று நாட்களாகத் தொடர்ந்து நடந்த மாநாட்டில் பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்தின் பொருளாதார ஆலோசகர் முகமட்றசிட்டும், இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் சீமோன் பரசும் கலந்துகொண்டது குறிப்பிடும்படியாக அமைந்திருந்தது.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்: 23.08.1957

ஆண்டவன் அடியில்: 08.04.2002

திதி 08.05.2002

## திருமதி வசந்தரஞ்சனி தெய்வேந்திரம்

*(சாவகச்சேரி வடக்கு, வாகையடி)*

இவர் காலம் சென்ற மார்க்கண்டு மற்றும் மகேஸ்வரியின் அன்பு மகளும்; மற்றும் சிவபாக்கியத்தின் பாசமிகு மருமகளும்; தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும்; லண்டனில் வசிக்கும் சுபாஸ், சுதர்சினி, சிவதாசன், சுதர்சன், பிரபா ஆகியோரின் அன்புத் தாயாரும்; உமாசங்கரின் மாமியாரும்; கிரிசாந்தனின் அம்மம்மாவும்; கருணா (சுவிஸ்), மகேந்திரன் (டென்மார்க்) வளர்மதி (இந்தியா) மற்றும் காலஞ்சென்ற சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

மீசாலை வாகையடியில் இடம்பெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியும், ஒத்தாசை புரிந்தும் மற்றும் கடிதங்கள் தொலைபேசி மூலமாக எமது துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புயல் அடிக்கும் தேசம் விட்டு புலம் பெயர்ந்தாயே
புலம் பெயர்ந்த தேசத்தில் நிரந்தரம் இல்லை யென்று
நிரந்தரமாய் உறங்கிவிட்டாய். நிர்ப்பந்தம் தானே தாயே
பாசமுடன் நீ வளர்த்த பிள்ளைகளுடன் நேசமுடன் நீ வாழ்ந்தாய்
மணித்துளிகள் ஒவ்வொன்றும் மகிழ்வுடனே நீ கழித்தாய்
உன் மகிழ்வில் கொண்ட பொறாமையால் கடவுளும்
காலனாய் உன் உயிர் பறித்தானோ தாயே
இல்லை யென்றால் மகனுக்கு மகளாய் பிறப்பாயோ தாயே
மீண்டும் புன்னகை செய்து துயரம் தீர்ப்பாயோ தாயே!

*பிரிவால் துயருறும் குடும்பத்தினர்*

தகவல்: மகன் T.சுபாஸ்
276 CENTRAL ROAD, MORDEN,
SURREY, SM 45 RG
TP- 07960587274

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## வெனிசுலா சதி பற்றி முன்னரே ஜனாதிபதி அறிந்திருந்தாராம்

14.05.02

வெனிசுவேலாவில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற சதிபற்றி தான் முன்னரேயே அறிந்திருந்ததாயும், அதனாலேயே இரகசியமாக இராணுவ அணிகளைத் திரட்டி மீண்டும் பதவிக்கு வரமுடிந்தது என்றும் அந்நாட்டின் அதிபர் ஹீகோ சாவேஸ் சர்வதேச வானொலியொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

உலகின் ஐந்தாவது எண்ணெய் ஏற்றுமதி நாடான வெனிசுவேலாவின் இடதுசாரி ஜனாதிபதிக்கு எதிரான சதி முயற்சியொன்று ஏப்ரல்மாதம் இடம்பெற்றது. இதன்போது முதலாளித்துவ அதிபரான பெட்ரோ கார்மோனா சில இராணுவ தளபதிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றினார். ஜனாதிபதி ஹீகோ சாவேஸ் ஜனாதிபதி மாளிகையில் இருந்து அகற்றப்பட்டு தீவொன்றில் சிறைவைக்கப்பட்டார். ஆனால் இரண்டு நாட்களில் நாட்டின் பிரதான விமானப்படையினரின் தளபதிகள் மற்றும் அரச அதிகாரிகளால் புதிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு ஹீகோ சாவேஸ் பதவியில் மீண்டும் அமர்ந்தார். இதுபற்றி தனது பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார். சதிக்கு சில நாட்களின் முன்னர் பெட்ரோல் ஏற்றுமதி அமைப்பின் செயலாளரான அலி ரொட்ரிகுவேஸ் தனக்கு, தொலைபேசியில் சதியொன்றுக்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக அறிவித்தார் என்றும் தனக்கு எதிரான சதியில் அமெரிக்க அதிகாரிகள் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்றும் கூறியுள்ளார்.

சதி இடம் பெற்றவேளை சட்டவிரோதமாக இரகசியமாக வெனிசுவேலா கடற்பகுதிக்குள் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று பிரவேசித்தது என்றும் அதிலிருந்து உலங்கு வானூர்தி மூலம் சதிகளுக்கான தலைமையகத்துக்கு பலர் வந்து சென்றனர் என்றும் கூறியுள்ள வெனிசுவேலா அதிபர் அதற்கான வீடியோ படங்கள், செய்மதி படங்கள் மற்றும் வந்து சென்றவர்களது பெயர்களும் தன்னிடம் உள்ளன என்று கூறியுள்ளார்.

## தலைநகர் நோக்கி தீவிரவாதிகள் முன்னேற்றம் ஐ.நா.வின் உதவியை டெய்லர் கோருகிறார்

14.05.02

மேற்கு ஆபிரிக்க நாடான லைபிரியாவில் அதிபர் சார்ள்ஸ் டெயிலரின் அரசுக்கு எதிராகப் போராடிவரும் லைபீரிய ஜனநாயக முன்னனி தீவிரவாதிகள் தலை நகர் மொன்ரோவியாவின் புறப்பகுதிகளில் நிலை கொண்டுள்ளனர். அப்பகுதிகளில் அரச இராணுவத்திற்கும் தீவிரவாத படைப்பிரிவுகளுக்கும் இடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. தலை நகருக்குள் தீவிரவாத படையயணிகள் நுளையலாம் என்ற அச்சத்தில் பல ஆயிரம் மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து வருகின்றனர். இந்தியாவில் ஐ.நாவின் உடனடியான தலையீட்டை ஜனாதிபதி கோரியுள்ளார்.

ஐ.நாவின் பாதுகாப்புச்சபையினால் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ள சார்ள்ஸ் டெயிலர் மேற்கு ஆபிரிக்காவின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகமாயுள்ளார் என்று பரவலான குற்றச்சாட்டு உள்ளது. அத்துடன் லைபீரியாவுக்கான ஆயுத ஏற்றுமதி தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் லைபீரியா சியேரா லியோனின் தீவிரவாதிகளுக்கு உதவி வரும் அதே வேளை கினேயா லைபீரியாவின் தீவிரவாதிகளுக்கு உதவி வருகின்றது. கடந்த பெப்ரவரி மாதம் தீவிரவாதிகளின் அணிகள் கடுமையான தாக்குதல்களை அரச இராணுவம் மீது ஆரம்பித்தன.

1989ம் ஆண்டு சார்ஸ் டெயினர் சர்வாதிகாரி சாமுவேல் டோவின் ஆட்சிக்கு எதிராக ஆரம்பித்த சிவில்யுத்தம் இன்று அவரது ஆட்சிக்கு எதிராகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக் தாக்குதலில் 11 பிரெதஞ்சுப் பிரஜைகள் பலி

994ம் ஆண்டு பிரெஞ் பாகிஸ்தான் ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தானில் நீர்மூள்கிக கப்பல் கட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சு தொழிலாளர்களை இலக்கு வைத்தே இந்தக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

சென்ற வியாழக்கிழமை நடை பெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலில் 11பேர் கொல்லப் பட்டும். 12 பேர் படுகாயமடைந்தும் மேலும் பலர் சிறு காயங்களுக்கும் உள்ளாகி. மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டும் உள்ளனர். புதிய பாதுகாப்பு அமைச்சர் மிசெல் அயோமரி உடனடியாக பாகிஸ்தான் சென்று தாக்குதல் நடந்த இடத்துக்குச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார். 12 பிரெஞ்சு தொழிலாளர்கள் காயமடைந்த நிலையில் வியாழக்கிழமையே சிகிச்சைக்காகப் பிரெஞ்சின் இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் உடல்கள் அவர்களின் சொந்த நகரமும். கப்பல் கட்டுவதில் பிரபல்யம் பெற்றதுமான சாபோண் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.. சாபோண் நகர மேயர் சென்ற வெள்ளிக்கிழமையை நகரின் துக்கதினமாகப் பிரகடனப்படுத்த இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.. பிரெஞ்சு பயங்கரவாத எதிர்ப்புப் பொலிசாரும் சர்வதேச பாதுகாப்புப் பிரிவில் இருந்து மூன்று பேர் அடங்கிய குழு வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் சென்றுள்ளது.

## நேட்டோ - ரஷ்யா ஐஸ்லாந்தில் சந்திப்பு

14.05.02

வட அத்திலாந்திக் நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் ரஷ்ய அமைச்சரின் சந்திப்பு ஐஸ்லாந்தில் இடம்பெற்றுள்ளது. சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளில் இரு தரப்பினரும் கூட்டாக செயற்படுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஆதரவு தருமாறு வட அத்திலாந்திக் நாடுகளின் (நேட்டோ) அமைப்பின் செயலாளர் நாயகம் ரொபேட்சன் கோரியுள்ளார்.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பேசிய ரொபேட்சன் கடந்த செப்டம்பர் 11ம் திகதிய தாக்குதல்கள் கூட்டுச் செயற்பாடுகளுக்கான அவசியத்தைத் தெளிவு படுத்தியுள்ளன என்றார். இரண்டு நாட்கள் இடம் பெறவுள்ள இம்மாநாட்டில் எதிர்கால நேட்டோ - ரஷ்யா அமைப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள் காணப்படும் என்றும் புதிய ஒருங்கிணைந்த அமைப்பு ஆயுத கட்டுப்பாடு, அமைதி நடவடிக்கை, பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகள், பிராந்திய சிக்கல்கள் போன்றவற்றில் ஒன்றுபட்ட முடிவினை எடுக்கும் என்றும் ரஷ்யாவுக்கு இவ் அமைப்பில் பிரதான இடம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த பத்து வருடங்களில் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் தம்மிடம் உள்ள அணுசக்தி ஏவுகணைகளில் மூன்றில் இரண்டு பகுதியை அழித்துவிடும் சரித்திர பூர்வ ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதுபற்றி அறிவித்துள்ளன என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

## பாலஸ்தீன அரசு அமைவதில் அமெரிக்க, இஸ்ரேல் அதிபர்கள் தீவிரம்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மத்திய கிழக்கில் ஸ்திரமான நிலை ஏற்படுவதற்கு பாலஸ்தீன அரசு ஒன்று உருவாக வேண்டும் என்று கூறியுள்ளார். இதனை உறுதிப்படுத்திய இராஜாங்க செயலர் கொலின்பவல் உலகில் பெரும்பான்மையானோர் இதுபோன்ற தீர்வினையே விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ளார். அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பிய இஸ்ரேலிய பிரதமர் ஆரியல்சரோன் பாலஸ்தீன அரசு அமைவதுபற்றி அமைச்சரவையில் பிரஸ்தாபித்தபோது அவரது லிக்குட் கட்சியினர் அதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வாக்களித்தனர். வட அத்திலாந்திக் நாடுகளின் அமைப்பின் மாநாடு ஐஸ்லாந்தில் ஆரம்பமாகின்றது. இதில் கலந்துகொள்ளச் செல்வதற்கு முன்பாக தொலைபேசியில் ச்ரோனுடன் உரையாடிய பவல் பாலஸ்தீன அரசு அமைக்கப்படுவதில் தாம் உறுதியாக உள்ளதாகக் கூறியுள்ளார்.

வலதுசாரி லிக்குட் கட்சியினர் பாலஸ்தீன அரசு அமைவுக்கு எதிராக வாக்களித்தது பற்றி கருத்துத் தெரிவித்த ஆரியல் ஷரோன் சமாதான திட்டங்கள் பற்றி முடிவெடுப்பது தானேயன்றி கட்சியினர் அல்ல என்று கூறியுள்ளதுடன், நாட்டில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் தனக்கு வாக்களித்தது முடிவுகள் எடுப்பதற்காகவே அதனைத் தான் செய்வேன் என்றுள்ளதுடன் உட்கட்சி அரசியல் தீர்மானங்களுக்காவும் தந்திரங்களுக்காகவும் பணிந்துபோக தன்னால் இயலாது என்றும் கூறியுள்ளார்.

## பிரித்தானிய செய்தியாளர் பாகிஸ்தானில் கைது உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு

14.05.02

பிரித்தானிய செய்தி ஏஜென்றின் செய்தியாளர் ஒருவர் ஆப்கான் தலைநகர் காபூலில் இருந்து பாகிஸ்தான் செல்லும் வழியில் எல்லைப்பகுதியில் வைத்து பாக் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். வடமேற்கு பாகிஸ்தானில் பெஷாவாருக்கு அருகே லன்டிகோட்டால் எனும் சிறையில் வைக்கப்பட்டுள்ள அவர் பாகிஸ்தானுக்கு எதிராக உளவு வேலைகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் பிறந்த இந்தியரான மேற்படி செய்தியாளர் பாகிஸ்தானுக்குள் நுளைவதற்கான சரியான அனுமதியைக் கொண்டிருக்கவில்லையென்றும் கடவுச்சீட்டில் குளறுபடிகள் காணப்பட்டன என்றும் பாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


டென்மார்க் வாழ் அனைத்து தமிழ் மக்களதும் நம்பிக்கையைப் பெற்ற ஓரேயொரு பிரயாண முகவர் நனா ரவல்ஸ்.

Srilankan Airlines இன் டென்மார்க்கின் ஏக விற்பனையாளர்கள் நாமே.

தொடர்புகளுக்கு: நனா ரவல்ஸ்

| DENMARK | LONDON | SRI LANKA | INDIA |
|---|---|---|---|
| Mr.Neilwashington | Mr.S.Thasan | Mr.S.Rajan | Mr.Kevin joseph |
| Nanna Rejser | Nanna Travels Ltd | Nanna travels Ltd | Nanna travels |
| Fredensgade 1 | 14 pinglestone close | S-82 Bristol Street | no. 71 Kasiestate |
| 7400 Herning | Westdrayton, Middx | Colombo-1 | Ashokngar, madras 83 |
| T.P. 0045-97 21 41 47 | UB7 0DL, England | Srilanka | T.p.0091 44 48 96 325 |
| Mobil. 27 44 36 06 | T.p: 0044-2088979694 | T.P.0094-74 71 28 35 | Mobil -0091 98 41 08 98 35 |
| Fax 00 45 97 21 42 47 | Mobil-0044-7789268979 | Fax-00 94-74 71 49 90 | fax-0091 44 48 93 991 |
| nannatravels@mail.dk | nannatravels@hotmail.com | nannatravels@vsnl.com | nannatravels@vsln.com |

Pub D

Nanna Travels

Denmark

எமது தற்போதைய விலை விபரங்கள்

Airlanka
Billund-Colombo- 5555+Tax
Copenhagen-Colombo-5055+Tax
Billund-Madras- 5620+Tax
Copenhagen-Madras- 5240+Tax

Lufthansa
Billund-Madras- 6300+Tax
Billund-Singapore - 5250+Tax

Emirates
Billund-Colombo- 6100+Tax

GulfAir
Billund-colombo- 4995+Tax
Billund-Madras- 4875+Tax

நாம் Airlanka, Kuwait Airways, Gulfair, Singapore Airlines, Emirates, Thai, Maersk போன்றவற்றின் நேரடி முகவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கையாக இல்லை விடுதலைப் போராட்டமாகவே புலிகள் நோக்குகின்றனர்

**அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா.வின் சிறுவர்கள் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சர்வதேச ஊடகமான சீ.என்.என். தொலைக்காட்சிக்கு கடந்த புதனன்று (08.05.2002) இரவு செவ்வியொன்றை வழங்கினார். சீ.என்.என். தொலைக்காட்சியின் கேள்வி - பதில் பகுதியில் செய்ன் வேர்ஜி என்ற பெண் பேட்டியாளர் கேட்ட கேள்விகளுக்கு சந்திரிகா குமாரதுங்கா அளித்த பதில்களில் இருந்து சிலவற்றை இங்கு தருகின்றோம்.**

*வேர்ஜி:— பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளுக்கு நீங்கள் ஆதரவளிக்கின்றீர்களா?*

சந்திரிகா:— நிச்சயமாக. இந்த நடவடிக்கைகளை ஏழு வருடங்களுக்கு முன்பு நான் ஆரம்பித்திருந்தேன்.



சந்திரிகா உரையாற்றுகிறார்

முன்னைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ்ப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. எவ்வளவு துரிதமாக யுத்தம் முடிவுறவேண்டுமோ அவ்வளவு விரைவாகப் போருக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதே எனது கொள்கையாகும். தமிழ் மக்கள் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப் பட வேண்டும்.

*வேர்ஜி:— யுத்தத்துக்கு முடிவுகட்டுவதே தங்கள் நோக்கம் எனக் கூறுகிறீர்கள். ஆனால், இது தொடர்பாகத் தாங்கள் கைக்கொள்ளும் உபாயமானது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்வதிலிருந்து வேறுபட்டிருக்கிறதே? அவரின் [பிரதமரின்] தந்திரோபாயம் அதிகளவு தளர்வுப் போக்கையும் நிரம்பவும் விட்டுக் கொடுப்புக்களையும் உள்ளடக்கியதாக உள்ளதே? நீங்கள் வழங்க முன்வராததை அவர் வழங்க முன்வந்திருப்பதாகத் தென்படுகிறதே?*

சந்திரிகா:— எந்தவிதமான விட்டுக் கொடுப்பனவுகள் குறித்து நீங்கள் கூறுகிறீர்கள்?

*வேர்ஜி: உதாரணமாக புலிகள் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பிரதமர் இணங்கியுள்ளார். பாதுகாப்பு ரீதியான சலுகைகளை வழங்கியுள்ளார். அரசியல் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. மறுபக்கத்தில் புலிகள் மீது கடுமையான நிபந்தனைகளைத் தாங்கள் விதித்திருக்கிறீர்கள். ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என [கைவிட] கோரியுள்ளீர்கள். ஈழக்கோரிக்கையைக் கைவிட வேண்டும் எனக் கூறியிருந்தீர்கள், இராணுவத் தீர்வை முன்னெடுக்க முயன்றீர்கள். இவை பற்றியே நான் குறிப்பிடுகின்றேன்.*

## 'நீங்கள் முன்வைக்கும் கருத்தையே அரசாங்கம் செய்யவேண்டும் என்றால் பேச்சுவார்த்தை இடம்பெறாது'

### – சந்திரிகாவிடம் சி.என்.என் கேள்வி –

சந்திரிகா:— இது சரியானதொன்றல்ல. 1994ல் நாம் ஆட்சிக்கு வந்தபோது ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 10 நாட்களில் பதவி அந்தஸ்தை ஓரங்கட்டி வைத்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்து விடுதலைப் புலிகளின் தலைவருக்கு நானே கடிதம் எழுதினேன். யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டோம். நீங்கள் இப்போது கூறியது போன்ற எந்தவொரு நிபந்தனைகளையும் நாங்கள் முன்வைக்கவில்லை. வடக்கிற்குப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதைத் தளர்த்தினோம். ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய அரசாங்கம் 108 ரக பொருட்களுக்குத் தடைவிதித்திருந்தது. நாம் அவற்றைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதித்தோம். 8 மாதங்கள் வரை அவர்களுடன் பேசினோம். ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்கவில்லை. எந்தவொரு நிபந்தனையுமின்றியே பேசினோம்.

*வேர்ஜி:— அப்படியானால் உங்கள் தந்திரோபாயம் ஏன் தோல்விகண்டது? தற்போதைய உபாயமானது வெற்றியளிப்பதாகக் காணப்படுகிறதே?*

சந்திரிகா:— நல்லது. அப்படியானால் அமெரிக்கா, மற்றும் வல்லரசுகளின் தந்திரோபாயம் ஏன் தோல்வி கண்டது? இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினைக்கு 54 வருட காலமாகத் தீர்வுகாண முடியாமல் உள்ளதே?

*வேர்ஜி:— அந்த விடயம் இந்த விவகாரம் போன்றதல்ல. கடந்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலில் தாங்கள் தோல்விகண்டு விட்டீர்கள். விக்கிரமசிங்கவின் கட்சி ஆட்சியமைத்தது. அவர் அரசின் தலைவராக உள்ளார். சடுதியான மாற்றம் ஏற்பட்டுள்ளது.*

சந்திரிகா:— இத்தகைய மாற்றம் 1993ல் அவர் பிரதமராக இருந்து 1994ல் தோற்கடிக்கப்பட்டு எனது கட்சி ஆட்சிக்கு வந்தபோதும் ஏற்பட்டது. 8 மாத காலம் புலிகளுடன் பேசினோம். அந்த மாதிரியே இப்போதும் நடைபெறுகிறது. அச்சமயம் தமிழ் மக்கள் மத்தியில் நாம் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தோம். 1994ல் 82 சதவீதமான தமிழ் மக்கள் எமக்கு வாக்களித்திருந்தனர். ஆனால் நாம் சமாதான நடவடிக்கையில் வெற்றி பெறவில்லை. அதேசமயம், பேச்சுவார்த்தை மேசை -க்கு வருவதற்குப் புலிகள் இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை. அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குத் தருவிப்பதே மிக முக்கியமான விடயமாகும். இதுவரை அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை.

*வேர்ஜி:- தங்கள் நிர்வாகத்தின் தவறுகள், தோல்விகள் என்று அவற்றை நீங்கள் கருதவில்லையா? ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கைகளில் எவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும் என தாங்கள் நினைக்கிறீர்கள்?*

சந்திரிகா:— எனது நிர்வாகம் குறித்து நீங்கள் தெரிவிக்கும்போது இப்போதும் நான்தான் ஜனாதிபதி என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளவில்லையோ என்பது எனக்குத் தெரியவில்லை?

*வேர்ஜி:— மன்னிக்கவும். தங்களுக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லை என்றே நான் கருதி அவ்வாறு தெரிவித்தேன். தங்களிடம் நிறைவேற்று அதிகாரம் மட்டும் தான் உள்ளது. நீங்கள் அரசாங்கத்தின் தலைவர் அல்ல.*

சந்திரிகா:— நான் அரசினதும், நாட்டினதும், அமைச்சரவையினதும் தலைவி. தமிழ்ப் புலிகள் சுலபமாகக் கையாளக்கூடியவர்கள் அல்ல. அல் ஹைய்டா முன்னணிக்கு வரும்வரை புலிகளே உலகில் மிகவும் கொடூரமான பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்டனர். அவர்கள் தமது விடயங்களில் மிகவும் திறமையானவர்கள். அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு யுத்தத்தைக் கைவிட்டு வருமாறு அவர்களைத் தூண்டுவது இலேசானதொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க ஐ.நா. மாநாட்டில் உரையாற்றும் சந்திரிகா குமாரதுங்கா. அருகில் உலகின் முதல் பெரும் செல்வந்தரான பில் கேட்ஸ் அமர்ந்துள்ளார்.

றல்ல. வன்செயலும், பயங்கரவாதமுமே அவர்களின் பிரதான தந்திரோபாயம் என நம்புகின்றனர். அரசாங்கம் சகல உரிமைகளையுமே கைவிட ஆரம்பித்துள்ளதென நான் நினைக்கின்றேன். புலிகளுக்குப் பல விட்டுக் கொடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வேர்ஜி:— *புலிகள் மீதான தடையை அகற்றுவதற்கு ஆதரவளிக்கிறீர்களா?***

*சந்திரிகா:—* விசேட நிபந்தனைகளுடனேயே ஆதரவளிப்பேன்.

**வேர்ஜி:— *எத்தகைய நிபந்தனைகள்?***

*சந்திரிகா:—* பேச்சுவார்த்தைக்கு வருவதற்குப் புலிகள் இணங்கிய பின்பு, பேச்சுக்கள் சுமுகமான முன்னேற்றம் கண்டபின்பு தடை நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இரண்டாவதாகப் பயங்கரவாதத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வருவதை அவர்கள் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தை மூலமான தீர்வு எட்டப்படும் வரை ஆயுதங்களை கைவிடுமாறு நாம் வலியுறுத்தமாட்டோம்.

**வேர்ஜி:— *தமது நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கைகளாக அவர்கள் (புலிகள்) கருதவில்லை. இதனை விடுதலைப் போராட்டமாகவே அவர்கள் நோக்குகின்றனர். பேச்சுவார்த்தைக்கு முன்னர் தடையை நீக்கக் கூடாதென்பது உங்களின் நிலைப்பாடாக உள்ளது. ஆனால், தடை நீக்கத்தை அவர்கள் வலியுறுத்துகின்றனர். நீங்கள் என்ன கருத்தை முன்வைக்கிறீர்களோ அதனையே அரசாங்கம் செய்ய வேண்டும் என்றால் பேச்சுவார்த்தை இடம்பெறமாட்டாது.***

*சந்திரிகா:—* நல்லது. ஒருவர் என்ன விரும்புகிறார் என்பதை மற்றவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியும்.

**வேர்ஜி:— *ஒருவர் என்ன விரும்புகிறார்?***

*சந்திரிகா:—* கடந்த கால அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்வது அவசியம். எனது அரசாங்கம் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி ஆட்சியிலிருந்தபோதும் பல தடவைகள் முயற்சித்தபோதும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான விருப்பத்தை அவர்கள் (புலிகள்) வெளிக்காட்டவில்லை.

**வேர்ஜி:— *15 வருடங்களுக்குப் பின்னர் புலிகளின் தலைவர் தொலைக்காட்சியில் காட்சியளித்துள்ளாரே?***

*சந்திரிகா:—* இது பிரமாதமானது.

**வேர்ஜி:— *பிரமாதமானதுடன் முன்னர் இடம்பெற்றிராத சாதகமான சமிக்ஞையாக இது காணப்படுகிறதே?***

*சந்திரிகா:—* இது அதிக சாதகமானதோ இல்லையோ எனக்குத் தெரியாது. சிறீலங்கா ஜனாதிபதிக்கு அவர் கடிதம் எழுதியிருந்தார். சிங்களத் தலைவர்களில் ஒருவருக்கு முதல் தடவையாகப் புலிகளின் தலைவர் கடிதம் எழுதியிருந்தது எனக்கேயாகும். அவரும் நானும் 44 கடிதங்களைப் பரிமாறினோம். அவரும் நானும் கைச்சாத்திட்டிருந்தோம். இவற்றைவிட எனது முன்னைய அரசாங்கம் நோர்வேயை அனுசரணையாளராக வரவழைத்திருந்தது.

**வேர்ஜி:— *இந்த நடவடிக்கைகளைவிட்டு நீங்கள் கவலையடைந்துள்ளீர்களா? விடயங்கள் குறித்து தங்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை எனவும், ஓரங்கட்டப்பட்டுவிட்டதாகவும் கருதுகிறீர்களா? பல வருடங்களாக நீங்கள் முயற்சித்த விடயம் தொடர்பாக கிடைக்கும் பெருமையைத் தாங்கள் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ள முடியாதென்பதால் நீங்கள் மகிழ்ச்சியாக இல்லையெனச் சிலர் தெரிவித்துள்ளனரே? அதாவது இந்த அரசாங்கத்துக்கு அந்தப் பெருமை கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறதே?***

*சந்திரிகா:—* எனது நாட்டில் யுத்தம் முடிவுறும் விடயத்தைப் பார்க்கும் பெருமை எனக்குக் கிட்டவேண்டும் என விரும்புகிறேன். இதற்கான பெருமை எவருக்குக் கிடைக்குமோ அது பற்றி நான் கவனிக்கப் போவதில்லை. ஆயினும் நான் நாட்டின் தலைவராக இருக்கிறேன்.

**வேர்ஜி:— *ஒருவரும் தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை எனக் கருதுகிறீர்களா?***

*சந்திரிகா:—* நான் மக்களின் அரசியல்வாதி. எனது மக்கள் என்னை வீட்டுக்குப் போகுமாறு கூறினால் மட்டுமே நான் தனிமைப்படுத்தப்பட்டதாகக் கவலைப்படுவேன். பிரதமர் என்னுடன் கலந்தாலோசனைகளை நடத்துகிறார். யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தான் விபரங்களை அவர் என்னிடம் தெரிவித்திருக்கவில்லை. சட்ட ரீதியாக, அரசியலமைப்பு ரீதியாக அதனை அறிவிப்பதற்கான கடப்பாடு அவருக்குண்டு.

**வேர்ஜி:— *தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பாக தங்களின் எதிர்பார்ப்புகள் எவை?***

*சந்திரிகா:—* எனது மக்களின் அபிலாசைகளே எனது எதிர்பார்ப்பாகும். விசேடமாகத் தமிழ் மக்களின் அபிலாசைகள் முன்னர் போன்று இல்லாமல் புலிகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வு குறித்துப் பேசவேண்டும். சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் கௌரவத்துடன் சமவாய்ப்புகளுடன் வாழவேண்டிய தீர்வு காணப்பட வேண்டும். நாட்டைத் துண்டாடாமல் ஒரு தேச அரசு என்ற வரையறைக்குள் தீர்வு எட்டப்படுவதாகப் பேச்சுவார்த்தை அமையவேண்டும்.

# விடுதலைப் புலிகள் இலேசானவர்கள் அல்ல

## அவர்களே தமிழர்களுக்காக செயற்படப்போகும் ஒரே சக்தி

*சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனான கேள்வி–பதிலுக்கு சற்று பின்னர், செய்ன் வேர்ஜி, சந்திரிகாவின் இப் பேட்டி தொடர்பாக இலண்டன் கல்லூரியில் பொருளியல் துறையில் விரிவுரையாளரும் 'நாடுகள்–தேசங்கள்–இறையாண்மைகள், சிறீலங்கா - இந்தியாவும் தமிழீழ இயக்கமும்' என்ற நூலை எழுதிய ஆசிரியருமான சுமந்ரா போஸ் அவர்களிடமும், சிறீலங்கா தேசிய சமாதான சபைக்கான இயக்குநரும் ஆராச்சியாளருமான ஜெகான் பெரேரா இடமும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கேள்விகளைத் தொடுத்தார்.*

**வேர்ஜி:—**
(ஜெகான் பெரேராவிடம்) சில நிமிடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி குமாரதுங்காவுடன் நடந்த செவ்வியிலிருந்து முதலில் நீங்கள் என்ன விளங்கிக் கொள்கிறீர்கள்? சமாதான நடைமுறைக்கும் அது தொடர்ந்து செயற்படும் முறைக்கும் அவர் பூரணமான அர்ப்பணிப்புடன் இருக்கிறார் என நீங்கள் நம்புகிறீர்களா?

**ஜெகான் பெரேரா:—**
ஒரு வழியில் பார்க்கப்போனால் இன்றைய சமாதான நடைமுறைக்கு அத்திவாரம் இட்டவரே ஜனாதிபதி குமாரதுங்கா தான். புலிகளுடன் கடந்த காலத்தில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவரும் அவரே. இதன் விளைவாக கடுமையாகப் பாதிக்கப்பட்டவரும் அவரே. எனவே அவருக்குச் சில உளவியல் தடைகளும் ஈடுபடுவதற்கு ஒரு கடந்த காலமும் இருப்பதாகவும் நான் கருதுகிறேன்.

அத்தோடு கடந்த 50 வருடங்களாக இலங்கை அரசியலில் அரசாங்கங்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனையும்போது எதிர்க்கட்சிகள் தங்களது குறுகிய குருட்டுத்தனமான கட்சிக் கொள்கைகளுக்காக அம்முயற்சிகளை சூழ்ச்சியாக அழித்துவிடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய கட்டுப்பாடுகளோடுதான் ஜனாதிபதி குமாரதுங்கா ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார் என்று நான் எண்ணுகின்றேன். அவர் இதனை கஷ்டப்பட்டுக் கடந்தாகவேண்டும்.

**வேர்ஜி:—**
(சுமந்ரா போஸிடம்) ஜெகான் பெரேரா சொல்வதில் இருந்து பார்க்கப் போனால் அவர் கூறுவதில் தனிப்பட்ட கருத்து வெளிப்படுவது போல் உள்ளதல்லவா?

**சுமந்ரா போஸ்:—**
ஒரு தனிப்பட்ட அம்சம் இருக்கக்கூடும். இது துரதிஸ்டவசமானது. ஆனால், திரு.பெரேரா சரியாகக்கூறியதுபோல், ஜனாதிபதி குமாரதுங்கா தனிப்பட்ட ரீதியில் மறுப்பான நிலைப்பாட்டை கொண்டிருப்பதற்கு அவரை முற்று முழுதாகக் குறை கூறமுடியாது. சமாதான நடைமுறைக்கு அவர் தெளிவில்லாத மனப்பான்மையைக் கொண்டுள்ளார் என்பதையே அவருடைய செவ்வி காட்டுகிறது. இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுள் ஒரு கட்சியும் அதனுடைய தலைவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளும் முயற்சிகளை அழித்துவிடுவதற்கு ஜனாதிபதியைத் தலைவராக் கொண்ட மற்றக்கட்சி முனைவதன் மூலம் சிறீலங்காவில் சரித்திரம் மீண்டும் நிகழாது என்று நான் உண்மையாகவே நம்புகிறேன்.

**வேர்ஜி:—**
(ஜெகான் பெரேராவிடம்) நீங்கள் இருவரும் கூறியதிலிருந்து திருமதி குமாரதுங்காவின் கருத்துக்களிலிருந்து இந்த சமாதான நடவடிக்கையில் நாங்கள் தமிழ்ப் புலிகளில் கடும் நம்பிக்கையை வைத்திருக்க வேண்டுமா?

**ஜெகான் பெரேரா:—**
தற்போதைய அரசுடன் தமிழ்ப் புலிகள் மிகவும் நன்றாகவே ஒத்துழைத்து வருகிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால், இன்று நடப்பதை ஆறு மாதங்களுக்கு முன்னர் நாம் கற்பனை செய்து கூட இருக்க முடியாது. அவ்வளவு நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த ஆறு மாத காலமாக ஒருவருமே தனது உயிரை இழக்கவில்லை. நாள் ஒன்றுக்கு 10 பேர் உயிரிழந்தார்கள். எனவே நாம் 1500 உயிர்களை காப்பாற்றியுள்ளோம். உச்ச அளவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரம்ப ஒத்துழைப்பு இருக்கிறது. கடலில் சில சண்டைகள் நிகழ்ந்ததுபோல் சில மோதல்கள் ஏற்பட்ட போதிலும் இருபக்கத் தலைமைத்துவங்களும் அவற்றுக்கு முக்கியத்தவம் கொடுக்காமல் இருப்பது மிகவும் சாதகமான தன்மையைக் காட்டுகிறதென நான் நினைக்கிறேன்.

**வேர்ஜி:—**
(சமந்ரா போசிடம்) இவையெல்லாம் இங்கே அனுகூலமான சமிஞ்சைகளானால், இவற்றை மூழ்கடிக்கக்கூடியது எது?

**சுமந்ரா போஸ்:—**
தற்சமயம் வெளிப்படையாக இல்லாமல் மறைமுகமாகச் செயற்படும் பிளவுகளே இந்த சமாதான முயற்சிகளை மூழ்கடிக்கக்கூடியவை.

*தொடர்ச்சி 19ம் பக்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்குதமிழ் 2002



## பிரான்ஸ்

தாயகத்தில் பொங்குதமிழ் நிகழ்வு வரலாறு காணத தமிழ் மக்களின் எழுற்சியுடன் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் இன்றைய நிலையில் பிரான்ஸில் நடைபெறும் நிகழ்வில் எமது சங்கமும் ஆதரித்து வாழ்துகிறது.

**வால்துமான் தமிழ்ச் சங்கம்**

பொங்கு தமிழ் நிகழ்வின் சிறப்பும், முக்கியத்துவமும் வெற்றிபெற வாழ்த்தி காற்றினைப் போல புயலென அனைவரும் ஒன்றாக திரண்டு சங்கம் வளர்த தமிழ் வாழ்க வளர்கவென தாழ் பணிந்து தமிழ்த்தாயை தலை சாய்து வணங்குகின்றோம்.

**தமிழர் ஐக்கிய கலை கலாச்சார மன்றம். தொர்சி**

களம் கண்ட மக்கள் இளைப்பாறும் வேளை, புலம் பெயர்ந்த மக்கள் நாம் பொங்கியெழுந்து பலம் சேர்த்து நிற்போம்!

**நொய்சி லூ கிரான்**

அடக்குமுறையை அடியோடு ஒழித்திட
ஆண்ட பரம்பரை மீண்டும்
ஆழ்வோமென
இரத்த உறவுகள் இனியும் மடியாதிருக்க
ஈழத்தமிழர் இனியும் அடிமை
யாகாரென்று
பொங்கி எழடா தமிழா பொங்கியெழு
என வாழ்த்தி நிற்கும்...

**பிரஞ்சுத் தமிழர் சங்கம் லாகொர்நோவ்**

## வாழ்த்துவோம்

## வலுச்சேர்ப்போம்

பொங்கு தமிழ் கோரிக்கைகளுடன் பாரிஸ் நகரில் நடைபெறும் பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் உணர்வெழுற்சியுடன் பங்கு கொண்டு இவ்வெழுச்சி உலகம் பூராவும் பரந்து பேரெழுற்சி கொள்ள வேண்டுமென வாழ்துகிறோம்.

**புனர் வாழ்வுக் கழக கிளை கிளிச்சி**

எமது பௌதிக இருப்பு புகலிடத்திலும், எமது உணர்வின் இருப்பு தாயகத்துடனுமாக தத்தளிக்கும் புலம்பெயர் மக்களாகிய நாம் எம்மனங்களின் உணர்வுப் பொங்களை வெளிப்படுத்தும் வாய்பாக அமைந்துள்ள பாரிஸ் பொங்கு தமிழ் நிகழ்வு தாயகத்தின் சொல்லொனா துன்பங்களுக்கு முகம் கொடுத்து நிமிர்ந்து நிற்கும் எம்மக்களுக்கு வலுச் சேர்கவும் எமது மக்களின் உணர்வுகளால் வெளிப்பட்டு விரியும் அதிர்வுகள் உலகின் மனச்சாட்சியை உலுகட்டுமென வாழ்தி நிற்கும்...

**புனர் வாழ்வுக்கிளை இபினிசு செயின்**

எங்கள் வாழ்வும் வழமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு
தாயகத்தில் மக்கள் எழுச்சியுடன் நடைபெற்ற பொங்கு தமிழ் பிரான்ஸிலும் எழுச்சியுடன் எம்மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அங்கீரிக்கப்படும் வரை பொங்கியெழுவோமென பொங்குதமிழை வாழ்த்தும்...

**தமிழர் புனர் வாழ்வுக்கிளை சேர்ஜி பொந்துவாஸ்**

பொங்கு தமிழ் நிகழ்வு சிதறிக்கிடக்கும் தமழரின் உணர்வுகளை ஒன்றாக்கி புத்துணர்சியையும், புதுவேகத்தையும் தந்து நிற்கிறது பிரான்ஸில் நடைபெறும் பொங்கு தமிழ் நிகழ்வு பேரெழுச்சியுடன் நடைபெறல் வேண்டுமென ஆதரவுடன் கூடிய வாழ்த்தை தெரிவிக்கும்...

**புரவென்ஸ் தமிழ் சங்கம் மார்சேல்**

எமது தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுக்க இவ்வுணர்வு பூர்வமான நிகழ்வை எமது செவ்றோன் தமிழ் மன்றம் வாழ்துகிறது.

**தமிழ் மன்றம் செவ்றோன்**

தாயகம் தேசியம், சுயநிர்ணயம் எனும் அடிப்படைக் கோரிக்கையை முன்வைத்து நடைபெறும் பிரான்ஸ் பொங்கு தமிழ் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற நாமும் வாழ்த்தி நிற்கிறோம்.

**பிரஞ்சுத் தமிழ்ச் சங்கம் கார்ஜ் சார்சேல்**
**தமிழர் விளையாட்டுக் கழகம் 95-78**

புதிய உலக கோட்பாட்டின் கீழ் சகல மக்களும் சுதந்திரமாக வாழ உருத்துடையவர்கள். நாமும் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வுக்காய் நடைபெறும் போராட்டங்களில் பங்கு கொண்டு வலுச் சேர்க வேண்டும். அந்நிலையில் இங்கு நடைபெறும் பொங்கு தமிழ் நிகழ்வை ஆதரித்து வாழ்த்தி நிற்கிறோம்.

**புனர் வாழ்வுக் கழகக்கிளை மொன்றோய்**

அடக்கி ஒடுக்கப்பட்ட உணர்சிகளையும் அபிலாசைகளையும் வெளிக்காட்ட ஒரு வடிகாலாக அமைந்த பொங்கு தமிழ் பாரிஸில் நடைபெற அருக்கும் அவ்வேளையில் எமது உணர்வுகளையும், தேவைகளையும் உலகம் அறிய எமது ஆதரவுடனான வாழ்த்தை தெரிவித்து கொள்ளுகிறோம்.

**தமிழர் கலாச்சார ஒன்றியம்**
**மாந்திலா ஜொலி**

தாயகத்தில் பொங்கு தமிழ் நிகழ்வு ஈழத் தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான ஆதரவை பெற்று நடைபெற்றுள்ளது. தமிழர் தலைமைகள் ஒரே தலைமையின் கீழ் வீறுநடை போடுகிறது. இவ்வேளையில் பாரிஸில் நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்விற்கு ஓலுநெ சு புவா பிரஞ்சுத் தமிழர் சங்கம் உணர்வு பூர்வமான ஆதரவை வழங்கி வாழ்த்தி நிற்கிறது.

**பிரஞ்சுத் தமிழர் சங்கம் ஓலுநே சு புவா**

தாயக பயணத்தில் ஒரு மைல்கல்லாக இருக்கும் பொங்கு தமிழில் நாமும் எமது நியாயங்களை சர்வதேச உலகிற்கு பறைசாற்ற பொங்கியெழுவதுடன் எமது உள்ளங்களைத் திறந்து இனிய தமிழ் முழங்க வாழ்துகிறோம்.

**பிரஞ்சுத் தமிழர் சங்கம் குசான் வீல்**

தமிழர் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்பவற்றை முன்வைக்கும் பொங்கு தமிழில் கிருத்தல்வாழ் தமிழ் மக்களும் இணைந்து வலுச்சேர்பதுடன் வாழ்த்தி நிற்கிறோம்.

**கிருத்தல் கலாச்சார சங்கம்**

தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொங்குதமிழ் 2002

## பிரான்ஸ்

**19.05.02 ஞாயிறு மாலை 4.00**



தாயகம்

தேசியம்

சுயநிர்ணயம்

**என்கின்ற தமிழர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கான கோரிக்கைகளை வலுப்படுத்திடவோர் பெருநிகழ்வு!**

## அனைவரும் வருக!

**அரங்கு:**

**LSC**
**Espace Europeen**
**144 - 146 Av.**
**President Wilson 93210**
**La Plaine St. Denis**

### தமிழீழத்தின் குரலுக்கு வலுச்சேர்த்திட வருக...

சிறப்பு அழைப்பாளராக தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்தவரும், மறைந்த மாமனிதன் குமார் பொன்னம்பலத்தின் மகனுமாகிய திரு.கஜேந்திரகுமார் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

தமிழீழ ஆதரவாளரான பேராசிரியர் சுபவீரபாண்டியன் அவர்கள் சிறப்புரை வழங்கவுள்ளார்.



தமிழீழத்தின் கலைபண்பாட்டு விழுமியங்களைத் தாங்கிவரும் தவெளிச்சம் பவளவிழா மலர் இந்நிகழ்வில் வெளியிடப்படும். தாயகத்து எழுத்துக்களின் உண்மையையும், கூர்மையையும் தாங்கியதாய் இம்மலர் அமைகின்றது.

போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் விபரங்களுக்கு 01 43 58 11 42 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி
பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழு
'பிரான்சு 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சங்கீதா யோகநாதன், செல்வன் சிவநாதன் ஜெயந்தன், செல்வன் சசிதர் சோமசுந்தரம் ஆகியோரைப் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## கவிதை முற்றம்



**Liberté**

Pourquoi tuez-vous les oiseaux?
Ils ne vous font pas de mal

pourquoi l'esclavage des hommes?
Ils ne vous ont rien fait

pourquoi la guerre?
faisons la paix

pourquoi le racisme?
La couleur ne vous fait pas mal aux yeux!
Voulez-vous pas de la liberté!

**விடுதலை**

*ஏன்*
*நீங்கள் பறவைகளைக் கொல்கிறீர்கள்?*
*பறவைகள்,*
*உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லையே!*
*மனிதர்களை*
*ஏன் அடிமைப்படுத்துகிறீர்கள்?*
*அவர்கள்*
*உங்களுக்கு ஏதும் செய்யவில்லையே!*
*ஏன் யுத்தம் புரிகிறீர்கள்?*
*சமாதானம் செய்வோம்!*
*ஏன் துவேசமாக இருக்கிறீர்கள்?*
*வர்ணங்கள் உங்கள் கண்களில்*
*வலியை உண்டாக்கிறதா?*
*உங்கள் விடுதலையில்*
*உங்களுக்கு விருப்பமில்லையோ?*

*வாசகன்*
*வயது-8*, Orly France

## தகவல் முற்றம்

1946- முதல் முதலாக சர்வதேசத் திரைப்பட விழா பிரான்சில் உள்ள கேன் (Canne) என்னும் இடத்தில் நடைபெற்றது.
1946- சுமார் 5 கோடி மக்களைப் பலிவாங்கிய இரண்டாம் உலகப்போர் ஒருவழியாக முடிவுக்கு வந்தது.
1947- அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ உருவானது.
1950- ரவீந்திரநாத் தாகூரின் 'ஜன கண மண' பாடல் இந்தியாவின் தேசிய கீதமாக ஏற்கப்பட்டது.
1951- இத்தாலியின் ஆதிக்கத்திலிருந்து ரஷ்யா விடுதலை பெற்றது.
1951- இரண்டாவது முறையாக சேர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமரானார்
1953- கடல்மட்டத்திலிருந்து 29,002 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் மனிதன் முதன் முதலாக காலடி எடுத்துவைத்தார். கில்லாரி என்ற நியூசிலாந்து வீரர், டென்சிஸ் என்ற நேபாள வீரரின் துணையோடு எவரெஸ்ட்டை எட்டிப்பிடித்தார்.

## விடுகதை முற்றம்

### கடந்தவார விடை

*1. மின்மினிப் பூச்சி*
*2. நாக்கு*
*3. நட்சத்திரங்கள், வானம்*
*4. மேகம்*
*5. நெருப்பு*
*6. தலை உச்சி*
*7. தேன்கூடு*
*8. துடைப்பம்.*

### இவ்வார விடுகதைகள்

1. ஆடி ஆடி நடப்பான் அரங்கதிர நடப்பான் யார்?
2. ஆற்றிலும் குளத்திலும் ஆழ்கடலிலும் விழுந்தாலும் நனையாது. அது என்ன?
3. ஆவணி பிறப்பது எதனால் நாடகம் முடிவது எதனால்?
4. இரவில் சுமப்பான். பகலில் சுருண்டிடுவான் அவன் யார்?
5. இருட்டில் கதை பேசுவான். அது யார்?
6. இவன் அழுதால்தான் உலகம் சிரிக்கும்.
7. இரவு பகல் விழித்திருக்கும். எப்போதும் ஒலித்திருக்கும். அது என்ன?
8. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் அது என்ன?

*(விடைகளை அடுத்தவாரம் சரிபார்த்துக்கொள்ளவும்)*

## கதை முற்றம்

# பேராசையின் விளைவு

கிளியன் பேராசை விருப்பமுள்ள சிறுவன் அவனுக்குக் காசு கிடைத்தால் உடனே கடைக்கு ஓடி, மிட்டாய் வாங்கித் தின்றுவிடுவான்.

ஒருநாள் அவன் கடைத்தெருவுக்குச் சென்றபோது மரமுந்திரிகைக் கொட்டைகளை ஒரு கடையில் பார்த்தான்; அதற்கு முன் அவன் அவற்றைப் பார்த்ததில்லை. அவை பொன்னிறங் கலந்து பழுப்பு நிறத்தில் இருந்தன.

இவை தின்பதற்கு நன்றாயிருக்குமா? என்று கடைக்காரனிடம் கேட்டான் கிளியன்.

'மிக நன்றாயிருக்கும்; வாங்கிப்போ! சாம்பல் கலந்து சூடான தணலில் வறுத்துத் தின்றால் மிகவும் சுவையாயிருக்கும்' என்றான் கடைக்காரன்.

கிளியன் தன் சட்டைப்பையில் கையை விட்டுப் பார்த்தான்; பையில் காசே இல்லை; காசு கிடைத்தவுடன் மிட்டாய் வாங்கித் தின்னும் பழக்கமுள்ள அவனிடம் காசு எப்படி இருக்கும்?

என்ன செய்யலாம் என்று யோசித்தான் அவன்.

கடைக்காரன் கடையினுள் எழுந்து போனான்; அதைப் பயன்படுத்திக்கொண்டு கிளியன் ஒரு கை நிறைய மரமுந்திரிகைக் கொட்டைகளை அள்ளிப் பையினுள் போட்டுக்கொண்டான்.

உடனே அவன் வீட்டுக்கு ஓடினான்; வீட்டில் அம்மா இல்லை: சமையலறையில் நுழைந்தான். அடுப்பில் சாம்பலும் நெருப்பும் கலந்திருந்தன. உடனே தன் பையிலிருந்து மரமுந்திரிகைக் கொட்டைகளை எடுத்து அடுப்பில் போட்டுக் கிளறினான்; 'படபட' வென்று லேசான சத்தம் கேட்டது.

அவற்றைச் சீக்கிரம் வறுக்க எண்ணிய கிளியன் சில சுள்ளிகளை அடுப்பில் வைத்து ஊதினான். திடீரென்று ஒரு மர முந்திரிகைக்கொட்டை வெடித்தது. சுடு சாம்பல் கிளியனின் கண்களில் விழுந்தன. அவனுக்குக் கண்களில் சூடும் எரிச்சலும் ஏற்பட்டன.

வலிபொறுக்க முடியாமல் கிளியன் அலறித் துடித்தான். சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். அங்கு நிகழ்ந்ததை அறிந்தனர். கிளியனின் திருட்டும் வெளிப்பட்டது. எல்லோரும் அவனைத் திட்டினார்கள்.

அவன் கண்கள் குணப்பட நீண்ட காலம் ஆனது. 'பேராசை விருப்பத்தால் எனக்கு வருத்தமும் நாணமும் ஏற்பட்டனவே' என்று அவன் எண்ணி எண்ணி வருந்தினான்.

*– புரட்சிதாசன்.*

## முயன்று பாருங்கள்

### சொல்வளம்

கடந்த வார விடை

1. அரசன் – ஆண்டி
2. இம்மை – மறுமை
3. இளைஞர் – முதியோர்
4. இன்சொல் – வன்சொல்
5. ஈதல் – ஏற்றல்

*பின்வரும் சொற்களுக்கான எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.*

1. உதயம் -..............................
2. குறைவு -..............................
3. ஐக்கியம் -..............................
4. ஏற்றம் -..............................
5. உறக்கம் -..............................

## குறுக்கெழுத்துப் போட்டி

### கடந்த வார விடை

| | | | | |
|---|---|---|---|---|
| தா 1 | ய் 2 | லா 3 | ந் 4 | து 5 |
| ர 6 | ■ | கு 8 | ழ 9 | வி 10 |
| கை 11 | ரே 12 | கை 13 | ■ | ■ |
| 16 | த் 17 | ■ | மை 19 | னா 20 |
| பி 21 | ஜி 22 | த் 23 | தீ 24 | வு 25 |

### குறுக்கெழுத்துப் போட்டி – 11

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 |
| 6 | ■ | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ■ |
| ■ | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

*1] 1–2 ஒரு காட்டு மிருகம். எழுத்துக்கள் தலைகீழாக உள்ளது.*
*2] 4–5 யானையை இப்படியும் அழைப்பர்.*
*3] 8–10 பொதி சுமக்கும் மிருகம்.*
*4] 11–14 மரம்விட்டு மரம் தாவும்.*
*5] 18–20 ஒற்றுமையை குறிக்கும் பறவை.*
*6] 21–25 கொடிய விசமுடைய ஒரு பாம்பு. எழுத்துக்கள் குழம்பியுள்ளன.*

**மேலிருந்து கீழ்**

*1] 1–11 வேகமாக ஓடும் ஒரு மிருகம். மனிதனுடன் நெருக்கமான உறவு கொண்டது. இங்கு கீழிருந்து மேலாக உள்ளது.*
*2] 12–27 உடம்பில் அதிக ரோமங்களைக்கொண்ட விலங்கு. பலமான சத்தமுடன் கத்தும். மரங்களிலும் ஏறும். எழுத்துக்கள் குழம்பியுள்ளன.*
*3] 8–23 அவுஸ்திரேலியா நாட்டின் சின்னமாக இருக்கும் விலங்கு.*
*4] 4–14 கொடிய பறவை. பாம்பின் எதிரி.*

விடைகளை அடுத்த வாரம் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில், எரிமலையாகக் காட்சிதரும் திருமலைக் கடல்.



திருகோணமலை துறைமுகக் கடற்கரையை நோக்கி விடு தலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரூபன் மற்றும் பதினொரு போராளிகளுடன் வந்து கொண்டிருக்கும் சேருவில கப்பல்.

## திருமலையிலிருந்து நாதன்

கடந்த திங்கள் திருகோணமலைத் துறைமுகக் கடல் அமைதியாக காணப்பட்டது. நகர சிவிலியன் இறங்குதுறையிலிருந்து பார்த்தபோது சிறீலங்காக் கடற்படையின் பீரங்கிப்படகுகள் துறைமுக நுழைவாயிலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தன. ஒரு பக்கம் சிறீலங்காக் கடற்படைத் திருகோணமலைத் தலைமையகம். அங்கிருந்து எங்கே அந்தக் கப்பல் என்று கூர்ந்து கவனிக்கும் கண்கள் பல. இதேநேரம் இன்னும் கப்பலைக் காணவில்லையே என்றொரு பக்கம் அச்சம். காரணம், அன்று இரண்டாவது தடவையாக விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று திருமலைக் கரையை வந்தடைய இருந்ததே.

கிளிநொச்சியில் ஏப்ரலில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் நடத்திய செய்தியாளர் மாநாட்டிற்கு திருகோணமலை மாவட்டத்திலிருந்து முக்கிய விடுதலைப் புலிகள் தலைவர்கள் சென்றிருந்தனர். அந்நிகழ்வு முடிந்து அத்தலைவர்கள் மூதூருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, திருகோணமலைக் கடல் பிரதேசத்தில் வைத்து கடற்படையின் பீரங்கிப்படகுகளால் வழிமறிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் படகுகளில் இந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகள் இருந்தனர். வழிமறிக்கப்பட்ட தகவல் நோர்வே கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது. அதன்பின்னர் தான் அக்கப்பல் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. பின்னர் வாகரைக் கடலில் கடற்படையினர் மீன்பிடி வள்ளங்கள் மீது தாக்குதல் நடத்தினர். ஆனால் படையினர் தாங்கள் விடுதலைப் புலிகள் படகுகள் மீது தாக்குதல் நடத்தவில்லை, அப்படகுகளில் ஒன்று தானாக வெடித்துச் சிதறியது என்று காரணம் கூறினார்கள். கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் நடந்ததைக் கூறினார்கள். இவ்வாறான கண்டங்கள் எல்லாம் அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வடக்கு கிழக்கு கடல் பிரதேசத்தில் தான் இதுவரை ஏற்பட்டுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கடலினுள் மூழ்கடித்து விடலாம் என்ற முயற்சியில் சமாதான முயற்சிக்கு எதிரானவர்கள் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்க, தெற்காசியப் பிராந்தியத்திலேயே கேந்திர முக்கியத்வம் வாய்ந்த திருகோணமலை நகரில் தங்களின் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகளின் இரண்டாவது அரசியல் உறுப்பினர்கள் குழு திருகோணமலை வந்து சேர்ந்தது. இக்குழுவிற்கு தலைமை வகித்து வந்தவர் விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. ஆ.ரூபன் அவர்கள்.

விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் அலுவலகத்தில் அவரை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். அவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார் திரு.ரூபன். புரிந்துணர்வு உடன்படிக்கையை முறியடிக்கத் தீய சக்திகள் மும்முரமாக ஈடுப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கு இடங்கொடுக்கக் கூடாது. இது தான் எங்களின் முதலாவது பணியாக அமையப் போகின்றது என்றார். புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய விவரங்கள் கிராமங்களை இன்னும் சரியாகச் சென்றடையவில்லை. அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவது பற்றிய கேள்விக்குத் திரு.ரூபன் நிதானமாகப் பதிலளித்தார். 1983 மற்றும் 1990ம் ஆண்டுகளில் இடம் பெற்ற வன்செயல்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் சொந்தக் கிராமங்களை விட்டு வெளியேறிவிட்டன. அதனால் இன்று கைவிடப்பட்டுள்ள நிலையில் பல தமிழ்க் கிராமங்கள் காணப்படுக்கின்றன. அவ்வாறான சில கிராமங்களில் உள்ள காணிகளில் வேற்று இனத்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அக்கிராமங்களுக்குரிய பூர்வீகக்குடிகள் யார் என்பதை முதலில் நாம் கண்டறிய வேண்டும். அதன்பின்னர் மீளக் குடியர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு திரு.ரூபன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப்பிரச்சனைக்குத் தீர்வு காணுவதில் திருகோணமலை ஒரு முக்கியத்வத்தை வகிக்கின்றது. திருகோணமலை யாருக்குச் சொந்தம் என்பதில்தான் அரசியல் தீர்வின் வெற்றியே தங்கியிருக்கின்றது. தற்போது நடைமுறையில் இருக்கும் புரிந்துணவர்வு உடன்படிக்கை மற்றும் யுத்த நிறுத்த அமுலில் திருகோணமலை ஓர் எரிமலையாகத் தான் இன்று காட்சியளிக்கின்றது. இந்த எரிமலை எப்போது வெடிக்கும் என்பதே இப்போது எழும் கேள்வி? □

# நேசமொழியில் பேசவிடு

03.05.02 வெள்ளி மாலை 6.20

கடைசிக் கருத்தரங்கு முடிந்து வெளியே வருகிறேன். மாலை வெய்யில் என் முகத்தில் சுடுகிறது. பல்கலைக்கழகத்தின் பின்புறத்திலுள்ள வெளி நோக்கி நடக்கிறேன். கிளை விரித்து இலை பரப்பிய மரங்களின் கீழ் இருக்கும் கல் ஆசனத்தில் சற்று நேரம் அமர்கிறேன். புல்வெளியில் புறாக்கள் பழையதைக் கொத்தித்தின்கின்றன. காற்று ஒருமுறை குளிர்வீச, பூத்திருந்த வெள்ளைப்பூக்கள் இதள்களை நிலத்தில் உதிர்த்தன. உரசிய இலைகள் சரசரக்கத்தொடங்கின. அதில் எழும் ஓசையும், உதிர்ந்த பூக்களின் வாசமும், வருடிய காற்றின் குளிர்மையும் களைத்த உடலின்மேல் பிஞ்சுவிரல்பட்டது போலிருந்தது. புல்வெளியின் மறுகரையில் புத்தகம், கொப்பி, பென்சில், பேனா போன்றவற்றை விற்கும் மாணவன் என்னைக் கண்டதும் கையசை புன்னகைத்தான். என்னை அவனுக்கு நன்றாகத் தெரியும். விரிவுரை தொடங்குமுன்தான் எழுதுவதற்கு ஒற்றைகள் இருக்காது. அல்லது பேனாவின் மை முடிந்திருக்கும். அந்தச் சமயங்களில் அவனின் சிறு கடைதான் எனக்குத் தஞ்சம். மூச்சு வாங்க அவன் கொப்பியுடன் அல்லது .....ஆலாய் பறந்துகொண்டு நிற்பேன். மிச்சக்காசை வாங்கியதும் வாங்காததுமாக விரிவுரையை நோக்கி நான் ஓடுவதும் எனது அவசரத்தைப் பார்த்து அவன் சிரிப்பதும் அடிக்கடி நிகழும் ஒன்று. இன்று வழமைக்கு சற்று முன்னரே தனது கடையை மூடிவிட்டு வீடு செல்கிறான். அவனது முகத்தில் எத்தனை மகிழ்வு! அவனது கால்களில் எத்தனை வேகம்! மாலை ஒன்று மேற்கில் மடிய மஞ்சளும் சிவப்பும் அதனுள் கன கூட்டமாக குருவிகள் தத்தமது கூட்டினுள் புகுந்துகொள்ளும். வால் ஆட்டி குலைக்கும் நாயும் ஓர் மூலையில் ஒய்ந்துபோகும். நத்தைகூட பத்தைக்குள் ஒளித்துக்கொள்ளும். அவனும் அப்படித்தான். தனக்கென்றிருக்கும் குடில் நோக்கி நடக்கிறான். இனித் தொடரும் வார இறுதி நாட்களின் ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ந்து கழிப்பான். மீண்டும் திங்கள் விடியலில் புதிதாய் பிறந்ததுபோல் கண்களில் நீர் நிறைய கன்னத்தில் குழிவிழச் சிரிப்பான். அழகான ஒரு வட்டத்தில் சுழன்றது அவன் வாழ்வு. வாழ்வின் சில காலத்தை நானும் அப்படித்தான் மகிழ்ந்து கழித்தேன். வெள்ளி மாலையெனில் படிப்புக்கும் புத்தகத்திற்கும் பெரிய ஒரு புள்ளிபோட்டு உலகத்தைக் கைக்குள் கவ்விப்பிடித்து துள்ளித்திரிவேன்...

11ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலம் அது. வெள்ளிக்கிழமைகளில் எனது நேர அட்டவணை இப்படித்தான் இருந்தது:

8.00-9.35 ஆங்கிலம்
9.55-10.40 சரித்திரம்
10.50-11.30 கணிதம்
11.45 -1.20 இரசாயனவியல்
1.45-4.30 உடற்பயிற்சி

உடற்பயிற்சியில் அப்போது நாம் டெனிஸ் (Tennis) விளையாடினோம். கட்டாயமாகப் படிக்கவேண்டியதொன்றாக அது இருந்தது. இரண்டு கைகளாலும் பற்(Bat) பிடித்து இழைக்க இழைக்க நான் அடிப்பேன். கை தசைகளுக்குள் வலி எடுக்கும். பச்சை நரம்புகள் எட்டிப்பார்க்கும். வெள்ளிமாலையில் அந்தவலிகூட சுகமாய் தெரியும். பஸ் எடுத்து வீடு வர மாலை 5.30 மணியாகிவிடும். அப்பா அம்மா அண்ணா தம்பி எல்லோரும் வீட்டில் நிற்பார்கள். அம்மா புட்டுக்கு வெங்காயமும் கத்தரிக்காயும் பொரித்து வைத்திருப்பா. ஒரு பிடி எடுத்து வாய்க்குள் போட ஆசையாக இருக்கும். அம்மா விடமாட்டா. 'முகம் கழுவி சாமி கும்பிட்டிட்டு வந்தால்தான் சாப்பாடு தருவேன்' என்பா. உடனே கைகால் முகம் கழுவிவிட்டு சாமிப்படத்திற்கு முன் ஒரு நிமிடம் நின்று விபூதி பூசி விளக்கை அணைத்துவிட்டு ஓடிவருவேன். பக்திப்பாட்டு ஒலித்துக்கொண்டிருக்கும். புட்டுடன் பொரித்த கத்தரிக்காயைச் சப்பிச் சாப்பிடும்போது நல்லெண்ணை வாய்க்குள் கசியும். சாப்பிட்டு முடித்தவுடன் கைவிரலைச் சூப்பிவிட்டு எழும்பிவிடுவேன். சாப்பிட்ட தட்டைக்கூட அம்மாவே கழுவிவைப்பா. அதன்பின் எல்லோரும் ஒன்றாக இருந்து ஏதும் படம் பார்ப்போம். அல்லது பாட்டுக் கேட்போம். அல்லது தாயக்கட்டை உருட்டி விளையாடுவோம். தோற்றாலும் எனக்குத்தான் செல்லமாக அடிவிழும். வென்றாலும் எனக்கே அடிவிழும். அன்றிரவு எனது அறைப்பக்கம் நான் எட்டிக்கூடப்பார்க்கமாட்டேன். புத்தகத்தை கையால் தொடமாட்டேன். மேசையின் கீழ் பாடசாலைப் பை எறிபட்டுக்கிடக்கும். வீட்டு வேலைகளைக்கூட அம்மா என்னைச் செய்யவிடமாட்டா.உருளும் உலகை என் கைக்குள் பிடித்து உருளவிடாமல் செய்வதும் பின் விரும்பிய திசைக்கு அதனை உருட்டிப்பார்ப்பதும் பகலை இரவாக்கி தூங்குவதும் இரவை பகலாக்கி இசைகேட்பதும் ஞாயிறு மாலை வரை நிகழும் ஒன்று. அதன் பின் புத்தகத்தை கையில் எடுத்தால் வியாழன் மாலைவரை ஓய்வற்ற படிப்பு. ஆனால் அந்த ஒரு வெள்ளி மாலைக்காகவும் அதனைத் தொடரும் சில பொழுதுகளுக்காகவும் நான் எதனையும் படிக்கத் தயாராக இருந்தேன். சுமார் ஒரு வருடகாலம் உருளும் உலகம் நான் விரும்பியதுபோல் உருண்டது. எண்ணமுடியாத வெள்ளிகளை நான் வாழ்ந்து முடித்தேன். அதன் பின் உயர்தரம், பல்கலைக்கழகம் என்று வந்தபின் இரவுகள் பகலாய் போயின. புத்தகம் தொடாத ஒரு நிமிடம் இல்லை. பேனா பிடிக்காத ஒரு நொடி இல்லை. உருளும் உலகிற்குப் பின்னால் நானும் சேர்ந்து ஓடினேன். ஓடுகிறேன். சில பொழுதுகளில் கால் தசைக்குள் வலி எடுக்கும். பச்சை நரம்புகள் எட்டிப்பார்க்கும். பாதங்களில் கொப்பளம் வரும். சற்று நேரம் நின்று ஓய்வெடுத்தால் உலகம் என்னை விட்டு இருமுறை சுழன்று விடும். விட்ட தூரத்தைப் பிடிக்க மீண்டும் ஓடுவேன். கால்களின் வேகம் நாளுக்கு நாள் போதாது போகும். இப்போது நான் நின்றே விட்டேன். உலகம் என்னை விட்டு இருமுறை அல்ல பலமுறை சுழன்று விட்டது...

இன்று வெள்ளிமாலை மணிக்கூட்டைப் பார்க்கிறேன். 7.15. அம்மா கட்டாயம் புட்டுக்கு ஏதும் பொரித்துவைத்திருப்பா. போனவுடன் ஒரு பிடி எடுத்து நான் வாய்குள் போடமாட்டேன். கைகால் முகம் கழுவ ஒரு நிமிடம் அல்ல. சற்று நேரம் சாமிப்படத்திற்கு முன்னால் அமரப்போகிறேன். நான் வாழ்ந்து முடித்த வெள்ளிகள் எனக்கு மீண்டும் வேண்டும். ஒரு வெள்ளி அல்லது இரண்டு வெள்ளிகள் மட்டும் போதும்.

இரவைப் பகலாக்கி படிக்க நான் தயார்!

விட்ட தூரத்தை மீண்டும் எட்டிப்பிடித்து உலகின் வேகத்தையே மிஞ்சி ஓட நான் தயார்!

**அம்புலி**

(15ம் பக்கத் தொடர்ச்சி)

**விடுதலைப்...**

சிங்களவர் பக்கத்தில் காணப்படும் தீவிர இனவாதமும் வெளிப்படையாகவே சமாதான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிங்கள மதகுருமாரின் கடும் போக்குமே சமாதான முயற்சிகளை ஓரங்கட்டும் சக்திகளாகச் செயற்படுகின்றன. இதுவரை சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடைய பிரதான கூட்டுக் கட்சிகளும் தமது எதிர்ப்பை வெளிப்படையாகக்கொண்டு நடத்துவார்களானால் அது பிரச்சினைகளை உருவாக்கக்கூடும். முதன்மையான செல்வாக்குடன் தனது தலைமையை வைத்திருக்கும் விடுதலைப் புலிகளின் நிலையோடு ஒப்பிடும்போது இது ஒரு கடுமையான வித்தியாசத்தை காட்டுகிறது. இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் சாராத தமிழ்க் கட்சிகளும், கிழக்கு மாகாண முஸ்லீம் இனத் தலைவர்களும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தையே இனப்பிரச்சினை சம்பந்தமாக பேசவல்ல தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதி என ஏற்றுள்ளார்கள்.

தமிழர் பக்கத்தில் நின்று செயற்படப்போகும் விடுதலைப் புலிகள் இலேசானவர்கள் அல்ல. அவர்களே தமிழர்களுக்காக செயற்படப்போகும் ஒரே சக்தி என்பதற்கு மாற்றீடு கிடையாது. சிறீலங்காவிற்கு இது மிக அரிதான ஒரு வாய்ப்பு. கடந்த காலத்தில் நிகழ்ந்தது போல் இந்தச் சந்தர்ப்பத்தையும் பிரிவினைகள் மூழ்கடிக்குமானால் அது மீளமுடியாத சோகமாகவே முடியும் என்பது மிகவும் மன வருத்தத்திற்குரிய விடயமாகும்.

**வேர்ஜி:–**

(ஜெகான் பெரேராவிடம்) இந்த சமாதான நடவடிக்கையில் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கும் நோர்வே நாட்டவர்களின் பங்களிப்பு அளப்பரியது: அவர்களது பங்களிப்பு சமாதானத் தரகராக இருந்தால் என்ன அல்லது சமாதானத்தை முன்னெடுக்க உதவுபவராக இருந்தால் என்ன, அவர்கள் இந்த சமாதான நடவடிக்கை வெற்றியளிக்க எதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

**ஜெகான் பெரேரா:–**

நோர்வேப் பிரதிநிதிகள் மிகவும் நல்ல செயலில் ஈடுபட்டுள்ளார்கள். இதுவரை அது மெச்சத்தக்க முறையிலேயே அமைந்துள்ளது. ஜனாதிபதி குமாரதுங்காவினால் தலைமை தாங்கப்பட்ட 94ம் ஆண்டு சமாதான நடவடிக்கைக்கும் இப்பொழுது நடைபெறும் நடவடிக்கைக்கும் உள்ள மிகவும் முக்கியமான வித்தியாசங்களில் ஒன்று என்னவென்றால் நோர்வேப் பிரதிநிதிகள் இருப்பதே. அத்தோடு இவர்களை இரு சாரரும் நம்புகின்றார்கள். அவர்கள் இன்னும் என்ன செய்யலாம் என எண்ணுகின்றேன். சர்வதேச கண்காணிப்புக்குழுவை அவர்கள் மேலும் பலப்படுத்த வேண்டும். இது இரு முனைகளைக்கொண்ட வாளைப்போன்றது. ஏனெனில் சர்வதேச கண்காணிப்புக் குழுவானது நாட்டின் இறமைக்கு ஊறு விளைவிக்கின்றது என்று சமாதான நடைமுறைக்கு எதிரான சிங்கள எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே அவர்களுக்கு ஆகக்கூடிய அதிகாரத்தைக் கொடுப் பது கஷ்டம். ஏனெனில் அங்கே இறமை பற்றிய பிரச்சினை எழுகின்றது.

**வேர்ஜி:–**

(ஜெகான் பெரேராவிடம்) சிறீலங்காவின் ஒற்றையாட்சியையும் அரசியல் யாப்பிலுள்ள ஒற்றையாட்சி அந்தஸ்தையும் விட்டுக்கொடுக்காமல் விடுதலைப் புலிகளை ஒரு தீர்வுக்குத் தூண்டும் விதத்தில் எப்படி போதிய அதிகாரங்களை தமிழ் மாகாணங்களுக்கு பகிர்வது என்பதே இங்குள்ள பிரதானமான கேள்வியாகும்?

**ஜெகான் பெரேரா:–**

ஆம். இது ஒரு பிரதான பிரச்சினையாக இருக்கப்போகின்றது. ஏனெனில் விடுதலைப் புலிகள் நீண்டகாலமாகவே தனிநாட்டுக்காக போராடி வந்துள்ளார்கள். ஐக்கிய சிறீலங்காவின் எல்லைகளுக்குள் அவர்கள் செயற்படுவது என்பது அவர்களைப் பொறுத்த மட்டில் ஒரு பாரிய இழிநிலை அடைவதைப் போன்றதாகும். சமாதான நடவடிக்கையில் இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றம் என்னவெனில், விடுதலைப் புலிகள் வடக்கு–கிழகில் மிக் கூடுதலாக கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொண்டமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் அனாதைகளல்ல நீங்கள் அகதிகளுமல்ல

பங்குனிமாதம் பிறந்தாச்சு
திங்கட்கிழமை ஒவ்வொன்றும்
இனித்திருநாள்.
வார்பிடிக்கத் தொடங்கினர் தவிலுக்கும்,
பறைக்கும்
ஊர் முற்றத்துக்கு இனி உறக்கமேது.
காளி அம்மன்
கண்ணகி அம்மன்
பேச்சி அம்மன்
நாச்சி அம்மன்
முனி அம்மன்
முலைதிருகி அம்மனென
அம்மன் கோயிலெங்கும்
பொங்கல் நடக்கும்.
மடைபரவிய வாசலெங்கும்
கற்பூரப் புகையிடையே தாயின்
கண்தெரியும்.
சிலம்பின் சிரிப்பிடையே அவளின்
முகம் தெரியும்.
ஆத்தாள் வேர்த்துக்கிடக்கும் அழகில்
கூத்துக்காரர்களுக்கே கொண்டாட்டம்.
பறையடித்து உருவேற்றிவிட்டால்
சாமியாடிகளின் சன்னதத்தில்
கோயில் வீதியெங்கும் புழுதியெழும்.
பூ மிதிப்பு
தீ மிதிப்பென ஊரே பரவசத்தில்
பறக்கும்.
காத்தான் கூத்தில் மாரியாகவும்
கோவலன் கூத்தில் கண்ணகியாகவும்
வேஷம் கட்டுபவனுக்கே விருந்து
நடக்கும்.
பொங்கல் அம்மனுக்கு மட்டுமல்ல
ஊரிலுள்ள பெண்களுக்கும் தான்.
பொங்கலுக்கென்றே
இந்தப் பூக்கள் பூத்துவிடும்.
எத்தனைதான் வந்துபோனாலும்
இரட்டைப்பின்னலும், பட்டுத்தாவணியும்
இன்றும் அழகுதான்.
பங்குனிமாதத்தில் தாவணிபோடுபவள்
ஆவணி மாதத்தில் காதலியாகி
விடுகிறாள்
அத்தனை அழகிருக்கும் அதில்.
காப்புக்கடைகளும்,
கடலைக்கடைகளும் தான்
இளசுகளை இன்றும்
இணைத்துவிடுகின்றன.
மாமிமகளுக்கு இனி மாராப்பு
வேண்டுமென
சாமிவாசலிற்தான் மச்சானுக்கு
ஞானம்பிறக்கும்.
பங்குனிமாதத்துப் பொங்கல் திருநாட்கள்
அம்மனுக்குமட்டுமான ஆராதனையல்ல
உயிர்களை இணைத்துவிடும்
உத்ஸவமும் கூட.
காமன் நேரில் வந்திருந்து
கைபிடித்துக் கொடுப்பதால்
சாமம் வரையும்
ஊரில் சந்தனம் மணக்கும்.
இம்முறையும் பங்குனி வந்துவிட்டது
இனிப் பாட்டும்,
கூத்துமாகப் பகலிரவு கழியும்.
அண்ணாவி வீட்டு அடுப்புகள்
அணையாது.
இப்போ போர்நிறுத்த மென்பதால்
எங்கும் போய்வர முடிகின்றது.
பேச்சுவார்த்தைக்கெனப் புறப்பட்ட
'பிரமஞானி'
மாலைதீவுக் கடலிலேறி
இரணைமடுக் குளத்தில் வந்திறங்கினார்.
கூற்றுவனுக்கே 'அல்வாகொடுத்த'
ஆற்றலனையும்
கூட வந்திறங்கிய
'வெள்ளைத்தமிழிச்சியையும்'
எம் 'வாசற்கதவு' வரவேற்றது.
கரைக்கே வந்து கைகொடுத்தேற்றியது
'கலங்கரை விளக்கு'
போவதும் தெரியாமல்
வருவதும் தெரியாமல்
சிங்களதேசம் திகைத்துப்போயுள்ளது.
நேற்று இலண்டனில் நின்றவர்
இன்று இரணைமடுவில்
இறங்குவதெனில்
வன்னிக்கு வாசல்கள் பலவாகிவிட்டது.
போனது கடல்வழி
வந்தது வான்வழி
திறப்பது தரைவழி
ஈழத்தமிழனுக்கு இனி எந்தவழியும்
திறக்குமெனும்
காலம் வந்ததென்ற கட்டியம் இது.
கோடை வறுத்தெடுத்த போதும்
எங்கிருந்தோ வந்து
இளங்காற்றுத் தழுவுகிறது.
கூர்வேலெடுத்த கொடும்போரை
நிறுத்தியதுக்கு
நோர்வேக்கு நாங்கள் நன்றிசொல்வோம்.
பாலஸ்தீனம் எமக்குமுன்
பாடமாய் விரிவதால்
நோர்வே எம்மை
நோண்டிப்பார்க்கக்கூடாது.
இன்று பங்கேற்றுவிட்டு
நாளை பார்வையாளனெனத்
தப்பமுடியாது.
நோர்வே வில்லனா?
கதாநாயகனா?
பார்வையாளரைச் சிரிப்பூட்டும் பபூனா?
என்று
விரைவில் விளங்கிவிடும்.
நல்லதெனில் நாங்கள் நண்பர்கள்
அல்லதெனில் நாங்கள் அவர்களிலும்
விண்ணர்கள்.
ஒன்றுக்கும் கலங்காத உறுதியுடன்
ஊர்முற்றம் காத்திருக்கிறது.
வைகாசி பிறந்ததும் ஒருமுறை
வந்துபோங்களேன்.
உம்மை விதைத்தவர் நாமல்லவா
இப்போ பயிராய் வளர்ந்திருப்பீர்
பார்த்துவிடத் துடிக்கிறது பாவிமனம்.
உழுது விதைத்தவர்களுக்குத் தானே
உப்பட்டி மலையைப் பார்க்கும்போது
மகிழ்வுவரும்.
இப்போது வேண்டாம்.
இங்கு கத்தரி வெய்யிலடிக்கிறது.
எம் பேரக்கொடிகள் கறுத்துப்போய் விடும்
பனியள்ளி விளையாடிய பிள்ளைகள்
புழுதியடித்துப் புலுண்டக் கூடாது.
வைகாசி பிறந்ததும் வாருங்கள்.
உங்கள் ஊர்களை,
உறவுகளை,
வயல்களை,
வாசல்களை,
துயிலுமில்ல நாற்றுமேடைகளை,
அயல் எரிந்துகிடக்கும் அநியாயத்தை,
புதிதாய் பூத்துக்குலுங்கும் பூக்களை,
ஊரில் பாலிறைத்து எழும் நிலவை,
வேரில் முளைகொண்ட வீரியத்தை,
வெள்ளோட்டம் முடித்த சித்திரத் தேரை,
வீதியுலா வரும் வெள்ளிவாகனத்தை,
தீர்த்தமாடும் திருமஞ்சனக் கேணியை
வந்தொருதரம் தரிசித்துப் போங்களேன்,
நாங்கள் யாருமற்ற அனாதைகள்
அல்லவென இங்குசொல்லவும்,
நீங்கள் தாயகமற்ற அகதிகள்
அல்லவென
உங்கு சொல்லவும்
வந்து போவதால் வாய்ப்புண்டு
வருக எம் வேரின் மலர்களே.
எத்தனை வதைசுமந்து நிமிர்ந்தோமெனச்
சொல்லத் துடிக்குது வாய்.
எத்தனை விலைகொடுத்து
எழுந்தோமெனக்
காட்டத் துடிக்குது கை.
சிந்திய கண்ணீரும், சிதறிய செந்நீரும்
முற்றாகக் காய்ந்து முடியவில்லை
திட்டுத் திட்டாக
உறைந்துகிடக்கிறது இன்றும்.
நாம் விம்மித் துடித்தபோது
வெட்டியடித்தது மின்னல்.
நாம் பட்டுச் சரிந்தபோது
உம்மைப் பார்க்கத்துடித்தன கண்கள்.
அடுத்த மாரியோடு
அழகுபெறும் எம் ஊர்கள்,
அடுத்த கோடை இளங்காற்றில்
கொடியேறும் எம் ஊர்கள்.
நம்பிக்கையுடன் எம் நாட்கள்
நகருகின்றன.
எம்மை அடித்துவாயிற்போட
எவர்நினைத்தாலும்
மூளும் கோபத்தீயில் முழுதும்
எரிந்துபோவர்.
ஏமாற்றும் எண்ணம் எமக்கில்லை
ஏமாறும் கோமாளித்தனமும் எமக்கில்லை.
நட்புப் பாலத்தில் நடக்கின்றோம்.
எந்த நடுக்கமுமில்லாது.
ஊர்முற்றம் அழகுபூத்துள்ளது
நாளையை வரவேற்க.

தாயகக் கவிஞர்
**புதுவை இரத்தினதுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறுபொறி கூட
# சமாதானப் பாதையில் பெரும் நெருப்பை உண்டாக்கிவிடும்

இலங்கைத் தீவின் சமாதானப் பயணத்தில் இப்போது என்னதான் நடக்கிறது? ஒருபுறம் அடுத்த மாதம் தாய்லாந்து தலைநகரில் இடம்பெறப்போகும் சிறீலங்கா - விடுதலைப் புலிகளுக்கு இடையேயான நேரடிப் பேச்சுக்களுக்கு தாய்லாந்தின் சிறீலங்காத் தூதுவர் இடம் தெரிவு செய்யத் திரிய, மறுபுறத்தே சிறீலங்காப் படையினரதும் சந்திரிகா குழாமினதும் தமிழ் மக்களுக்கு எதிரான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்த முறுகலின் உச்சத்திற்கு இடையேயும் விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடிப்பது சர்வதேச மட்டத்தில் ஓர் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாகக் கிழக்கின் வாகரைக் கடற்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிறீலங்கா கடற்படையின் சண்டித்தனத்தை அடுத்து, சிறீலங்காவில் சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் ஒன்றுகூடல் தீவிரமாகியுள்ளதையும் இங்கு குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய ஒரு விடயமாக இருக்கின்றது.



இந்த ஒன்றுகூடல்களின் தீவிரப்போக்கில் சந்திரிகா அம்மையார் வைத்திருந்த நம்பிக்கை அவரது அண்மைய சி.என்.என். தொலைக்காட்சி செவ்வியின்போதும் பிரதிபலித்தது.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமானால் அவர்கள் பயங்கரவாதத்தைக் கைவிடுவதாகப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் அத்துடன் சாதகமானப் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு உடன்படவும் வேண்டும். என அப்பேட்டியின் ஒரு கட்டத்தில் தெரிவித்த சந்திரிகா, தனது அரசியல் அறியாமையைச் சர்வதேசம் எங்கும் பரவவும் விட்டுக்கொண்டார். சந்திரிகாவின் இவ்வாறான கருத்து வெளிப்படுத்தப்படுவது இது முதற்தடவையும் அல்ல. அவரது அரசியல் ஞானம் அவரை இவ்வாறு பல தடவைகள் கக்க வைத்துள்ளது. ஆயினும் தற்பொழுது அவர் தெரிவித்த கருத்தானது, நிச்சயமாகச் சமாதானப் பயணத்திற்கு ஓர் இடறலை ஏற்படுத்தும் வகையிலான கருத்துத்தான். சந்திரிகாவின் கருத்துப்படி, விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமானால் அவர்கள் பகிரங்கமாகப் பயங்கரவாதத்தைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும் என்பதுதான். ஒருவேளை நாற்சந்தி ஒன்றில் நின்று தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் -நாம் பயங்கரவாதத்தை கைவிடுகிறோம்- என தொண்டை கிழியக் கத்த அது சந்திரிகாவின் காதில் விழவேண்டும் போலும்.

இதுதான் சந்திரிகாவின் ஞானம். இன்றைய நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது சந்திரிகாவின் பார்வையில் படும் சவடால் தனங்கள் அல்ல.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் சிறீலங்காவும் தமிழர் தாயகமும் அதாவது விடுதலைப் புலிகளும் சம பங்காளிகளே. இந்த சம பங்குத்தன்மை ஏற்றுக்கொள்ளப்படாமல் ஒருபோதும் இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை தீர்வுக்கு வரமாட்டாது. ஒற்றைத் திருக்கல் வண்டிலில் சமாதானப் பாதையில் உருண்டு சென்றுவிடலாம் என்பது கனவுலக ஞானமாக மட்டுமே முடியும். ஆனால் இன்று இலங்கைத்தீவின் அரசியல் தளத்தை உற்று நோக்கும்போது இந்த சம பங்காளித்தன்மையைச் சிறீலங்காவின் பல அரசியல் தலைகள் ஜீரணித்துக்கொள்ள மறுக்கின்றன. சமாதானம் பற்றிப் பல தடவைகள் கதைத்துக்கொண்டே மீண்டும் அவர்கள் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும் அந்தப் பேரினவாதக் கலவைக்குள் நுழைந்து விடுகின்றன. இது இலங்கைத் தீவில் தொடரும் ஒரு சாபக்கேடு. பல தசாப்தங்களுக்கு முன்னர் இருந்து இந்த மரகதத்தீவின் அமைதியயும் ஒற்றுமையையும் குலைக்கவென இந்தச் சாபக்கெடு சிறீலங்காவில் இருந்து தொடரோட்டம் ஓடிக்கொண்டே இருக்கின்றது. இந்த ஓட்டம் எப்போது முற்றுப் புள்ளியாகின்றதோ அப்போதுதான் சமாதானப் பூவும் மலர்ந்து கொள்ளும். இது எளிமையானதும் யதார்த்தமானதும் ஒரு நிலை.

இந்த நிலை இவ்வாறிருக்க, சிங்களப் பேரினவாதம் இப்போது சமாதானப்

## தமிழர் தாயகம் காட்டும் அக்கறை

பயணத்தைச் சீர்குலைக்கும் வகையிலான காரியங்களை ஆற்றத் தொடங்கியிருக்கின்றன. சமாதானப் பயணத்தில் இருந்து நோர்வேயைக் கழற்றி விடுவது, விடுதலைப் புலிகளை ஒரு போர் விருப்பு சக்தியாகச் சித்தரிப்பது, இந்தியாவிற்குக் காவடி தூக்குவது ஆகியன இந்தப் பெரினவாதத்தின் செயற்பாடுகளாக தற்போது இருக்கின்றன. கெடுகுடி சொற்கேளாது என்கின்ற முதுமொழி போல இந்த ஆபத்தான பாதையைச் சிறீலங்காப் பேரினவாதம் தெரிவு செய்திருப்பதானது அந்த நாட்டிற்கே ஓர் அழிவினை ஏற்படுத்திக்கொள்ளப் போகின்றது என்பதாகத்தான் முடியும். இது வயிற்றெரிச்சல் பட்டுக்கொடுக்கும் ஒரு சாபம் அல்ல. யதார்த்த நிலையை உற்று நோக்கும் போது வெளிப்படும் உண்மை நிலை.

தற்போதையை ஐக்கிய தேசிய முன்னணி அரசு கூட சமாதானம் பற்றிப் பேசினாலும் அதன் பாதையும் ஏதோ சாண் ஏற முழம் சறுக்கும் போக்காகத்தான் இருக்கின்றது. இன்[illegible] உடன்படிக்கையின் பிரகாரம் செய்து முடிக்கப்படவேண்டிய சில விடயங்கள் அரச தரப்பில் இருந்தாலும் அவற்றை முடித்து வைக்கும் விறுவிறுப்புத் தன்மையை அங்கு காணோம். பொக்கை வாய்க் கிழவி பாக்கு இடிக்கும் நிலைபோலத்தான் இந்த அரசின் நடவடிக்கைகள் அமைகின்றன. இது மட்டுமல்ல தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டு மடியிலும் இந்த அரசு மெல்ல கைவைத்தும் பார்க்கின்றது. ஆக மொத்தம் அங்கிருந்து தீர்க்கமான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை வெளியாகவில்லை. ஏதோ இழுத்து இழுத்து செல்லப் பார்க்கும் பாணியே அங்கு தலை காட்டுகின்றது. இந்த நிலையில் தான் வாகரைச் சம்பவம் சமாதானப் பயணத்தில் ஒரு கரும்புள்ளியாக அமைந்தது. இந்த வாகரைச் சம்பவத்தையடுத்து, தமிழர் தாயகம் எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கையே வேறு. ஆனால், சமாதானத்திற்குத் தொடர்ந்தும் தலை வணங்கும் அந்தத் தாயகம் தொடர்ந்தும் பொறுமை காக்கின்றது. விடுதலைப் புலிகளா இவ்வாறு பொறுமை காக்கின்றார்கள் என்ற ஆச்சரியம் கூட சர்வதேசத்தில் எழுந்திருப்பதையும் நாம் மறுக்க முடியாது. இந்த சமாதானத்திற்காகச் சிறீலங்காவின் நீதிமன்றத்தில் கூட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி ஒருவர் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலை, சிறீலங்கா இராணுவ உத்தரவிற்குத் தொலைத் தொடர்பு சாதனங்களைக் களைந்து குடாநாட்டிற்குள் சென்ற நிலை ஆகியன குறிப்பிடத்தக்க விடயங்கள். ஒரு சிறு பொறி கூடச் சமாதானப் பாதையில் பெரும் நெருப்பை உண்டாக்கிவிடக் கூடாது என்பதில் தமிழர் தாயகம் காட்டும் அக்கறையின் நிலைப்பாட்டினால் தான் இந்தப் பொறுமை நீடிக்கின்றது. ஆயினும் இன்று தமிழர் தாயகத்திற்கு எதிராக ஒன்று கூடியுள்ள சிங்களப் பேரினவாதத் தலைமைகள் தொடர்ந்தும் இவ்வாறான பொறிகளை ஊதித்தள்ளுவதும் அனுமதிக்கப்பட முடியாத விடயமுமாகின்றது. குறிப்பாக இந்த விடயத்தில் சிறீலங்கா அரசிற்குத் தான் பல பொறுப்புக்கள் இருக்கின்றன. சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டே இவ்வாறான அபாயகரமான நிலைகளில் அது கண்ணாமூச்சியாட முடியாது. உண்மையைச் சொல்லப்போனால் தற்போதைய சமாதானச் சூழலில் நிகரலாபம் அடைந்துகொண்டிருப்பது சிறீலங்கா அரசுதான். தமிழர் தாயகத்திற்கு இன்னமும் இந்தச் சமாதானத்திற் பலன்கள் பூரணமாக்கிடைக்கவில்லை. தொடர்ந்தும் அங்கு இராணுவக் கெடுபிடிகள் தான் முறுக்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த சமாதானச் சூழலைச் சிறீலங்கா அரசு தனது பொருளாதார நடவவடிக்கைகளைச் சீர்செய்து சர்வதேச அரங்கில் தனது பெயரை உயர்த்திற்கொள்வதற்கு மாத்திரம் பயன்படுத்தும் உபாயமாகக் கைக்கொள்ளுமானால் விளைவுகள் எதுவுமே நல்லவையாக அமையப்போவதில்லை.

**பேம்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# ஆண்டவன் போட்ட முடிச்சு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்திட்டன் சங்கவி. ஆனால் என் பெற்றோரோ தங்களிடம் இருக்கும் சொத்துக்களை அனுபவிக்க வேண்டும் என்றால் எனக்குத் திருமணம் செய்துவைக்கவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.'

'பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு எதைச் செய்தாலும், நல்லது கெட்டதுகளை மிகவும் சிந்தித்து நிதானமாகத்தான் செய்வார்கள். அதை நாம் அவர்கள் எம்மீது திணிப்பதாய் நினைக்கக் கூடாது' துளசி.

'அது சரி சங்கவி, நீ கூறுவதில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டு இந்தக் குருடனோடு குடும்பம் நடத்துவதற்கு ஒருபெண் சம்மதிக்க வேண்டுமல்லவா..? என்னைப் போன்ற ஊனப்பட்ட இதயங்களோடு இருட்டறையில் குடும்பம் நடத்துவதற்கு எந்த ஒரு பெண்ணுமே சம்மதிக்கமாட்டாள். அப்படிச் சம்மதித்தாலும் அந்தப் பெண்ணும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருப்பாள் என்பதுதான் எனது எண்ணம்.'

'வீணான கற்பனைகள் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். நாம் தான் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்.' என்றாள்.

'சங்கவி! நீயும் ஒரு பெண்தானே, என்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி உன்னைக் கேட்டால் நீ சம்மதிப்பாயா...?'

சிறிது நேர மௌனத்தின் பின், 'இன்னாருக்கு இன்னார் என்று எழுதிவைப்பவர் இறைவன். அவர் விதிப்படிதான் எல்லாமே நடக்கும்' என்று, சாதுர்யமாகப் பதிலளித்தாள் சங்கவி.

'அவர் விதிப்படி என்று வைத்துக்கொண்டால் மனங்கோணாமல் என்னை உன் கணவராக ஏற்றுக்கொள்வாயா'...?

'இதில் என்ன சந்தேகம் துளசி! உங்களுக்கு கண் பார்வை இல்லை என்ற குறையே தவிர உள்ளம் தெளிந்த நீரோடைபோல் அமைதியாகவும், தூய்மையாகவும் இருக்கிறது.'

'எதைச் சொல்லிப் புரியவைப்பது என்று எனக்குத் தெரியவில்லை சங்கவி. கண் தெரியாமல் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தபோது, இருந்த சுகத்தையும் நிம்மதியையும் திருமணத்தின் பின் இழந்து விடுவேனோ என்று என் மனம் ஏங்கித் தவித்ததனால் தான் உன்னை அழைத்து ஆறுதல் கேட்டேன்.

ஆனால், உனது பதிலால், உனது உள்ளத்திலும், சிறிதளவு ஏற்படுத்திவிட்டேனோ என எண்ணத் தோன்றுகிறது. தயவு செய்து என்மீது நீ பாசமாய் இரு. எனக்காகப் பரிதாபப்பட்டு உன் வசந்த காலத்தைக் கானல் பயிராக்கிக் கண்ணீருடன் கலந்துவிடாதே.' என்றான் துளசி.

'நீங்கள் தானே சொன்னீர்கள் ஒரு பெண் உங்களைத் திருமணம் செய்யச் சம்மதித்தால், அப்பெண்ணும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருப்பாள் என்று, அந்த வகையில் ஆண்டவன் எனக்கும் ஒரு குறையைத் தந்திருப்பதால்தான், என்னைத் 'திருமணம்' செய்து கொள்வதற்கு இதுவரை எவருமே முன்வரவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள்.'

'இல்லை, சங்கவி உனக்கு ஒரு குறையுமில்லை!'

'எதை வைத்துச் சொன்னீர்கள்...?'

'கள்ளங் கபடமற்ற உன் உள்ளத்தைப் புரிந்துகொண்டதனால் தான் சொல்லுகிறேன்'. என்றான்.

'இல்லை. துளசி நான் அழகில்லை என்பதற்காகத்தான் என்னை மணஞ்செய்துகொள்ள எவருக்குமே மனம் வரவில்லை'. என்று கூறி விம்மி அழுதாள் சங்கவி. அப்போது தான் தனிமரமாய்ப் பிறந்து, சங்கடங்கள் பலவற்றைச் சந்தித்த துளசியின் இதயம், இம்மங்கையின் அவலத்தால் ஈர்க்கப்பட்டு அவள்பால் உவகை கொண்டது.

'சங்கவி, இந்தக் குருடனோடு வாழ்வதற்கு உன்பெற்றோர் சம்மதிப்பார்களா...'?

பதட்டத்தோடு கேட்டான்.

'பக்கவாத நோய் வந்து படுத்த படுக்கையாகிவிட்ட என் தந்தையின் உடல் நிலையைப் புரிந்துகொண்டு தன் இரு பெண்களையும் எப்படிக் கரைசேர்க்கப் போகிறார்...? என்று தினமும் ஏங்கிச் சிந்திய கண்ணீரோடு வாழும் என் தாயின் உள்ளக் குமுறலையும், என்னைக் கடைசியாகப் பெண்பார்க்க வந்தவர்கள், தம் வெளிநாட்டு மகனுக்கு, என் தங்கைதான் மனைவியாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டுக் கேட்க, அக்காவுக்குத் 'திருமணம்' நடக்காமல், தான் 'திருமணம்' செய்துகொள்ளப் போவதில்லை என்று பிடிவாதமாய் மறுத்துவிட்ட என் தங்கையின் உணர்வுகளையும் புரிந்துகொண்டதனால்தான் நான் உங்களுக்கு துணையாகிவிட முடிவு செய்தேன்.

இது அவர்களுக்காக நான் செய்யும் தியாகம் என்று தயவுசெய்து எண்ணிவிடாதீர்கள். அதைவிட மேலாக உங்களுக்காகவும்தான்' என்று கூறித் தன் காதோரமாக வழிந்துகொண்டிருக்கும் கண்ணீரைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டாள்.

'இதை என் அத்தையிடம் கூறி நம் இருவரதும் பெற்றோர்களது சம்மதத்தைப் பெற்றுத்தரும்படிக் கேட்பதற்காகத்தான் அத்தை வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த என்னை, உங்கள் புல்லாங்குழல் இசை தடுத்து நிறுத்தி, இங்கு வரவைத்தது'. என்றாள்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த துளசி, 'இவ்வளவு வேதனைகளையும் சுமந்துகொண்டு என்னைச் சந்திக்க வரும்போதெல்லாம் எப்படி உன்னால் சந்தோசமாகவும் கலகலப்பாகவும் இருக்க முடிந்தது...?' கேட்டான்.

'என்னுடைய வேதனைகளை இன்னொருவருடன் பகிர்ந்துகொள்வதனால், உடைந்துபோன என் உள்ளத்திற்கு ஆறுதல் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும், அதனால்தான்' என்றாள்.

'சரி சங்கவி, இந்த ஊனப்பட்ட இதயங்கள் இரண்டும் ஒன்று சேர்வதன் மூலம், நல்ல இதயங்களாவது நிம்மதியாக வாழட்டும்' என்று கூறிப் பெருமூச்சுவிட்ட துளசி, 'அந்த வெளிநாட்டு மாப்பிள்ளையின் பெற்றோர் ஆசைப்பட்டதுபோல், உன் தங்கை சாம்பவியை அந்த வீட்டிற்கு மருமகளாய் அனுப்பி வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யும்படி, உன் பெற்றோரிடமும், அத்தையிடமும் கூறு'. என்றான்.

அந்த நல்ல உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளைச் செவிமடுத்துக்கொண்டிருந்த சங்கவி 'நம் திருமணத்திற்கு உங்கள் பெற்றோர் சம்மதிப்பார்களா...?

உங்களுக்கு மணப்பெண் தேடுவதாகச் சொன்னீர்கள். அதனால்தான் கேட்கிறேன்..?' என்றாள்.

ஒரு வித அசட்டுச் சிரிப்புடன், 'அவர்களின் தேடலுள் கிடைத்த 'திரவியம்' நீதான் சங்கவி', என்றான்.

சங்கவி சிரித்தாள். கூடவே அவனும் சிரித்துவிட்டு, தன் கையிலிருந்த அந்தப் புல்லாங்குழலை எதிரே சலசலத்து ஓடிக்கொண்டிருந்த அந்த ஆற்றினுள் வீசி எறிந்தான்.

அதைக்கண்டு வியந்துபோன சங்கவி, 'ஏன் துளசி அதை வீசி எறிந்தீர்கள்...? நம் இருவரையும் இணைத்து வைத்ததே அந்தப் புல்லாங்குழல்தானே, அதற்கு நீங்கள் செய்யும் நன்றிக்கடனா இது? எனக் கேட்க,

'இல்லை சங்கவி... இந்தப் புல்லாங்குழல் இதே ஆற்றில் மிதந்து வரும்போது தானே அதை எடுத்து எனக்குத் தந்தாய்! ஞாபகமிருக்கிறதா...?

'இப்போது இதன்வேலை முடிந்துவிட்டது. நம்மைப் போன்ற ஒரு இளம் ஜோடிக்கு இது பயன்பட்டும் என்பதற்காகத்தான் அதே ஆற்றினுள் அதை மிதக்க விட்டேன்.' என்று கூறி முடிக்க கமலவேணி அத்தை அங்கு வரவும் சரியாக இருந்தது.

தன்னைக் கண்டு மிரண்டுபோன சங்கவியைப் பார்த்து, 'எல்லாமே எனக்குத் தெரியும்! சங்கவி நீ செய்யப் போகின்ற இந்தத் தியாகத்தை எப்படிச் சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை' எனக்கூறி உமிழ்நீரை மென்று விழுங்கிவிட்டு, 'இது ஆண்டவன் போட்ட முடிச்சு, இதை அவிழ்க்க யாராலும் முடியாது' என்றாள்!

கமலவேணி அத்தை அவ்விடத்திற்கு வந்திருப்பதை ஊகித்துக்கொண்ட துளசி, 'அம்மா! சங்கவி செய்த இந்தத் தியாகத்தினால், சாம்பவியாவது சந்தோசமாக வாழவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையும் கூட ஆனபடியால், அந்த வெளிநாட்டு மாப்பிள்ளைக்குச் சாம்பவியைத் திருமணம் செய்து வையுங்கள்' என்றான்.

அப்போது, அந்தத் திருமணம் சரிவராது என்று அத்தை சொல்ல, இருவரது உள்ளங்களும் சில நிமிடங்கள் திகைத்துப்போய்விட்டன.

'வெளிநாட்டில் வசிக்கும் அந்தப் பெடியனுக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடன் நீண்ட காலமாகத் தொடர்பு இருந்ததாம். தற்போது அதன் மூலமாக ஒரு குழந்தையும் இருக்குதாம். வெள்ளைக்காரப் பெண்ணுடனான குடும்பவாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தாய்நாட்டுப் பெண்ணைத் தாரமாக ஏற்றுக்கொள்வதற்குத் தம்பி தயாராம் என்று தரகர் வந்து சொன்னதனால் தான் அது நமக்குச் சரிப்பட்டு வராதென்று சொன்னேன்' என்றாள்.

சற்றுச் சிந்தித்துவிட்டு, 'அப்படியெண்டால் நம்ம சந்துருவைச் சாம்பவிக்கு திருமணம் செய்து வைத்தால்...? என துளசி ஆரம்பிக்க, தொடரவிடாமல் தடுத்த கமலவேணி, 'என் அண்ணன் வீட்டிற்கு எனது மகனை மருமகனாக அனுப்பி வைப்பதனால் உறவுப் பாலம் பலமடையும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஆண்டவன் தனக்கு இட்ட தண்டனையினால், தனக்குக் கலியாணமே வேண்டாம் என்று பிடிவாதமாய் இருக்கும் என் பிள்ளையின் மனதைப் புரிந்துகொண்டதனால்தான் நான் இன்னும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தவேண்டாம் என்று கேட்கும் அந்தப் பிள்ளையின் உணர்வுகளையும் கூறுபோடுவதற்கு இந்தத் தாய் மனதுக்குச் சக்தி போதாது' எனக் கூறி, அழ ஆரம்பிக்க, சங்கவி அத்தையை சமாதானம் செய்துகொள்ள, மூவரும் விடைபெற்றுக்கொண்டனர்.

இரு மாதங்களின் பின்பு சங்கவியின் தகப்பன் இறந்துபோக, தொடர்ந்து வந்த துன்பம் என்னும் வெள்ளத்தில் அக்குடும்பம் நனைந்திருந்த போதினிலும், துளசியின் ஆறுதல் வார்த்தைகளால், நெஞ்சினுள் துளிர்விட்ட புதிய நினைவுகளோடு, தன் வாழ்க்கை எனும் 'ஜீவநதி' நந்தவனங்களையும் கடந்து செல்லும். அப்போது, தன் தங்கைக்கும் நல்லதொரு வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சங்கவி காத்திருந்தாள். அவளது நம்பிக்கை வீண்போகவில்லை.



**இ.சிவனேஸ்வரன் (பாரிஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வைபவங்களுக்கு

Wedding and Birthday Invitations
Printed in 48 hours

**DESIGN AND PRINTING**
Posters Stationary etc..

Convert your VHS and DV to Video CDs
Digital Video Editing (NLE)
VideoTitling in Tamil
Phone: 0208 2038587
Mobile: 07780978027
BaseDesigns



SML

# Royal Jewellery



*287. High Street North East Ham.*
*Manor Park, London E12 6SL*
*Tel - 020 8472 5500*
*Fax - 020 8472 5687*



RESTAURANT

# Palm Beach

Finest South Indian & Sri Lankan Cuisine

10% OFF
ALL TAKE
AWAY ORDERS

P.Sivarupan
*Proprietor*

17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA

Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990



# சீலன்ஸ்

இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

*Seelans*

*332 & 334. High Street North*
*East Ham, London E 12-6Ph*
*Tp & Fax- 020 8471 5733*



# Fair Cut Barbers



தமிழில் கதைத்து உங்கள் முடிகளை திருத்துவதற்கு ஆள் இல்லை என்று கவலைப்பட்டதுண்டா? கவலையை விடுங்கள் Fair Cut ஐ நாடுங்கள்.

15 London Road, Tooting, London Sw17 9JR.
Tel: 0208 7673578
Mob: 079 49 723 603

Pub-375



# உடன் விண்ணப்பிக்கவும்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இலங்கை இந்திய உணவகத்திற்கு அனுபவமும் நன்கு தேர்ச்சியும் பெற்ற சமயற் கலை தெரிந்தவர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள். தகுதி உள்ளோர் உடன் விண்ணப்பிக்கவும். விசேட சலுகையுடன், வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**077 65 15 11 00**



# Euro Indian Tourism Consultancy

- ★ விமான நிலையத்திலேயே வரவேற்பு சேவை
- ★ தங்குமிட வசதி
- ★ நீங்கள் விரும்பிய இடங்களைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகள்
- ★ மருத்துவ சேவைக்கான ஏற்பாடுகள்
- ★ வீடு-மனை வாங்குவதற்கான வசதிகள்
- ★ மூத்த பிரஜைகளுக்கு விசேட கவனிப்புகள்

தொடர்புகளுக்கு: **Lavan**
Mobile: 00447812170222
00442088575016

**Euro Indian Tourism Consultancy**
49 Egmore High Road
1st Floor
Egmore, Chennai-8
South India
Phone: 0091448250401
Fax: 0091445512420
Email: issacskeela@yohoo.co

Pub-398



# ஆத்தும ஆதாயமும் சபை வளர்ச்சியும்

புது வாழ்வு A G சபை, சென்னை, தென் இந்தியாவில் 20 000 சபை அங்கத்தினரைக் கொண்டுள்ள மிகப் பெரிய சபையின் போதகரும் உலகளாவிய கருத்தரங்குப் பேச்சாளருமான

போதகர் **D. Mohan** மற்றும்
திருமதி Gethzial Mohan அவர்கள்



**கலந்து கொள்ளும் கருத்தரங்கு மற்றும் மாலை நேர கூட்டங்களுக்குத் தங்களை அன்புடன் வரவேற்கிறோம்**

காலம்: 16 - 18 மே 2002
கருத்தரங்கு நேரம்:
காலை 10.00 - மதியம் 01.00
பொதுக்கூட்டம் மாலை 06.30

இடம்: **Holy Trinity Church**
**Uxbridge Road**
(Opposite to the Southall Park) **Southall.**

அனைவரும் வந்து ஆசீர்வாதமடையுங்கள்.
தனிப்பட்ட ஜெபம் ஏற்றெடுக்கப்படும்
மேலதிகத் தொடர்புகளுக்கு:

**பெத்தானியா தேவாலயம்**
P.O.Box 294. SOUTHALL, UB1 2XY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த சொற்கள் எண்: 89

கீழ் உள்ளவற்றில் 206 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களைக் கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாகவும், சில சொற்கள் இரு முறையும் இருக்கின்றன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | வா | ர் | நி | ள் | அ | நி | யா | ய | ம் | ட | நி | வி | ர் | த் | தி |
| பு | ல் | த | ரு | க | ய | கோ | ப | அ | ம் | மி | ம் | ர் | ரு | ந் | ப |
| ப் | ன் | ல | ப | ம | ம் | ண | ர | த | ட | ம | ள | வ | த | ந் | தி |
| தி | கு | டு | ம் | ப | ம் | ப | ர | ம் | பொ | ரு | ள் | ள் | அ | வ | து |
| ப | க் | ன | ச | க | க | னை | வி | ரி | பி | வா | க | க | ப | ரு | ற |
| ம் | க | வி | ம் | ல் | ல் | ல் | ம | ம் | து | ரு | ம | லை | ய | ரு | வி |
| த | ல் | ப | வ | கு | த | டா | க | ம் | ப | ம் | றி | ஆ | று | ப | டை |
| த் | ரு | ர | ட | ல | ளை | தா | ன் | டை | றி | ற் | கா | ய் | க | ள் | ய |
| சு | ப | ம் | ப | ம் | வி | றை | ப் | பு | வெ | ம் | உ | ப | சா | ர | ம் |
| ன் | ம | ர | ப | ப | ரு | க | ல் | ல | றை | க | க | ல | ர | ல் | உ |
| வ | ழ | ப் | பு | ட | ப | ய | க | தை | ந் | ல | இ | ரி | க | ம | க |
| ய | ரு | ன் | வெ | ண் | இ | ம் | ட் | மா | ம் | உ | ல் | லா | ச | ம் | ன் |
| தி | ர | வ | ம் | ம | ய | ட | ட | த | ர | ரை | ல | ம் | ப | க | வி |
| பு | ப் | ல | க | பு | வ | ட் | ட | ம் | மு | க | ற | ன் | ம் | க | தி |
| ர | ம் | க | ப | ப் | கா | ப | ம் | த | ம் | ற் | ம் | ள | ட | ய் | ம |
| த | ளி | ப | க | ர | க | ம் | ய | ர | மு | ட | வ | ன் | செ | ய | ல் |
| ம் | ம் | ப | ம் | க | தி | த | தி | பு | பி | க | ற் | ப | க | ம் | லி |
| க | ள் | ள | ம் | ர | தி | த் | ப | ப் | க | ற | ப் | பு | ய | னை | கை |
| ளி | ள் | உ | வ | க | ஆ | ர | ரு | ரு | ப | பு | ப் | ரி | அ | ப | த |
| ப | பு | ம் | ரு | க | வ | இ | வ | ப | ப் | ர் | வா | பு | பு | ற் | க |
| பு | கு | ங் | ட | ச | வ | த | ன | ம் | தீ | பு | வெ | ள் | ளி | வி | ழா |
| இ | க | ம் | ம் | ள் | மை | ம் | த | ப | ச | ப் | பு | கா | ப | க | ல் |
| ல் | த | ம | ள | லா | க | ரு | ரு | ர | ப | ம் | ப | த் | தி | ரி | கை |
| ல | த | ம் | ல் | த | கு | க் | தா | ம் | மு | ரி | ப | த | ம | ம் | வ |
| ம் | ல | இ | ண | க் | க | ம் | ம | பொ | சு | க | து | வ | ரு | ர | ம் |
| நி | கு | ம் | ல | ள் | வ | க | ர் | ரு | வ | ன் | ப் | வ | ம் | ண | ம் |
| ம் | ர | க் | ழ | க் | ட | ம் | ள | ள் | ப | பு | உ | பு | ர | ம் | ம் |
| த | ம | ம் | ட | ப | க | ப | ள் | ம் | ன் | பி | ப் | ம | ம | ம் | ர் |
| மு | து | உ | ல் | வ | ம் | ம் | க | வ | ர | கா | ப | று | று | ல | பு |
| கு | ர | லா | ர் | வ | ண | மா | ழ | ம் | து | வ | ள | ம | ம | ப் | ம் |
| ல் | க் | க் | ம் | ண் | யா | கி | பு | பா | டை | து | ம் | ல | வா | த | பு |
| கு | க | க | கி | கு | ர | ங் | கு | ப | ப் | ற | ர் | ர் | ப | ப் | ரு |
| ம் | ரி | லூ | ல் | க | பி | பி | று | ய | ப | வு | ப் | ச் | வ | ழ | வ |
| ச | த் | த | ம் | வ | ண | ஆ | யு | த | ம் | பு | சை | சி | க | ர | ம் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நியமம் | அநியாயம் | நிருபம் | பதிப்பு | நிமிடம் | நிவிர்த்தி | கள்ளம் | ரணம் | அகோரம் | அதம் | நிர்வாகி | கருதல் | கள்வர் | விருந்து | வதந்தி |
| பலன் | பரம்பொருள் | ஆலைகள் | பிரிவினை | மகள் | வாரும் | கம்பி | துறவி | பகல் | குடும்பம் | தகனம் | தம்பதி | குக்கல் | வம்சம் | பம்பரம் |
| பகல் | அருவி | கருடம் | விபரம் | கத்தம் | பரவல் | படம் | விளைதல் | தடாகம் | குலம் | வெற்றிலை | மலையருவி | விடையம் | ஆறுபடை | காற்றிடை |
| தும்மல் | கம்பம் | மகன் | இருப்பிடம் | பிறப்பு | பருத்தி | இரத்தம் | பருப்பு | பத்திரம் | பரவசம் | திரவம் | பம்பரம் | பரம்பொருள் | வம்சம் | பசப்பு |
| வெள்ளிவிழா | முற்றம் | வளம் | இலந்தை | கரும்பு | பாதுகாப்பு | தருணம் | பருக்கள் | மறுப்பு | மக்கள் | இல்லாமை | திரவம் | கரகரப்பு | காப்பகம் | பகலவன் |
| பள்ளம் | வெட்டம் | சம்பவம் | வரம்பு | சபதம் | தம்பட்டம் | குருதம் | ரதம் | கடற்கரை | இல்லறம் | முடவன் | வன்செயல் | வருடம் | தாக்குதல் | சடங்கு |
| கருங்கல் | வள்ளம் | இல்லம் | ஆரம்பம் | ஆத்திரம் | கம்பளி | கரகம் | புரதம் | கள்ளம் | பதியம் | கலப்பு | புதியவன் | மல்லிகை | திருப்பம் | இலக்கம் |
| கிண்ணம் | தீர்ப்பு | துடைப்பம் | உலகம் | அரிப்பு | பிரயாணம் | இடபம் | மாணவர் | விம்பம் | பதமம் | துவரம் | மரணம் | வரம்பு | மறுமலர்ச்சி | மலர்வு |
| சிவப்பு | வார்ப்பு | பத்திரிகை | துன்பம் | பள்ளம் | மாம்பழம் | பல்லாக்கு | கடபம் | கம்பம் | உப்பளம் | உல்லாசம் | மண்டபம் | கறப்பு | வாரியம் | விற்பனை |
| முகப்பு | ஆறுபடை | மும்முரம் | வழப்பு | இணக்கம் | கள்ளர் | பிரம்பு | ஆணவம் | சிகரம் | புருவம் | மறுப்பு | கிரகம் | ஆயுதம் | கிழவன் | வதனம் |
| பருப்பு | குக்கல் | கல்லூரி | வர்க்கம் | சத்தம் | குரங்கு | குமுதம் | வடக்கு | வடகம் | இயல்பு | சம்மதம் | கற்பகம் | தைமாதம் | இயல்பு | வட்டம் |
| கட்டடம் | பருகல் | கம்பன் | விகடன் | கம்மல் | விறைப்பு | கல்லறை | உலகம் | பரமன் | உபசாரம் | பதம் | இகம் | காரம் | உள்ளி | மரம் |
| புரம் | செய்தி | இதம் | வரம் | பழம் | பச்சை | துறவு | மலர் | பரிசு | பயறு | தரம் | துலாம் | உரல் | நிலம் | பகல் |
| கற்பு | கடம் | புயம் | மகரி | கடம் | காய்கள் | தாகம் | மருது | மகள் | பணம் | அம்மி | தந்தி. | | | |

பெயர்:..........................................................................................................................................

முகவரி:........................................................................................................................................

......................................................................................................................................................

பிறந்த நாள்:........................................................................ சந்தாதாரராயின் சந்தா எண்:..............................................

கலைந்த சொற்கள் எண்: 88
பரிசுபெற்றோர்:

ந. சிவகுமார் — சூரிச், சுவிஸ்
கை. அம்பிகா — பேரலின், ஜேர்மனி
நடராஜா — பாரிஸ், பிரான்ஸ்
க. மரியமாயகம் — பொபினி, பிரான்ஸ்
ப. ரவீந்திரன் — பேர்ன், சுவிஸ்

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

LUNE
**12, Rue Perdonnet, 75010 Paris. Tel: 01 42 09 21 43**

கலைந்த சொற்கள் எண்-89 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 90ம், முழக்கம் 385 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

கலைந்த சொற்கள் எண்-89 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 23.05.2002
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
Eelamurasu
22, Rue Perdonnet,
75010 Paris, France.

## சில சொற்களுக்கான விளக்கம்.

நியமம் – ஒழுங்கு, கட்டுப்பாடு
நிருபம் – அறிக்கை
நிவிர்த்தி – நீக்கம் நிறைவுசெய்தல்
அதம் – அழிப்பு
நிர்வாகி – ஆற்றுநர்
கருதல் – உகித்தல்.

கோரம் என்னும் சொல்லின் பொருளிலேயே அகோரம் என்னும் சொல் தமிழ்ப்பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசிகாமணி பதில்கள்

★ படைக்குப் புதிதாக ஆள்சேர்க்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் சிறீலங்கா படையினர் வட கிழக்கில் தமிழ் இளைஞர்களை இணைத்துக்கொள்ள தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*கே. தயாபரன் -பாசல், சுவிஸ்.*

£ தொடர்ச்சியான ஆள்சேர்க்கும் முயற்சிகளில் தென் பகுதிகளில் தொடர் தோல்விகளைச் சந்தித்த படையினர் வேலைவாய்ப்பு ஆசைகாட்டி தமிழ் இளைஞர்களை படையில் சேர வைக்கலாம் என்ற ஒரு நப்பாசையில் இறங்கியுள்ளனர். அதுமட்டுமன்றி புலிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் பேராதரவும், பல இளைஞர்கள் தொடர்ந்தும் புலிகளுடன் தம்மை இணைத்து வருவதையும் கண்டு சகித்துக் கொள்ள முடியாத படையினரின் இயலாமையின் வெளிப்பாடாகவும் இதனைக் கொள்ளலாம்.

★ இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அல்லி வீல்ஸ் அவ்வப்போது புலிகளைக் கண்டித்தும், அவர்களுக்கு உபதேசம் செய்தும் அறிக்கைவிட்டு வருகிறார். ஆனால் சிறீலங்கா தரப்பின் தவறுகளையெல்லாம் கண்டு கொள்கிறாரில்லையே?

*தா. சுந்தரவேல்- முஞ்சன், ஜேர்மனி.*

£ தனது வல்லாதிக்க தேவைகளுக்காக இலங்கையை ஏதோவொரு வகையில் பயன்படுத்திக்கொள்ள முனையும் அமெரிக்கா, அதற்குத் தடையாக இருப்பதாகக் கருதும் புலிகளை அவ்வப்போது தூதுவர் வீல்ஸ் மூலமாக மிரட்ட முயல்கிறது. தமிழீழப் பகுதியில் திருமலையிலோ அல்லது பலாலியிலோ ஒரு தளத்தை ஏற்படுத்திக்கொள்ளும் கனவுடன் காய்களை நகர்த்தும் அமெரிக்கா அப்பகுதி புலிகளின் ஆளுமைக்குள் இருக்கும்வரை தமது களவு நிறைவேறப் போவதில்லை என்பதை நன்கு அறிந்தே வைத்துள்ளது. ஆதலால் தமிழீழம் அமைந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் விழிப்பாக இருக்கும் அமெரிக்கா வீல்ஸ் மூலம் அவ்வப்போது விளையாட்டுக் காட்டுகிறது. அந்த வீல்ஸ் அவர்களுக்கு சமாதான முயற்சிகளில் சிறீலங்கா படைத்தரப்பின் தவறுகளைப் பற்றி சுட்டிக்காட்ட என்ன தேவை இருக்கப்போகிறது.

★ நோர்வே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தமது மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதாகவும் இதனால் போர் நிறுத்தத்தை கண்காணிக்க இந்தியாவையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*கோ. பூபாலசிங்கம் -பாரிஸ் -19, பிரான்ஸ்.*

£ இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடவிரும்பாது ஒதுங்கியிருக்கும் இந்தியா நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளை முழுமனத்துடன் வரவேற்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்நிலையிலே இந்தியாவை இதற்குள் வலிந்து இழுத்துவிட்டு நோர்வேயுடனும், புலிகளுடனும் முரண்படவைத்து தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு சாவுமணியடிக்கலாம் என பேரினவாத சக்திகள் புதிய வியூகம் அமைக்கத் தலைப்பட்டுள்ளன. இந்தியாவின் பரம எதிரியாக தன்னை வெளிப்படுத்தி வந்த ஜே.வி.பி கூட இந்தியாவின் காலடியில் விழத் தயாராக இருக்கும் அவல நிலையை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

**ஐ.நா. சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற சந்திரிகா அம்மையார், புலிகள் சிறுவர்களை படையில் சேர்க்கிறார்கள் என்று கண்ணீர்விட்டு அழுதாராமே உண்மைதானா?**

★ ஐ.நா. சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற சந்திரிகா அம்மையார், புலிகள் சிறுவர்களை படையில் சேர்க்கிறார்கள் என்று கண்ணீர்விட்டு அழுதாராமே உண்மைதானா?

*எஸ். பூவேந்தன்-கம்பேர்க், ஜேர்மனி.*

£ அழுதாரா என்பது தெரியவில்லை. அப்படி அழுதிருந்தாலும் புலிகளுடன் சேர்ந்த சிறுவர்களுக்காக அழுதிருக்கமாட்டார். ஆனால் தனது கொடுங்கோல் ஆட்சியிலே கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகளை நினைத்து அழுதிருப்பார்- தன் ஆட்சியில் குண்டுவீச்சாலும், செல்வீச்சாலும் அங்கவீனர்களாக்கப்பட்ட ஆயிரம் ஆயிரம் தமிழ்க் குழந்தைகளை நினைத்து அழுதிருப்பார். தன் ஏவல் விமானங்களால் குண்டுவீசி அழிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும் அங்கே கல்வி இழந்த, உயிரிழந்த குழந்தைகளையும் நினைத்து அழுதிருப்பார். தனது பேரின ஆட்சியில் பெற்றோர்களை இழந்து தவிக்கும் ஆயிரக்கணக்கான அநாதரவுச் சிறுவர்களை நினைத்து அழுதிருப்பார். மனச்சாட்சி அழுத்தி மனதுக்குள் அழுதிருப்பார்.

★ அண்மையில் நடந்து முடிந்த பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் தீவிர வலதுசாரியான லு பென்னை எதிர்த்துப் போட்டி மிட்ட ஜக்சிராக் அமோக வெற்றியீட்டியுள்ளது பற்றி உங்கள் கருத்தென்ன?

*எஸ். ஜெயகாந்தன்-பாரிஸ் 19, பிரான்ஸ்.*

£ பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலுக்கான முதல் சுற்றிலே எவருமே எதிர்பாராத வண்ணம் தீவிரவலது சாரியான லு பென் இரண்டாவதாக வந்து பிரான்ஸ் நாட்டு மக்களை மட்டுமன்றி ஐரோப்பாவையே அதிர்ச்சிக்குள்ளாக்கினார். லு பென் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட அந்தக் கணத்திலிருந்து பிரான்ஸ் மக்கள் இலட்சக்கணக்காக வீதிக்கு இறங்கி இனவெறிக்கும் பாசிசத்திற்கும் எதிரான தமது உறுதியான குரலை ஓங்கி ஒலித்தார்கள். குறிப்பாக மாணவர் சமூகம் என்றுமில்லாதவாறு பேரலையென வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி இனவெறிக்கெதிரான வரலாறு காணாத மக்கள் எழுச்சியினை பிரான்ஸ் மீண்டும் சந்தித்தது. இறுதியில் பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் 81.97 வீத வாக்குகளைப் பெற்று ஜக்சிராக்கை வெற்றியீட்ட வைத்த மக்கள் இனவெறிக்கெதிரான தங்களின் வலிமையான உள உணர்வை வெளிப்படுத்திக்கொண்டனர்.

**உங்கள் கேள்விகளை,**
புத்திசிகாமணி பதில்கள்
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**


உலகம் முழுவதும் அழைப்புகளை விரைவில் பெறுவதற்கு

**Dialog Calling Card**

தெளிவான ஒலி
கூடிய நிமிடங்கள்
குறைந்த விலையில்

**Dialog Calling Card**







தொடர்புகளுக்கு:
06 88 13 99 91
01 40 40 14 32

| Destination | Local | Vert |
|---|---|---|
| Algerie | 90 | 70 |
| Bangaladesh Dhaka | 92 | 75 |
| Benin | 50 | 40 |
| Cameroun | 60 | 50 |
| Chine | 203 | 128 |
| Colombie | 140 | 100 |
| Cote d'ivoire | 60 | 50 |
| Egypte | 50 | 43 |
| Gabon | 60 | 50 |
| Gambie | 60 | 50 |
| Guinee | 65 | 54 |
| Inde | 45 | 38 |
| Isreal | 250 | 127 |
| Kuwait | 79 | 64 |
| Liban | 70 | 58 |
| Mali | 50 | 40 |
| Pakistan | 45 | 38 |
| Philippines | 106 | 81 |
| Pologne | 200 | 127 |
| Portugal | 300 | 127 |
| Senegal | 75 | 60 |
| Srilanka | 50 | 40 |
| Europe | 600 | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றித் திருமகன்

— பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் — (டிகோல் தொடர் - 94)

24.05இல், கோர்சிக்கா தீவு, பாரிசின் அதிகாரத்தை மதியாமல், அல்ஜீரியாவில் இருந்த இராணுவத்துடன் இணைந்துகொண்டது. இழந்த தொடர்பை மீண்டும் ஏற்படுத்த, கோர்சிக்கா தீவை, அல்ஜீரியாவின் இராணுவத்திடம் இருந்து பிரிக்க, அன்றைய பிரஞ்சு அரசால் முடியவில்லை. அரசு பலவீனமாய் இருந்தது.

அல்ஜீரியாவில் நிலைகொண்டிருந்த பிரஞ்சு இராணுவம் பாரிசிலும், பிரான்சின் பல பகுதிகளிலும் வந்து இறங்கப் போகிறது என்ற வதந்தி வேறு பரவி வந்தது. 25.05இல், சோ. தலைவர் மொல்லே, டிகோலுக்கு ஒரு மடலை அனுப்பினார். அதைப் படித்த ஜெனரல், சோஷலிஸ்டுகள், இறுதியில் அவரை ஆதரிப்பார்கள் என்று நம்பினார்.

27.05 இல், அவர் தனது அனுபவத்தைப் பயன்படுத்தினார்.



14.05 இல், பாராளுமன்றம் ஏற்ற அமைச்சர் அவை ஆட்சியில் இருந்தபோதே, புதிய அறிக்கையை வெளியிட்டார். அதில்

'நாட்டின் ஒற்றுமையையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஒரு அரசை அமைக்கும் பணியில் நேற்று முதல் ஈடுபட்டுவிட்டேன்.

இந்தச் சூழ்நிலையில், பொது ஒழுங்கைக் குலைக்கும் நடவடிக்கையில் எவரும் இறங்கக் கூடாது. இப்படிப்பட்ட வேலைகளில் யார் ஈடுபட்டாலும் நான் ஏற்க முடியாது...' என்று குறிப்பிட்டார்.

டிகோல் இங்கே, தந்திரத்தைப் பயன்படுத்தினார். அவர் ஆட்சி அமைப்பதற்கு, ஃப்லெம்லென் அமைச்சரவை பதவி விலக வேண்டும். ஃம்லெம்லென், மிகவும் பலவீனப்பட்டு இருந்தாலும், பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கவே விரும்பினார். உண்மையில், ஜெனரல் புதிய அரசை அமைக்கும் பணியில் ஈடுபடவில்லை. ஆனால், இந்த அறிக்கை மூலம் ஃப்லெம்லெனைப் 'பதவி விலகுங்கள்' என்று கட்டாயப் படுத்தினார்.

27.05 இல், அவரது அறிக்கையைத் தொடர்ந்து, சோஷலிஸ்டுக் கட்சி, அவரைப் பிரதமர் ஆக ஏற்க முடியாது என்று அதிகார பூர்வமாக அறிவித்தது.

ஜெனரல் பதட்டப்படவில்லை. சோஷலிஸ்டுக் கட்சி தனது முடிவை மாற்றிக்கொள்ளும் என்று எதிர் பார்த்தார்.

28.05 இல், பிரதமர் ஃப்லெம்லென் தனது அமைச்சரவையின் பதவிவிலகலை, வேறு வழி இன்றி, கு.அ.தலைவரிடம் அளித்தார்.

அன்றே, பாரிசில், இடது சாரி சக்திகள், டிகோலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மிகப் பெரிய 'ஃபாசிச எதிர்ப்பு' ஊர்வலத்தை முன்நின்று நடத்தின. [அன்று, அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட வருங்கால பிரதமர் ரொக்கார் [Rocard], 1981 ஃபெப்ரவரியில், 'ஜெனரல் டிகோல், அவரது ஆட்சிக் காலத்தில், நமது அடிப்படைச் சுதந்திரம் எதிலுங் கை வைக்கவில்லை' என்று கூறுவார்.

ஒரு நல்ல மனிதரை, தலைவரை, அரசியலில் எதிர் அணியில் இருந்ததால், 'ஃபாசிஸ்ட்' என்று அழைத்தது போன்ற பல தவறுகளைச் செய்ததனால்தான், பிரஞ்சு கம்யுனிஸ்டுக் கட்சி 30 விழுக்காடு வாக்கு வங்கியில் இருந்து, இன்று 3 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெறுங்கட்சியாகச் சரிந்து இருக்கிறது]

அடுத்த நாளில்[29], குடியரசுத் தலைவர் கொத்தி, பாராளுமன்றத்துக்கு ஒரு செய்தி அனுப்பினார்-அதில் நாடும், குடியரசும், ஆபத்தில் சிக்கி இருக்கும் இவ்வேளையில், நான் மிகப் புகழ் வாய்ந்த பிரஞ்சுக்காரர் ஜெனரல் டிகோல் பக்கம் திரும்புகிறேன்.

எந்தச் சூழ்நிலையில் ஆட்சியை ஏற்க அவர் சம்மதிப்பார் என்பதைத் தெரிவிக்க, என்னை வந்து சந்திக்கும்படி அவரிடங் கேட்டுள்ளேன். பாராளுமன்றம் அவருக்குப் பெரும்பான்மை அளித்து, அவர் ஆட்சிக்கு வருவதற்கு வழி வகுக்காவிட்டால், நான் பதவி விலகி விடுவேன்...'

கு.அ.தலைவர் கொத்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். 12 வருடங்களாக, 4வது குடியரசு தள்ளாடுகிறது. நாட்டை நிமிர்த்த டிகோலால்தான் முடியும் என நான் நம்புகிறேன். நீங்கள் அவரை ஆட்சி அமைக்க ஏற்காவிட்டால், நானும் போய்விடுகிறேன். பிறகு, நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். அதற்கெல்லாம் நான் பொறுப்பு அல்ல...

29.5 மாலையில், டிகோல் கு.அ.தலைவர் கொத்தியைச் சந்தித்தார். அவரது திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

1. பாராளுமன்றம் எனக்கு, 6 மாத காலத்துக்கு, அனைத்து அதிகாரங்களையும் அளிக்க வேண்டும்.
2. அதே 6 மாத காலத்துக்கு, இன்றைய பா.மன்றம் கூட்டப்படக் கூடாது.
3. அதே 6 மாத காலத்தில், நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் சட்டத்தைத் தயாரித்து, அதனை மக்கள் முன் சமர்ப்பித்து, அவர்கள் சம்மதத்தைப் பெறுவேன்.

கொத்தியின் சம்மதம் ஜெனரலுக்குக் கிடைத்தது.

30.05இல், சோஷலிஸ்டுத் தலைவர் மொல்லே, அவரை, அவரது கிராம வீட்டில் சந்தித்தார். மூன்று நாட்களுக்கு முன் அவரை எதிர்த்தவர்கள், இனி அவரை ஆதரிப்பார்கள். பா.ம. சோ. உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. பாராளுமன்றத்தில் பல சோஷலிஸ்டுகள் டிகோலை எதிர்த்து வாக்களிப்பர்.

[ஒரு பிரஞ்சு சரித்திர ஆசிரியர், சோ-தலைவர் மொல்லே, மே 58இல், ஒரு சரியான முடிவை எடுக்க முடியாது தவித்தார் என்றும், அந்த மாதத்தில், அவர் ஒரே சமயத்தில், எதிர்-எதிரான பல கருத்துக்களைக்கொண்டு இருந்தார் என்றும் எழுதி உள்ளார்]

01.06.58 இல், ஜெனரல் தனது அமைச்சர்கள் பட்டியலை வெளியிட்டார். மொத்தம் 15 அமைச்சர்கள் -இது ஒரு குறுகிய கால அமைச்சரவை. அவரது நீண்ட கால ஆதரவாளர் இருவர், கம்யுனிஸ்டு கட்சியை விலக்கி, மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள், வெளிநாடுகள் உறவு, பாதுகாப்பு, உள்துறை ஆகிய மூன்று முக்கிய துறைகளுக்கும், அரசியல்வாதிகள் அல்லாத மூத்த அரசு ஊழியர்கள், நிதித்துறைக்கு ஒரு முன்னாள் பிரதமர் என அவரது அமைச்சரவை அமைந்தது.

அன்று பிற்பகல் 3 மணிக்கு, தனி ஆளாக, பாராளுமன்றத்தில் அவர் நுழைந்தார். ஜனவரி 46க்குப் பின், இப்போதுதான், இங்கே வந்தார். சுருக்கமாக, தனது திட்டத்தை, பா.ம.உறுப்பினர்கள் முன் படித்தார். பேசி முடித்ததும், விவாதத்தில் பங்கு பெறாது, மன்றத்தில் இருந்து வெளியேறினார். அவரது அமைச்சரும், சோஷலிஸ்டுத் தலைவருமான மொல்லே, மன்றத்தில் இருந்து, விவாதத்தைக் கவனித்தார். டிகோலின் திட்டத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பலர் பேசினர். François Milterrand கடுமையாக எதிர்த்துப் பேசினார்.

முடிவாக, வாக்கெடுப்பு இடம்பெற்றது.

புதிய அமைச்சரவையையும், புதிய பிரதமரின் திட்டத்தையும் ஏற்று 329 வாக்குகளும், எதிர்த்து 224 வாக்குகளும் பதிவாயின.

வாக்கெடுப்பு விபரங்கள் தெரிந்ததும், கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் மட்டும், 'சர்வாதிகாரம் ஒழிக! ஃபாசிசம் வெற்றி பெறாது!' என்று கூச்சல் இட்டனர்.

அதிகார பூர்வமாக, சட்ட பூர்வமாக, சனநாயக முறையில், ஜெனரல் டிகோல் பிரான்சின் பிரதமர் ஆனார்.

[தொ டரும்]

# கவிக்களம்

## என் ஆத்மா கிடக்கின்றது

என் ஆத்மா
இன்னும் காத்துக் கிடக்கின்றது..!
இந்த
எலும்புகளில்
எது எனதாக இருக்கும்...
எந்தத்
தழும்புகளில் வைத்து
என்னை அடையாளப்படுத்தப்போகிறீர்கள்.

எதற்காக
இந்தத் தேடல்கள்.
என்
மண்டை ஓட்டில் விழுந்த
அடிகளின் எண்ணிக்கைகளையா
கணக்கெடுக்கப்போகிறீர்கள்
என் சதைகளைச்
சிதைத்தவனிடமா சாட்சியம்
கோருகிறீர்கள்.

அதோ
அங்கே நிசப்தமாக
மௌனித்திருக்கின்றதே
அந்த ஏரியைக் கேளுங்கள்
உண்மைகளை ஒப்புவிக்கும்.
செம்மணிச்
சுடலைக்கு மேலே
குந்தியிருந்து கூவுகின்றதே
அந்த குருவியைக் கேளுங்கள்
இருளில் நடந்தேறிய
கோரங்களை சாட்சி பகிரும்.

என்
உடலை எச்சிப்படுத்திய பின்
காடைக் கூட்டங்களால்
தொண்டைக்குழி
அறுக்கப்பட்டது
அந்த
வலிகளையும் மீறி
தண்ணீருக்காய் நான் அலறியபோது
என்
முகத்திலே
சிறுநீர் கொண்டு நனைத்துச் சிரித்தார்களே
அதுவாவது தெரியுமா உங்களுக்கு..!
மானத்தின்
வேரிலே விளைந்த இனத்தை
மண்ணுக்குள் விதைத்து விட்டார்களே
அதைப்பற்றியா விசாரிக்கப் போகிறீர்கள்...!

ஒரு
சோமவன்சவும்
சில கேடிகளும் மட்டும் தான்
வெளிச்சத்திலே
தலைமை இன்னும்
தலைமறைவாகத்தான் இருக்கின்றது ...?
அம்பு
மட்டும் தான்
அகப்பட்டிருக்கின்றது
இயக்கியவன் இன்னும்
ஒழிந்துதான் இருக்கிறான்.

வெறும் எலும்புகள்
என்று இந்த எச்சங்களை
தயவு செய்து எரித்து விடாதீர்கள்
டினோசர்களைப்போல இவைகளும்
பல சேதி சொல்லும்
வரும்காலத்திற்கு...

வாருங்கள் இங்கே
நான்
விழித்திருக்கின்றேன்
பேசுவதற்காய்.
உடல்
மட்டும் தானே அழிக்கப்பட்டது
என் ஆத்மா
இன்னும் காத்திருக்கிறது
உங்களோடு பேசுவதற்காய்...!

மட்டுவில் ஞானக்குமாரன்
— ஜேர்மனி —

(செம்மணியில் கொல்லப்பட்டவர்களை அடையாளப்படுத்திய காட்சியின் தாக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுது




ஒரு புத்தகம் வாசிக்கவே கிடைப்பதில்லைப் பொழுது. நான் என் இருபது வயதுப் பராயத்தில் நிறைய வாசிப்பேன். படுத்திருந்து சாமம் இரண்டு மூன்று மணிவரை என் வாசிப்பு இருக்கும். இதைச் சொல்லச் சற்றுக் கூச்சம்தான். என்றாலும் சொல்கிறேன். மலசலகூடத்திற்குப் போகிற போதும் என் கையில் புத்தகம் இருக்கும். அப்படி ஒரு காலம் அப்போ இருந்தது. எல்லாத் தரத்திலும் நிறைய வாசித்தேன். இப்போ வேலைப்பளு. நிறைய வேலைகள், யாந்திரீகமான இயக்கம். ஒன்றும் வாசிக்க முடிகிறதில்லை. எழுதவும்தான். மலசலகூடத்தில் ஒரு பத்துநிமிடம், வேலைக்கு றெயினில் போய்வர எடுக்கும் அரைமணித்தியாலம். இவைதான் ஒருநாளின் என் வாசிப்பு நேரம். இதற்கு மிஞ்சி நேரத்தை மிச்சம் பிடிக்க என்னால் முடிவதில்லை.

அப்படி ஒரு இக்கட்டிலும் நேரம் ஒதுக்கி ஒருபுத்தகம் வாசித்து அல்ல, பார்த்து முடித்தேன். அதுபற்றி சிறு குறிப்பாவது வரையவேண்டும். **இலண்டன் நியூகாம் தமிழர் நலன்புரிச் சங்கம்** தனது பத்தாவது ஆண்டு மலரை 96ஆம் ஆண்டு வெளியிட்டது. தொகுப்பாசிரியராக **இ. பத்பநாபஅய்யர்** இருந்தார். நான் அப்போ இலண்டனில் இருக்கவில்லை. ஜேர்மனி பிராங்பேர்ட்டிற்கு **பாரதிதாசனிடம்** போயிருந்தபோது வாசிக்கக் கிடைத்தது. நல்லதொரு தொகுப்பு என்று அப்போது நான் வியந்தேன். அடுத்த வருடமே (97இல்) **பத்மநாப அய்யர்** அதே சங்கத்திற்காக **'கிழக்கும் மேற்கும்'** என்றொரு தொகுப்பினை வெளியிட்டார். ஈழம், தமிழகம், ஐரோப்பா, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களின் தமிழ்ப் படைப்பாளிகள் பலரது தரமான படைப்புக்களும் அதில் இருந்தன. அப்போதும் நான் இலண்டனில் இருக்கவில்லை. ஆயினும் அய்யரின் தொடர்பு கிடைத்தமையால் அந்தப் புத்தகம் எனக்கு உடன் கிடைத்தது. பிறகு நான் இலண்டனுக்கு வந்தபிறகு 98இல் **இன்னுமொரு காலடி** தொகுப்பு நூல் வெளிவந்தது. வெளிவந்த கையோடு அய்யரின் கையிலிருந்து அதனைப் பறித்துவிட்டேன். ஒரு தொகுப்பு நூலின் சிறந்த பரிமாணத்தை அது பெற்றிருந்தது. பிறகு 99இல் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி அது என்பதால் **யுகம்மாறும்** என்னும் குறியீட்டுப் பெயருடன் ஒரு தொகுப்பு நூல் வெளியாயிற்று. உலகத் தமிழ்ப் படைப்பாளிகளின் வெகு சிறந்த ஒரு தொகுப்பு நூல் அது என்று கூடக் கூறலாம். அய்யரின் இத்தகைய தொகுப்பு முயற்சிகளின் பின்னர் பல தொகுப்பு நூல்கள் வெளியாகின. கனடாவிலிருந்து, **அளவெட்டிக்** கிராமத்தைப் பற்றியும் அக்கிராமத்துப் படைப்பாளிகளின் படைப்புக்களைத் தொகுத்தும் **பூச்சொரியும் பொன்னொச்சி மரம்** என்றொரு தொகுப்பு நூலும், பிரான்சிலிருந்து **அடுத்த காலடி**, இருள்வெளி **சனதருமபோதினி** முதலான தொகுப்பு நூல்களும் வெளியாகின. இப்பொழுது **இலண்டன் நியூகாம் தமிழர் நலன்புரிச்சங்கம்** அடுத்த தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளது. இ. பத்மநாப அய்யரின் தொகுப்பு அது. **கண்ணில் தெரியுது வானம்** என்பது அதன் பெயர். அதனைத்தான் வேலைக்கு றெயினில் போகவர பார்த்து முடித்தேன் என்று சொன்னேன். உருவத்தில் சிறியதாய், தொக்கையாய், உள்ளடக்கத்தில் பெரிதாய் வந்திருக்கிறது. 518 பக்கங்களாலான இத்தொகுப்பில் 91 படைப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஈழத்துப் படைப்பாளிகள் என்று **ஞானசேகரன் மு. பொன்னம்பலம், சிவசேகரம், நந்தினி சேவியர், வில்வரத்தினம்,** இங்கிலாந்திலிருந்து **அருந்ததி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், மு. புஷ்பராஜன், அ. இரவி, மு. நித்தியானந்தன், யமுனா ராஜேந்திரன்,** பிரான்சிலிருந்து **கி.பி. அரவிந்தன், சிவலிங்கம் சிவபாலன், தா. பாலகணேசன்,** ஜேர்மனியிலிருந்து **பார்த்தீபன், நா. கண்ணன், பொ. கருணாகரமூர்த்தி,** நோர்வேயிலிருந்து **தமயந்தி, இளவாலை விஜயேந்திரன்,** டென்மார்க்கிலிருந்து **கி.செ.துரை,** சுவிசிலிருந்து **ரவி, ரஞ்சி,** கனடாவிலிருந்து **சுமதிரூபன், வசந்திராசா, கருணா, துர்க்கா, செழியன், அ.முத்துலிங்கம்,** அவுஸ்திரேலியாவிலிருந்து **பாமதி சோமசேகரம், நட்சத்திரன் செவ்விந்தியன்,** அமெரிக்காவிலிருந்து **காஞ்சனா தாமோதரன், சிறீதரன், சித்தார்த்த சேகுவேரா,** மற்றும் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. **அருந்ததி, கே.கே.ராஜா, கொன்ஸ்ரன்ரைன்** ஆகியோரின் ஓவியங்களும் புகைப்படங்களும் **மூனாவின்** கார்ட்டுன் சித்திரங்களும் இடம்பெற்ற அழகான தொகுப்பு இது. **கே.கே.ராஜா** புத்தக வடிவமைப்பைத் திறம்படச் செய்திருந்தார்.

வாசித்த படைப்புகளில் ஆச்சரியப்படும்படியாக நிறைய நம்பிக்கைகள் தெரிகின்றன. இத்தகைய தொகுப்பிற்குரிய அழுத்தம் படைப்புகளில் வெளிப்படுகின்றது. நேர்கோட்டுப் படைப்புக்கள் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு விலகிப்போக, செழிப்புற்ற உருவத்துடன் படைப்புக்கள் வலிமை பெற்று மிளிர்கின்றன. இத்தொகுப்பிலுள்ள அத்தனை படைப்புக்களும் அப்படியென்று சொல்ல இயலவில்லை. பெரும்பான்மைகூட அப்படியல்ல. மிகச் சிறுபான்மைதான். எனினும் அவைகளால் தொகுப்பின் பலம் பெருகுகிறது. நன்கு பயிற்றப்பட்ட கைதேர்ந்த கலைஞரின் ஆளுமைக்குள் அவை சிக்குப்பட்டு ஆனால் சிக்கலில்லாமல் வெளிப்படும் நேர்த்தி, படைப்பையும் அது தாங்கும் தொகுப்பையும் பலப்படுத்துகிறது. இப்பலத்தைச் சாத்தியப்படுத்திய தொகுப்பின் சில கதைகள் என்று அவற்றைப் படைத்தோர் இருவரைக் குறிப்பிடலாம். **சிறீதரன்** ஒருவர். அவரது **இராமாயண கலகம்** குறிப்பிட்டேயாக வேண்டிய ஒரு கதை. சிறீதரன் சில கதைகளே எழுதியிருக்கிறார். அந்தச் சிறு கதைகளை ஓரளவு நான் வாசித்திருக்கிறேன். தமிழ்ச் சிறுகதை உலகில் வீச்சு கைவரப் பெற்ற ஓர் உன்னத படைப்பாளி அவர். இத்தொகுப்பு நூலிலேயே **சிறீதரனின் படைப்புலகம்** என்று சிறீதரன் பற்றியும், அவரது **இராமாயணக் கலகம்** பற்றியும் **மு. நித்தியானந்தன்** வெகுசிறப்பான ஆய்வொன்றினை வரைந்திருக்கிறார்.

அவ்வாறு குறிப்பிடவேண்டிய இன்னொரு படைப்பாளி **சித்தார்த்த 'சே'குவேரா.** நேர்கோட்டுத் தளத்தில் இவரது படைப்பை அணுகமுடியவில்லை. இவரது எட்டுப் படைப்புகள் கதையாகவும், கவிதையாகவும், படைப்பு மொழியை நம்முள் பாய்ச்சுகின்றன. ஒரு சமயம் இவரது மொழி புரிபடுவதில் சற்றுச் சிரமத்தைத் தர முயலினும், அஃதொன்றும், படைப்பை தோல்வியுறச் செய்யவில்லை. **சித்தார்த்த 'சே'குவேராவின் படைப்பு மொழி குறித்து** என்கின்ற **யமுனா ராஜேந்திரனின்** சிறுவரைவு ஒன்று இத்தொகுப்பில் இடம்பெற்ற சித்தார்த்த சேகுவேராவின் படைப்புக்களை அறிமுகம் செய்கிறது. சித்தார்த்த சேகுவேராவின் கதைகள் வலிமை பெற்றவையாக விளங்குகின்றன. அவரது கவிதை மொழியும் சுவாரஸ்யமானது. சிலசமயம் மரபார்ந்ததும் பலசமயம் நவீனத்துவம் கொண்டதாகவும் அவரது கவிதைகள் பேசுகின்றன.

**காலை பேர்ஹர், மதியம் பருப்பு**
**மாலை பிட்ஸா**
**இடையில், தேநீர், நடையில் கோப்பி**
**எக்ஸ்பிரஸோ நுரைக்கும்**
**ஸம்பேன் மதுரம் ருசிக்கும்**
**பியர் பாகற்கச்சல்,**
**எல்லாம் செரிக்கும்**
**என் ஈழத்து இரைப்பை**
**'இவ் வித்தை எப்படி உனக்கு சாத்தியம்?'**
**என்பார் சக அமெரிக்கர்**

இது அவரது கவிதை மாதிரி. ஒன்று இப்படி இருக்கையில் இன்னொன்று வேறு மாதிரி விரியும்.

**பின்னு**
**கருஞ்சிலந்தி**
**நீ பின்னு**
**முன்னும் பின்னும்**
**ஊறுநீர் அள்ளி உமிழ்ந்து**
**எண்ணத்தில் வலையொன்று**
**இழுத்திலுத்தியைந்தின்னும்**
**பின்னு**
**பெருஞ்சிலந்தி**
**பின்னும் பின்னு**
**நீ**

இக்கவிதையின் ஓசையும், சந்தமும், எண்ணமும் மரபார்ந்தவை மட்டுமல்ல, ஆழமானவை.

இருவர் பற்றி மட்டும் கூறித் தொகுப்பை நிறைவு செய்வது சரியல்ல. **அ.முத்துலிங்கம்** ஈழத்து சிறுகதைப்படைப்பாளிகளில் உச்ச இடத்தைப் பிடித்தவர். அறுபதுகளின் பிற்கூற்றில் **அக்கா** என்னும் தொகுப்பினூடாக அடையாளம் காணப்பட்டு இப்போதும் அதே வீச்சுடன் எழுதுபவர். எள்ளல் (Satire) பாணி இவரது. புன்சிரிப்பு மட்டுமல்ல, பெருஞ்சிரிப்பும் இவரது கதைகளை வாசிக்கிறபோது கிடைக்கும். ஆயினும் துயர் கசிகிற கதைகளும் நேர்த்தியாக கைவரும். **கூந்தலழகி** என்றொரு சிறுகதை இத்தொகுப்பில் வந்திருந்தது. வாசிக்கிறபோது வரிவரியாக விளங்கிய கதை முடிகிறபோது சொல்லவந்தது என்ன என்பதில் சற்றுக் குழப்பத்தைத் தந்தது.

இம்முறை **பொ. கருணாகரமூர்த்தியின்** நல்லதொரு சிறுகதை வாசிக்க முடிந்தது. **கூடு கலைதல்** என்பது அந்தச் சிறுகதை. எப்பொழுதும் நீண்ட கதை எழுதுகிற கருணாகரமூர்த்தியின் இச்சிறுகதையும் நீண்டிருந்தாலும் சுருக்கென்றிருந்தது. கருணாகரமூர்த்தியின் 'தமிழகப் பிரமை' தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஈழத்துக் கதையை அவர் அக்ரகாரத் தமிழில் (பிராமணாள் பாஷை) எழுதுகிறபோது கொஞ்சம் கோபம் வரத்தான் செய்யும். இதிலும் வந்தது. **'சரஸ்வதியில போய் ஒரு டீ சாப்பிடுவோமா சேர்'** ஈழத்தில் ஒருவரும் 'டீ சாப்பிடுவதில்லை' 'ரீ குடிப்பார்கள்! அல்லது 'தேநீர் அருந்துவார்கள்! இப்படி இன்னும் சில உதாரணங்களைச் சொல்லலாம். தவிர்ப்போம்.

**கண்ணில் தெரியுது வானம்** என்ற பெயர் கொண்ட இத் தொகுப்பின் ஆசிரியர் குழுவில் ஒருவராக **மு. நித்தியானந்தன்** அவர்கள் **கண்ணில் தெரியவில்லை வானம்—வித்தியாசத்தை நோக்கிச் சில குறிப்புக்கள்** என்று தொகுப்பின் முன்னுரையாக தொகுப்பைப்பற்றி எழுதி உள்ளார். கண்ணில் தெரியவில்லை வானம் என்று எதிர்மறை அர்த்தம் தரும் தலைப்பை ஏன் இட்டார்? பொதுவில் **யுகம் மாறும், இன்னுமொரு காலடி, கண்ணில் தெரியுது வானம்** என்று நம்பிக்கை தரும் தலைப்புக்கள் இடப்படுகிற சமயம் இப்படியொரு தலைப்பில் முன்னுரை ஒட்டிப்போகவில்லை.

போக, இத்தொகுப்பு நூல் அவசியம் யாரும் வைத்திருக்கவேண்டிய ஒன்று. வைத்திருக்க விரும்புகிறீர்களா? விலாசத்தையும் தொடர்புகொள்ள தொலைபேசி இலக்கத்தையும் தருகிறேன்.

R. Pathmanaba Iyer
TWAN (UK), 602, Romford Rd,
Manor Park, London E12 5AF, UK
TP: (0044) (0) 208478057

வழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வேயின் மேதினப் பேரணியில் பொங்குதமிழ் பேரெழுச்சி

கடந்த ஐந்து தசாப்தமாக நாட்டைச் சீரழித்துவரும் இனப்பூசலுக்கு அமைதிப் பேச்சுக்கள் மூலம் சமாதானத் தீர்வு காணலாம் என்பதைக் கடந்த பலவருடங்களாகத் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தி வந்ததை ஏற்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தில்




பேசமுன்வந்ததும், யுத்த நிறுத்தம் செய்து இருதரப்பும் புரிந்துணர்வு நடவடிக்கையில் ஒப்பமிட்டு நடைமுறைப்படுத்துவதும், இன்று உலக மக்களின் பெரும் கவனத்தை ஈர்த்துக்கொண்ட இந்நாளில் நடைபெற்று முடிவடைந்த மே தின ஊர்வலங்களில், சர்வதேசமெங்கும் வாழக்கூடிய தமிழ்மக்கள், புலிக்கொடி ஏந்தி பெருந்திரளாகக் கூடி வலம்வந்த நிகழ்வுகள் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

இந்தவகையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் மழையையும் பொருட்படுத்தாது எண்ணற்ற தமிழ் மக்கள் திரண்டு, உணர்வுப் பெருக்கோடு புலிக்கொடி பிடித்து பயணித்த ஊர்வலம், பார்வையாளர்களின் கவனத்தை ஈர்ந்ததோடு, கரகோச வரவேற்பையும் பெற்றது.

தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளே எனவும், எங்கள் பெருந்தலைவன் பிரபாகரனே எனவும், தமிழர் தாயகம்-தமிழ்த் தேசியம்-சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படை நிபந்தனைகளை வலியுறுத்தியும், புலிகளின்மேல் விதிக்கப்பட்ட தடையை விலக்கு என வற்புறுத்தியும் சுலோகங்களும், பாரிய அளவினாலான பதாகைகளும் தேசியத் தலைவரின் படங்களும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

தமிழரின் மரபுவழி ஆடல்களான பொய்க்கால் குதிரை ஆட்டம், காவடியாட்டம், எழுச்சிப்பறை முழக்கம் என்பனவும் இதில் வெகுசிறப்போடு இடம்பெற்றன.

நோர்வே நாட்டின் பேர்கன், துரோணியம், ஸ்ரவங்கள் ஆகிய நகரங்களிலும் இந்தப் பொங்குதமிழ் பேரெழுச்சி மேதின ஊர்வலங்கள் வெகுசிறப்பாக நடைபெற்றன.

சகல தமிழ் மக்களும், சகல தமிழ்க் கட்சிகளும் ஒரு தலைமையின் வழி நடத்தலின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள தற்போதைய நிலையில், நேற்றைய நாளின் நெடிய இருள் கடந்து, நெருக்குவாரச் சுருக்கின் பிடிப்பை உடைத்து, ஒடுக்குமுறைச் சிறையின் பீதியிலிருந்து மீண்டு, உலகின் ஒட்டுமொத்தமான பார்வை ஒளிக்கு வந்துள்ள ஈழத்தமிழர்கள் எடுத்த மேதின ஊர்வலங்களில், நோர்வேயில் நிகழ்ந்த பொங்குதமிழ் பேரெழுச்சி மேதின ஊர்வலங்கள் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கவையாகும்






மேற்படி நிகழ்வுகளில் தமிழர்களின் கலைபண்பாட்டு அரசியல் விழுமியங்களை விபரிக்கும் நொக்ஸ்மொழியிலான 'Notam' என்னும் நூல், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் வெளியிட்டு வைக்கப்பட்டது. மேற்படி நூலை ஆர்வத்தோடு பலரும் பெற்றுக்கொண்டனர்.

— ந. கிருஷ்ணா

# பாரிஸில் மாபெரும் மேதினப் பேரணி



பிரான்சின் பல முன்னணித் தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்திய மாபெரும் எழுச்சிப் பேரணியில் பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களும் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். இப்பேரணியானது பாரிசில் Republique எனும் இடத்தில் ஆரம்பமாகியது. இம்முறை பிரான்சில் இடம் பெற்ற சனாதிபதி தேர்தல் காரணமாக முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்பேரணியானது மிகப் பெரும் நிகழ்வாக அமைந்திருந்தது.

அவ்விடத்தில் பிரான்சு வாழ் தமிழ் மக்கள் தமிழீழத்தின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றிற்கு உலக அரங்கில் அங்கீகாரம் கோரும் சுலோகங்களுடன் இப்பேரணியில் கலந்திருந்தனர். இப்பேரணியில் தமிழீழத் தேசியத் தலைவரின் பெரிய படத்தினைத் தாங்கிய ஊர்தியும், பெரியளவிலான தமிழீழ தேசியக்கொடியும் எடுத்துச்செல்லப்பட்டது. இத்தினத்தில் தமிழீழ எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்பட்டன.

இம்முறை பிரான்சில் தேர்தல் முதற்சுற்றில் தீவிர இனவாதக் கடும் போக்காளர் கை ஓங்கி இருப்பது பிரெஞ்சு பல்லினமக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிலையில், பிரான்சின் தலைநகரான பாரிசில் மட்டும் சுமார் ஐந்து லட்சம் மக்கள் இந்நிகழ்வில் கலந்திருந்தனர். இந்த வழமைக்குமாறான மக்கள் வெள்ளத்தின் காரணமாகவும், போக்குவரத்தில் ஏற்பட்ட இடையூறு காரணமாகவும் தமிழீழ மக்களின் பேரணியினானது இறுதியிடத்தை சென்றடைய முடியாமல் குறிப்பிட்ட இடம் வரை சென்று முடிவுக்கு வந்தது.


லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்



சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலிட நிகழ்வுகள்

# சுவிசில் அன்னைபூபதி எழுச்சிவிழா

கடந்த 20.04.2002 சனியன்று சுவிசில் கிரபுண்டன் மாநிலத்தில், தியாகி அன்னை பூபதியின் 14 வது நினைவுநாள் எழுச்சி விழா தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்டது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட அன்னை பூபதியின் எழுச்சிவிழாவில், முதல் நிகழ்வாகத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, மண்மீட்புப்போரில் மரணித்த மாவீரர்களையும், பொதுமக்களையும் நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தியதோடு, சுவிசில் நடைபெறவுள்ள எழுச்சி விழாக்களில் மாவீரர்களின் திருவுருவப்படங்களை வைத்து வணங்குவதற்காக நினைவாலயம் அமைக்கப்பட்டது. அதை வடிவமைத்து உருவாக்கிய திரு. கந்தையா சிறீரங்கநாதன் அவர்கள் அதனைத் திரைநீக்கம் செய்து வைத்ததைத் தொடர்ந்து, தியாகி அன்னை




பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தமிழர் இல்ல பாடசாலை மாணவர்களும், மக்களும் அன்னையின் திருவுருவப்படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தினார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில், கலைபண்பாட்டுக் கழக இசைக் குழுவினரின் எழுச்சிகானங்கள், கிரபுண்டன் தமிழர் இல்ல மாணவ மாணவிகளின் எழுச்சி நடனம், பாட்டு, பேச்சு, வயலின் இசை, மகளிர் அணிசார்பில் பெண்கள் புனர்வாழ்வு பற்றிய பேச்சு, கலைபண்பாட்டுக்கழகக் கவிஞர்களின் போர்முரசம், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் பேச்சாளர் திரு. அல்பேட் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து தமிழர் இல்ல மாணவமாணவிகளின் நவீனமுறையிலான பட்டறை என்னும் நாடகமும் இடம்பெற்றன, கிரபுண்டன் வாழ் கலைஞர்களின் கதம்பம் என்னும் நிகழ்வோடு தேசியக்கொடி இறக்கப்பட்டு, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற தாரகமந்திரத்தோடு நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவேறின.

# பாரிசில் நடைபெற்ற சலங்கை பரதவிழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸ் வருடா வருடம் நடாத்தும் சலங்கை பரதவிழா மூன்றாவது தடவையாக 199 Bis Rue Saint Martin-Paris 75003ல் அமைந்துள்ள மண்டபத்தில் 05.05.2002 தாய் சேய் போசாக்குத் திட்டத்திற்காக நடைபெற்றது. இந்நிகழ்வைச் சரியாக மாலை 4.25 மணிக்கு அருட்திரு செபஸ்தியன் அடிகளார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து எமது மண்ணின் விடுதலைக்காக வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அமைதி வணக்கம் செலுத்தி சலங்கை பரத விழா ஆரம்பமானது. இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்த அருட்திரு செபஸ்தியன் அடிகளார் நிகழ்வை அலங்கரிக்கும் நடனக்கலைஞர்களையும், ஆசிரியர்களையும் வருகை தந்த மக்களையும் வாழ்த்தி ஆசியுரை வழங்கினார். பிரான்சில் உள்ள தமிழ்ச்சோலைப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் அனைத்தும் இணைந்துகொண்ட இவ்விழாவில் திரு. தயாளசிங்கம், திரு.அருள்மோகன், திருமதி கௌசல்யா தர்மகுலசிங்கம், திருமதி ரேணுகா சுரேஸ், திருமதி ராஜராஜேஸ்வரி பரிசோ, திருமதி சாரதா அற்புகுணராஜா, திருமதி வசந்தாதேவி ஜெயராஜா, திருமதி கௌசல்யா ஆனந்தராஜா, திருமதி கற்பகம் சேஷா, திருமதி தனுசா மகேந்திரன், திருமதி அனுஷா மணிவண்ணன், திருமதி அனுசியா சிறீசங்கர், செல்வி பிந்து ஜெயபாலன், செல்வி சுகந்தினி சுரேந்திரன், செல்வி அனுஜனா அருளழகன் ஆகிய பதினைந்து ஆசிரியர்களின் நெறியாழ்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் நடனக் கலைஞர்கள் 30 நடனங்களை வழங்கிச்சிறப்பித்தனர். இவர்களுடன் நடன ஆசிரியர் அருள்மோகன் அவர்களும் கலந்துகொண்டு சலங்கை 2002 பரத விழாவுக்கு மெருகூட்டினார். சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நடைபெற்ற இவ்விழா பார்வையாளர்களை மிகவும் வசப்படுத்தியது.

இவ்விழா நிகழ்ச்சித்தொகுப்பை TRT தமிழ்ஒலி அறிவிப்பாளர் அருள்மொழித்தேவன் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் நுழைவுச்சீட்டுக்கள் குலுக்கல் முறையில் நல்வாய்ப்புச்சீட்டாக தெரிவு செய்யப்பட்டு மூன்று பரிசுகளும் வழங்கப்பட்டன. 1வது பரிசிலக்கம் 590 (10 ஈரோ தனிநபர்) TTN பார்ப்பதற்கான டெக்கோடர், வழங்கியவர் அருள் சவுண்ட்ஸ் உரிமையாளர். 2வது பரிசிலக்கம் 615 (10 ஈரோ தனிநபர்) D V D டெக்கோடர், வழங்கியவர் சுதந்திரன் ரெலிக்கொம்மினிக்கேசன் உரிமையாளர். 3வது பரிசிலக்கம் 277( 15 ஈரோக்கள் குடும்பம்) ஒரு தங்க நாணயம், வழங்கியவர் விக்ரர் உணவக உரிமையாளர்.


அரங்கம் நிறைந்த பார்வையாளர்களுடன் பரதவிழா 9.30 மணிக்கு நிறைவுபெற்றது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
20.06.1925



ஆண்டவன் அடியில்
14.05.2001



எமது குடும்பத்தின் அருள் ஒளி விளக்கே
எங்கள் பாசத்தின் இனிய விளக்கே
எத்தனை உறவுகள் இருந்தாலும் அம்மா என்று
அன்புடன் அழைத்து மகிழ இன்று நீங்கள்
இல்லையே என்றாலும் எம் மனதில் என்றென்றும்
தெய்வமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்
எமதருமைத் தாயே உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிராத்திக்கும்
அன்பு பிள்ளைகள் அன்ரன் விக்டர் அருந்தி
சாள்ஸ் ஜெயந்தி
மற்றும் மருமக்கள் பேரப்பிள்ளைகள்

திருமதி செபஸ்ரியன்பிள்ளை திரேசம்மா

தகவல்:
விக்டர் (லண்டன்) - 07956280032
ஆனந்தி (சென்னை) - 6584268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணம்




## 2002

## தென்னாபிரிக்கா

இனவாத ஆட்சியாளர்களின் கரங்களில் சிக்குண்டு நீண்டகாலம் உலகத்தவரோடு தம்மை இணைத்துக்கொள்ள முடியாது தவித்தவர்கள்-விழித்தவர்கள். நெல்சன் மண்டேலா எனும் தீர்க்கதரிசியின் வழிகாட்டலினால் இன்று தமது பலம் என்ன என்பதை உலகிற்கு உணர்த்தி வருபவர்கள். ஆபிரிக்கப் பிராந்தியத்தின் கீழ் முனையில் இருப்பதாலோ என்னவோ முழு ஆபிரிக்கப் பிராந்ததியத்திற்கும் முனையாக இருக்கிறார்கள். வெள்ளை இன வெறியர்களின் இரும்புக்கரங்களில் இருந்து விடுபட்ட பின்னர் 1998ம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற பதினாறாவது உலகக்கிணண்ணத்திற்கு முதல் முறையாகத் தெரிவான இவர்கள் இம்முறையும் தமது நிலையை வலுப்படுத்தியுள்ளனர்.

இம்முறை முதலாவது குழுநிலை தெரிவுப் போட்டியில் லெசெந்தோவுடனான இருவழி ஆட்டங்களில் 2.0 - 1.0 என்னும் கோலடிப்படையில் வெற்றி பெற்று இராண்டாவது குழு நிலைதெரிவுப்போட்டியில் குழு E-இல் சிம்பாவே, வூர்கினபர்சோ, மலாவி ஆகிய நாடுகளுடான இருவழி ஆட்டங்களில் ஐந்தில் வெற்றியும், ஒன்றில் சமநிலையும் பெற்று பதினாலு புள்ளிகளுடன் தமது குழுவில் முதலிடத்தை வகிக்கும் இவர்கள் தென் கொரியா - ஜப்பானில் நடைபெறும் பதினேழாவது உலகக்கிண்ண இறுதிச் சுற்றிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

### குழு நிலைவிபரம்

| | | |
|---|---|---|
| தென்.ஆபிரிக்கா | - சிம்பாவே | 2-0, 2-1 |
| தென்.ஆபிரிக்கா | - வூர்கினாபர்சோ | 1-0 ,1-1 |
| தென்.ஆபிரிக்கா | - மலாவி | -2-0, 2-1 |

1952ம் ஆண்டு முதல் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகித்து வந்த இவர்கள் மூன்றில் இரண்டிற்கும் அதிகான கறுபப்பின மக்களை அடக்கி இனவாத ஆட்சி புரிந்து வந்தமையால் சர்வதே உலகத்தால் ஒதுக்கப்படட்டிருந்தனர். இக்காலப்பகுதியில் (1970 -91) சர்வதேச உதைபந்தாட்டம் சம்மேளனத்தினால் வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்நிலையில் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த வெள்ளை இனத்தவரான வோதா (Botta) சர்வதே அழுத்தங்களில் இருந்தும், பொருளாதார நெருக்குதலில்



இருந்தும் நாட்டைக்காப்பாற்றுவதற்காக சிறையில் இருந்த கறுப்பின மக்களின் ஏகதலைவரான நெல்சன் மண்டேலாவை 11- 02- 1990ம் ஆண்டு விடுதலை செய்தார். அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தில் கறுப்பின மக்கள் தமது அரசியல் சகவாழ்வில் சுதந்திரமாக ஈடுபடும் நிலையேற்பட்டது. அதனை அடுத்து 1992ம் ஆண்டு மீண்டும் சர்வதேச உதைபந்ததாட்ட சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றனர். நாற்பது கோடி மக்கள் தொகையைக்கொண்ட இந்நாட்டில் பத்து இலட்சத்து நாற்பதினாயிரம் வீரர்கள் உதைபந்தாட்டம் விளையாடும் அனுமதி பெற்றுள்ளனர். உலகத்தரப்பில் அறுநூற்று முப்பத்தொரு புள்ளிகளுடன் 33ம் இடத்தை வகிக்கின்றார்.

### ஆபிரிக்கா கிண்ணம்

1996ம் ஆண்டு தமது நாட்டில் நடத்திய போது பிராந்தியக்கிண்ணத்தை வெற்றிகொண்ட இவர்கள் 2002ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் கால் இறுதி ஆட்டத்தில் மாலியிடம் எதிர்பாராத தோல்வி அடைந்தனர். 1998ம் 2002ம் ஆண்டுகளில் இரண்டாம் சுற்றுவரை முன்னேறியிருந்தனர்.

### உலகக்கிண்ணம்

1998ம் ஆண்டு முதல்முறையாக உலகக்கிண்ண இறுதிச்சுற்றிற்கு தெரிவான இவர்கள் முதற் சுற்றிலேயே வெளியேற்றப்பட்டனர். இச்சுற்றில் பிரான்சிடம் தோல்வியும். டென்மார்க - சவுதி அரேபியா என்பவற்றுடனான போட்டியில் சமநிலையும் பெற்றிருந்தனர். இம்முறை மீண்டும் தகுதி பெற்றிருக்கும் இவர்கள், குழு B இல் ஸ்பெயின், பரகுவே, சுலவேனியா என்பவற்றுடன் குழு நிலையில் மோதவுள்ளனர்.

### பலம் (+)

அ. பெயர் குறிப்பிடும்படியான தாக்குதல் வீரர்கள் சிலர். உ.ம்:- வாற்லெற் நொம் வெற். மாசிங்கா.

ஆ.தாக்குதல் வீரர் வாற்லெற்றின் வேகமான முன்னேற்றத்திக்கு உறுதுணையாக இருக்கும் இடை நிலைவீரர்கள்.

இ. உயர் தேகவலுவுடைய பாதுகாப்பு வீரர்.

### பலவீனம்(–)

அ. விளையாட்டின் நுனுக்கங்களில் முன்னேற்றம் காணப்பட்டாலும் அது போதியளவு இல்லாமை.

ஆ.தமது பிராந்தியத்தில் வலுவான அணியாக இருந்தாலும். உலகளாவிய ரீதியில் அந்நிலையை இன்னமும் அடையாமை.

இ. அண்மைக்காலங்களில் சர்வதேச அளவிலான முன்னேற்றம் காணப்படாமை.

– *ஜே.ஜே*

## உலகக்கிண்ணம் செய்தித் துளிகள்

### செப் விலெற்றர் மீது துஸ்பிரயோக குற்றச்சாட்டு

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தலைவர் செப் விலெற்றர் (SEPP BLATTER ) இன் தலைமையின் மீது 500 மில்லியன் டொலர் துஸ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன உயர்மட்டக்குழு உறுப்பினரும். ஐரோப்பியச் சம்மேளனத் தலைவருமான லெனாற் ஜொகான்சன தலைமையிலான குழுவினரே இத் துஸ்பிரயோக சர்ச்சையை சுவிஸ் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்போவதாக அறிவித்துள்ளார். செப் விலெற்றர் தனது தலைவர் பதவியை ராஜினாமச் செய்துவிட்டதால் நீதிமன்றம் செல்வதைத் தவிர வேறுமார்க்கம் எதுவும் இல்லை என்று லெனாற் ஜொகான்சன் கூறியுள்ளார். சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உயர்மட்டக்குழுவில் அங்கம்வகிக்கும் இருபத்து நான்கு உறுப்பினர்களில் செயலாளர் மிசெல் சென் - ரபினென் (MICHEL ZEN - RUFFINEN) உட்பட பதினொரு உறுப்பினர்கள் இக் குற்றச்சாட்டிற்கு ஆதரவாக உள்ளனர். இன்னும் புதிய தலைவரிற்கான தேர்விற்கு இரண்டு வாரங்களே (29.05.02) உள்ள நிலையில் இந்நெருக்கடிநிலை செப் விலெற்றரிற்கு பின்னடைவை கொடுக்கலாம் என எதிர்பார்கப்படுகின்றது. 1998ம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற தலைவர் தேர்தலில் லெனாற் ஜொகான்சனை தற்போதைய தலைவரான செப் விலெற்றர் வெற்றிகொண்டார்.

### றொபேர்ரோ வஜியோ இத்தாலி அணியில் இல்லை

இத்தாலியின் பிரபல தாக்குதல் வீரரும், முன்னாள் ஐரோப்பாவின் சிறந்த வீரருமான றொபேர்ரோ வஜியோவின் தொடர்ச்சியான நான்காவது உலகக்கிண்ணத் தெரிவு எனும் கனவு கலைந்துவிட்டது. முழங்காலில் ஏற்பட்ட நோவின் காரணமாக கடந்தகாலங்களில் சிறந்தமுறையில் விளையாடமுடியாம்ல் இருந்த இவர் அண்மையில் சத்திரசிகிச்சை செய்துகொண்டார். முப்பத்தைந்து வயது நிரம்பிய இவர் நாட்டின் அணிக்குப் பலம் சேர்பார் என்று அண்மைக்காலங்களில் இத்தாலியின் ஊடகங்களும், ஆதரவாளர்களும், பயிற்றுனரான ஜியோவானி ரபற்றொனி (GIOVANNI) இற்கு அழுத்தம் கொடுத்து வந்தனர். வேகமும், திறமையும் நிரம்பிய வீரர்கள் தமது அணியை முழுமைப்படுத்துவதால் இவரிற்கு இடம்தர முடியாது இருப்பதாக பயிற்றுனர் தெரிவித்துள்ளார்.

### றிவல்டோவின் உலகக்கிண்ண சந்தேகம்

பிரேசில் அணியின் இயக்கியாக திகழும் றிவால்டோவின் உலகக்கிண்ண பிரசன்னம் சந்தேகத்திற்குரியதாக உள்ளது. வலது முழங்காலில் ஏற்பட்ட நோவின் காரணமாக அண்மைக் காலங்களில் தேசிய அணியிலும் வார்சலோனா அணியிலும் விளையாடமுடியாத நிலையில் இருந்துவரும் இவரின் இடத்தை நிரப்புவது கடினமே இது இங்கிலாந்து அணியின் டேவிட் வெக்கத்தின் நிலையை ஒத்ததாகும். அண்மையில் பிரான்சின் தங்கப்பந்து விருது பெற்ற இவர் விளையாட்டு செய்திப் பத்திரிகைக்கு பேட்டி அளிக்கையில் நான் இடது காலால் பந்தை உதைக்கும் போது வலது காலே அழுத்தமான சக்தியை கொடுப்பது - அவ் வலது காலின் முழங்கால் நோவிற்குட்பட்டிருப்பது மிகுந்த வலியைக் கொடுக்கின்றது. என்று இருபத்தாறு வயதுடைய இடைநிலை ஆட்டக்காரரான ரிவால்டோ கூறியுள்ளார். இது பற்றிக் கருத்துக்கூறிய பார்சலோனா அணியின் பிரதம மருத்துவர் ரிட்சாட் புறானா ரிவால்டோ உலகக்கிண்ணப் போட்டிகள் அனைத்தையும் பூர்த்தி செய்வாரா என்பது சந்தேகமே என்றார்.

### நிக்கி வுற்

இங்கிலாந்து அணியினதும், மன்செஸ்ரர் யுனைரெட்டினதும் இடைநிலைவீரரான நிக்கிவுற் கடந்த திங்களன்று ஆர்சனல் அணிக்கு எதிரான ஆட்டத்திற்கான பயிற்சியின் போது காலில் காயம் ஏற்பட்டு இரண்டு வாரங்களிற்கு ஓய்வு நிலையில் இருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. நிக்கி வுற் உலகக்கிண்ண அணியில் இடம் பெறுவார் என்று மன்செஸ்ரர் யுனைரெட் அணியின் பயிற்றுனர் அலெக்ஸ் பெர்செென் கூறியுள்ளார்.

டேவிட் வெக்கமின் பாத எலும்பு முறிவினால் சிந்தனைக்கு உள்ளாகியிருக்கும் தேசிய அணியின் பயிற்றுனரான சுவீடன் நாட்டைச் சேர்ந்த செவன் கொறான் எறிக்சன் 09.05.2002 அன்று தனது அணியை அறிவிக்க இருந்த வேளையில் நிக்கிவுற்றின் நிலை பலத்த சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

### றொமாறியோ

1994ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற பதினைந்தாவது உலகக்கிண்ண வெற்றியின் நாயகன் எனக் கருதப்பட்ட பிரேசில் நாட்டைச்சேர்ந்த றொமாரியோ இம்முறை உலகக்கிண்ண அணியில் இடம்பெறவில்லை. இது குறித்து கருத்துத் தெரிவித்த றொமாரியோ பயிற்றுனர் லுயிஸ் பிலிப்ஸ்கொலாறி ஏன் இந்த முடிவை எடுத்தார் என்று தனக்குப் புரியவில்லை என்றும் இச் செயலானது தனது உதைபந்தாட்டப் புகழிற்கும் பொது வாழ்விற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டது என்றும் கூறியுள்ளதுடன் கடந்த அமெரிக்கக்கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளாமையே காரணம் என்று கூறும் பயிற்றுனர் அப் போட்டியில் பங்குபற்றாத ஏனைய சில வீரர்களை மீண்டும் தெரிவு செய்தது ஏன்? என்ற வினாவையும் தொடுத்துள்ளார். இதனையே பெரும்பாலான ஊடகங்களும் பிரேசிலின் உதைபந்தாட்டச் சம்மேளனத்திடம் முன்வைத்துள்ளன.

– *ஜே.ஜே*

Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

★ இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
★ உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா
உணவகங்கள்



இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும்

Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் இருந்து தமிழ் இளைஞர் நாடுகடத்தல்

(14.05.02)
ஜேர்மனியில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தருப்பி அனுப்பப் பட்டுள்ளார். திருகோணமலையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் இராஜரத்தினம் என்ற 26 வயது இளைஞரே அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் திங்களன்று மாலை ஜேர்மனியின் டுசில்டோப் விமான நிலையத்தில் வைத்து கொழும்பிறகு திருப்பி அனுப் பட்டுள்ளார்.

1997ம் ஆண்டு முதல் ஜேர்மனியின் எசன் நகரில் வசித்து வந்த இவ் இளைஞர், மோஸ் நகர தடுப்பு முகாமில் திருப்பி அனுப் பவதற்காக தடுத்து வைக்கப் பட்டிருந்தார். இவ் இளைஞருடன் இம் முகாமில் மேலும் மூன்று இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வீ.ஆர்.)

(32ம் பக்கத் தொடர்ச்சி)
## தமிழ் மக்களுக்கு....

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளார்.

தமிழ்ப் பிரதேசங்களில் எதிரியின் ஆக்கிரமிப்பு ஏற்பட்ட வேளையில் கைகொடுத்த தென்மராட்சி மண் இன்று பொலிவிழந்து பாலைவனமாக அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதைக் கண்டு வார்த்தைகளால் சொல்லமுடியாத அளவுக்கு வேதனையடைகின்றோம். இவற்றினை மீளக் கட்டியெழுப்புவதற்கு எம்மிடமிருந்து பெருநிதியை மக்கள் எதிர்பார்க்கலாம். ஆனால், இந்தப் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யக்கூடியளவு நிதி எம்மிடமில்லை. ஆனால், இடைக்கால நிர்வாகப் பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டால் இங்குள்ள புத்தி ஜீவிகள், கல்விமான்கள் ஆகியோரின் உதவியுடனும் ஆலோசனைகளுடனும் புதிய கட்டமைப்புக்குள் உங்கள் மூலமாகவே புனரமைப்புச் செய்வோம். விடுதலைப் புலிகளையும் மக்களையும் எக்காலமும் பிரிக்கமுடியாத உறவுகள் வளர்ந்துள்ளதை பெரும் சுமைகளுக்கும் மத்தியிலும் எம்மை வரவேற்க முகமாலைக்கு வந்து சேர்ந்த மக்கள் நிரூபித்துவிட்டனர் என்றார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)
## புலிகள் படையினர்...

பினரும் அடிக்கடி உரையாடி பரஸ்பரம் நட்புறவை வளர்க்க முடியும். அதைக் கட்டியெழுப் பலாம் என்று நாம் நம்புகிறோம். உண்மையில், கடந்த வியாழக்கிழமை அந்த முடிவை நோக்கி முதலாவது அடியை நாம் எடுத்து வைத்தோம். பிரிகேட் தளபதிகள் வவுனியாவில் ஒன்று கூடி கலந்துரையாடினார்கள். இரண்டு தரப்புக்களுக்குமிடையே தொலைத்தொடர்புக்கு பொதுவான அலைவரிசை ஒன்றை நாம் ஒதுக்கவுள்ளோம். அதன்மூலம் இரண்டு தரப்பினரும் சந்திக்கும் பொழுது, விவகாரங்கள் தொடர்பாக பேசும் பொழுது, அவர்களுக்கிடையே நம்பிக்கை ஏற்படும். அப்படி பரஸ்பர நம்பிக்கையுடன் ஒத்துப் போகும் நிலை வரும்போது, அப்படியான போக்குவரத்தும் நடக்கும் என்று நான் கருதுகிறேன் என்று கூறினார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)
## உடன்படிக்கையை....

மேற்பட்ட மீனவர்களை காலை 10.30 மணியளவில் வழிமறித்த கடற்படையினர் தகாத வார்த்தைகள் பேசி, அடித்து, துன்புறுத்தி கடலில் பாயச் சொல்லியிருக்கிறார்கள். முல்லைத்தீவுக்கு 15 கி.மீ. தூரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது. மீனவர்களில் வயதுபோனவர்களும் இருந்துள்ளனர். இவர்களைக் கடலில் பாய்ந்து நீச்சலடிக்கச் சொன்னது கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று கூறப்படுகின்றது. படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என்று அஞ்சிய மீனவர்கள் ஆழ்கடலில் பாய்ந்து நீச்சலடித்துள்ளனர். நீச்சல் தெரியாதவர்கள் கூட பயத்தின் காரணமாக கடலில் குதித்துள்ளனர். இவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கையில் சக மீனவர்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். 10ம் திகதி திருமலையை வந்து சேர்ந்த மீனவர்கள், தமிழ் மீனவர் அமையத்தின் ஊடாக திருகோணமலை கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் வில்வராஜா ஜெயக்காந்தன்(37) என்ற மீனவர் திருமலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடன் மீன் பிடிக்கச்சென்ற ஏனைய மீனவர்கள் காயமடைந்த மீனவரை கரைக்கு காப்பாற்றி வந்து திருமலை அரசினர் வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளனர்.

### தவறு

கடந்த 38ம் முழக்க ஈழமுரசின் புகலிடச் செய்தியில், ஜேர்மனியில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு தின நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றியது மாவீரர் சீவரட்ணம் கலைஜீவனின் சகோதரர் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம். (ஆ—ர்.)

# புலிகள் மீது பழியைச் சுமத்த சில தீய சக்திகள் முனைப்பு

நோர்வேயின் அனுசரணையுடன் மெற்கொள்ளப்பட்டுவரும் சமாதானச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் மீது வீண் பழியைப் போட்டு சமாதானத்தைக் குழப்ப சில சக்திகள் முயன்று வருவதாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் விசு குற்றம் சாட்டியுள்ளார். நேற்றுப் பகல் வந்தாறு மூலை சிறீ மகாவிஷ்ணு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச வர்த்தக சங்கப் பிரதி நிதிகளுடனான கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் படைக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து அரசியற் பணிகளை மேற்கொண்டுள்ளோம். போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கல்வி, பொருளாதாரம் என்பவற்றை மீளக் கட்டியெழுப்புவதே எமது பணியாகும். இப்பணிகளை மேற்கொள்ளும் போது நாம் எவ்வளோ சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எமது நடவடிக்கைகளில் சேறு பூசி ஒப்பந்த மீறல்களாகப் புகார் செய்வதில் சில சக்திகள் முயற்சிசெய்து வருகின்றன. இதில் நாம் விழிப்பாக இருக்கின்றோம். மக்களும் விழிப்பாய் இருக்க வேண்டும்.

அதேசமயம், படைத் தரப்பினரின் நடவடிக்கைகளை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்பினால் அவை ஒரு பட்டியலாக அமையும். ஆனால் எமது தலைவரின் விருப்பம் விடுதலைப் புலிகளால் பேச்சுவார்த்தை முறிவடையக் காரணமாக அமையக் கூடாது என்பதே. எனவே நாம் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் இருக்கின்றோம். இதேவேளை, நாம் பலமாக இருக்கிறோம். எமது பலமே போராட்டத்தின் பலமாகும். நாம் பலத்தை இழக்கக்கூடாது அதற்காகவே நாம் போராளிகளை இணைத்துக் கொள்கின்றோம். எமது பலம் அதிகரித்தால் தான் விரைவில் நாம் வெற்றிபெற முடியும். இவ்வாறு தனது உரையில் கூறியிருந்தார்.

## பேச்சு முன் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ரணில் பயணம்

(13.05.02)
சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் விளக்கம் அளிப்பதற்கும் இது தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இம்மாத இறுதியில் விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

இலண்டனில் பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயரையும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் றொமானோ போடியையும் பிரதமர் ரணில் சந்திக்கவிருக்கின்றார்.

அத்துடன், அங்கிருந்து கொழும்பு திரும்பிய பின்னர், அடுத்த மாதம் 12ம் திகதி இந்தியாவுக்கு சென்று, இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார். விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் பிரிட்டன், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் ஆலோசனையைப் பெறவே பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

## புலிகள் அரசை ஏமாற்றவில்லை!

(14.05.02)
தற்போதைய சமாதான முயற்சிகளின்போது, எந்தவொரு கட்டத்திலும் அரசு விடுதலைப் புலிகளால் ஏமாற்றப்படவில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் மிலிந்த மொறகொட. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கணக்காளர் முகாமைத்துவக் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)
## சமாதானத்திற்கு...

2. வடக்கு கிழக்கில் சிங்களவர்களை மீண்டும் குடியேற்றுதல்

3. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை நிராகரித்தல்

4. புலிகள் இயக்கத் தடையை நீக்காதிருத்தல்

5. இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்காதிருத்தல்

ஆகிய ஐந்து விடயங்கள் அடங்கியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு இதனை அமைப்பு ஐந்து பெரும் கொள்கைகளாகக் கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)
## புலிகள் தமிழர் கூட்...

எஸ்.ரகுநாதன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இச் சந்திப்பின்போது பின்வரும் விடயங்கள் முக்கிய முடிவுகளாக எடுக்கப்பட்டன.

- கண்டி வீதியை 24 மணி நேரமும் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்குப் புலிகள் தயாராக இருக்கின்றனர். ஆனால், அதற்கு அரசுத்தரப்பு தயக்கம் காட்டுகின்றது. இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

- தீவகத்தில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

- புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ள சரத்துக்களை முறைப்படி நடைமுறைப்படுத்தும்படி அரசுக்கு வேண்டுகோள் விடுப்பது.

- சிறைச்சாலைகளிலுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிப்பது குறித்து நடவடிக்கை எடுப்பது.

- கோயில்கள், பாடசாலைகளில் உள்ள படையினரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பது.

- கடற்படையினரின் அத்துமீறல்கள் குறித்து பிரதமருக்கு முறையிட்டு நடவடிக்கை எடுப்பது.

- வடக்கே வரும் சிங்கள மக்களுக்கு தெருக்கூத்து, சிங்களப் பிரசுரங்கள் மூலம் தமிழ் மக்களின் நிலையை விளக்குவது.

- உடன்பாட்டில் உள்ள விடயங்களை மக்களுக்கு விளக்குதல். மாதம் ஒரு தடவை கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் புலிகளும் சந்தித்துப் பேசுவது.

இதேவேளை, புரிந்துணர்வு உடன்பாட்டை முறையாக அமுல்செய்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு எதிர்வரும் 21ம் திகதி பேச்சு நடத்த இருக்கின்றது. இந்தப் பேச்சுக்களின் போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, புலிகள் மீதான தடையை நீக்குவது உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவிருப்பதாகத் தெரிகின்றது. அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் ஆகியோரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்வர்.

இங்கே ! இப்போதே !! ஆரம்பமாகி விட்டது SALE
ஓவியா ENTERTAINMENT
3 DVD For ƒ 34.95 முதல் ~~39.80~~
3 video For ƒ 13.95 முதல் ~~18.10~~
3 VCD (Songs) for ƒ12.95 முதல் ~~15.10~~
3 Song CD For ƒ 11.95 முதல் ~~13.30~~
3 Isaithenral For ƒ 18.95 முதல் ~~21.10~~
ஓவியா ENTERTAINMENT
14 Ealing Road
Wembley, Hao 4TL
Tel: 02087953003 www.oviyavideo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# தமிழ் மக்களுக்குக் கொடுமை இழைக்கப்பட்டால் புலிகள் போராடத் தயங்கமாட்டார்கள்

## தென்மராட்சி அலுவலகத் திறப்பு விழாவில் பாப்பா

(12.05.02)

சமாதானம் ஏற்படுமா அல்லது மீண்டும் யுத்தம் ஆரம்பிக்குமா என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பெரிதாக காணப்படுகின்றது. மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம் விடுதலைப் புலிகளுக்குக் கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகள் பலமிழந்துவிட்டதாகக் கருதி தமிழ் மக்களுக்கு மீண்டும் கொடுமையை இழைக்க சிங்கள அரசு முற்பட்டால் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராட விடுதலைப் புலிகள் தயங்கமாட்டார்கள். இவ்வாறு அரசியல் துறையின் தென்மராட்சி அலுவலகத் திறப்பு விழாவில் உரையாற்றிய புலிகள் இயக்கப் பிரமுகர் பாப்பா தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறுகையிவல், நமது தேசியத் தலைவர் தமது மாவீரர்தின உரையில் நாடாளுமன்றத் தேர்தலில் சமாதானமா, யுத்தமா தேவையென மக்கள் தீர்மானிக்கட்டுமென கூறியிருந்தார். தலைவர் உரைக்கு மதிப்பளித்த தென்னிலங்கை மக்களும் தமிழ் மக்களும் சமாதானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். நாடாளுமன்றில் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை விரும்பிக் கைநீட்டிய போது அதனைத் தட்டிவிட தலைவர் விரும்பவில்லை. சமாதானத்தில் நூறுவீத நம்பிக்கை வைத்தே தேசியத் தலைவர்

(☞ 31ம் பக்கம்)

## சமாதானத்துக்கு எதிராக 5 பிரகடனங்கள்

(13.05.02)

சமாதான்த்திற்கு எதிரான ஐந்து பிரகடனங்களை வெளியிடுவதற்கு சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் அழைப்பாளரான மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தன இது குறித்து தெரிவித்துள்ளார்.

நாளை 14ம் திகதி அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி அருகே இடம்பெறவுள்ள பூஜையின் பின்னர் இந்தப் பிரகடனம் வெளியிடப்படும் என்று அவர் கூறியுள்ளார். இப்பிரகடனத்தில்,

1. வடக்கு - கிழகில் வாழ்ந்த சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

(☞ 31ம் பக்கம்)

## உடன்படிக்கையை தொடர்ந்து மீறிவரும் சிறீலங்கா கடற்படை

### 35 மீனவர்களை ஆழ்கடலில் குதிக்கச் செய்தனர்

(13.05.02)

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு மூன்று மாதங்களை எட்டும் நிலையில் சிறீலங்கா கடற்படையின் நடவடிக்கைகள் தொடர்ந்து உடன்படிக்கையை மீறவதாக அமைந்து வருகின்றன. வாகரையில் தாக்குதலை மேற்கொண்ட படையினர் தற்போது கடற்பிரதேசங்கள் எங்கும் மீனிவர்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

திருமலையில் கரையோர மற்றும் கடற்பகுதியில் கடற்படையினரின் அடாவடித்தனம் தொடர்ந்து வருகிறது. கடந்த 9ம் திகதி திருகோணமலை, திருக்கடலூர், 10ம் குறிச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்க முல்லைத்தீவு கடற்பரப்பை நோக்கி 7 ரோலர் படகுகளில் சென்ற 35ற்கு

(☞ 31ம் பக்கம்)

### புலிகள் - தமிழர் கூட்டமைப்பு இணைந்து

## தெற்கு இனவாத சக்திகளைக்கு எதிராக நடவடிக்கை

(12.05.02)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக தெற்கில் கிளம்பியுள்ள இனவாத சக்திகளின் செயற்பாடுகளைக் கண்டித்து வடக்கு — கிழக்கு முழுவதும் எதிர்ப்பு ஆர்பாட்டப் பேரணிகளையும், கூட்டங்களையும் பெருமெடுப்பில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ள்து. விடுதலைப் புலிகளும் தமிழ்க்கட்சி கூட்டமைப்பினரும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுபதமிழ்ச்செல்வனை தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் வன்னியில் நேற்று சனிக்கிழமை சந்தித்துப் பேசிய சமயம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் நண்பகல் ஒரு மணி வரை இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் தொல்காப்பியன் ஆகியோரும் கூட்டமைப்பின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் இரா.சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ் அணி) பிரமுகர்களான சிவசக்தி ஆனந்தன்,

(☞ 31ம் பக்கம்)

## புலிகள் - படையினர் உரையாட தனியான தொலைத் தொடர்பு வசதி

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறுகிறார்

(13.05.02)

சிறீலங்காப் படையினரும் விடுதலைப் புலிகளும் நேரடியாகத் தொடர்புகொண்டு உரையாடுவதற்கு வசதியாகப் பொதுவான தொலைத் தொடர்பு அலைவரிசை ஒன்றை இராணுவம் ஒதுக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ கூறியுள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து நீண்ட நாள்கள் கடந்துவிட்ட பிறகும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக இன்னமும் படையினர் பயணம் செய்யாமல் இருப்பது ஏன் என்று சர்வதேச ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், படையினருக்கும் புலிகளுக்கும் இடையே முன்னர் நீண்டகாலமாக முரண்பட்ட நிலை - மோதல் நிலை நிலவியது. எனவே, இரண்டு தரப்புக்களுக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வழிவகை இருக்கிறது. அதைக் கடைப் பிடித்தாக வேண்டும். இதன்மூலம் இரு தரப்

(☞ 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org